ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூன் 3, 2004 | புரட்சி 3 | முழக்கம் 21 | விலை : ரூ.2.50

# ‘ஜென்மபூமிகளில்’ காவிப்படை படுதோல்வி!

சங்பரிவாரங்கள் ‘ஜென்மபூமி களாக’ அறிவித்த பகுதிகளில் எல்லாம் பா.ஜ.க. கடும்தோல்வியைத் தழுவி யிருக்கிறது. மதுராவில் “கிருஷ்ணன்” பிறந்த இடம் என்று கூறி அங்கே கிருஷ்ணன் தேரை ஓட்டுவதுபோல ஒரு சிலையையும் கோட்டை மதிலைப் போல் சுவர்களையும் எழுப்பியிருக் கிறது சங்பரிவார். அருகே உள்ள மசூதி இருக்கும் பகுதியில் தான் கிருஷ்ணன் பிறந்ததாகக் கதை பரப்பி வரு கிறார்கள். இந்தக் கோட்டை மதிலை யும், கிருஷ்ணன் சிலையையும் பார்த் தால் - மதுராவே இந்துக்களின் கோட்டை என்பதுபோல் மிரள வைக்கும். ஆனால், மதுரா மக்கள் சங் பரிவார்களின் இந்துமத வெறி நடவடிக்கைகளை அங்கீகரிக்க வில்லை என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டிவிட்டன.

கடந்த 3 முறையாக இத் தொகுதியில் வெற்றி பெற்று வந்த பா.ஜ.க. வேட்பாளர் தேஜ்பீர் சிங் என்பவர் இம்முறை போட்டியிட்டு படுதோல்வி அடைந்தார். காங்கிரஸ் வேட்பாளர் மன்வேந்திராசிங் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இரண்டாவது இடத்தில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளரும், 3வது இடத்தில் சமாஜ்வாடி கட்சி வேட்பாளரும் வந்தனர். பா.ஜ.க. வேட்பாளர் நான்காவது இடத்துக்குத் தான் வந்தார். அதே போல் அயோத்தியா, காசி தொகுதிகளிலும், பா.ஜ.க. தோல்வி அடைந்தது. பா.ஜ.க.வின் ‘தீவிரவாதிகள்’ பலரும் தேர்தலில் மண்ணைக் கவ்வினர். விசுவ இந்து பரிஷத்திலிருந்து பா.ஜ.க.வுக்கு வந்த முரளி மனோகர் ஜோஷி, வினய் கட்டியார், ராம்விலாஸ் வேதாந்தி, சுவாமி சின்மயானந்த் ஆகியோர் படுதோல்வி அடைந்தனர். உ.பி. பா.ஜ.க. தலைவரும், தீவிர இந்துத்துவ வாதியுமான வினய்கட்டியார் ‘குர்மி’ என்ற சமூகத்தைச் சார்ந்தவர். தனது சாதியினர் அதிகமுள்ள லட்சுமிபூர் கேரி தொகுதிக்கு மாறிப் போட்டி யிட்டும், இவர் மூன்றாவது இடத்துக் குத் தான் வர முடிந்தது. ஆனாலும்கூட இந்துத்துவா கொள்கைகளை பா.ஜ.க. கைவிட்ட தால் தான் பா.ஜ.க. தோல்வி அடைந்தது என்கிறார் கட்டியார். ராம்விலாஸ் வேதாந்தி என்ற அயோத்தி விசுவ இந்து பரிஷத் தலைவர் அமேதி தொகுதியில் போட்டியிட்டு, ராகுல் காந்தியிடம் டெப்பாசிட்டைப் பறி கொடுத்தார். உ.பி.யில் வாஜ்பாய் பேசிய தேர்தல் கூட்டங்களில் - முஸ்லீம்கள், பா.ஜ.க. வுக்கு ஓட்டு போடாவிட்டாலும், காங்கிரசுக்குப் போட வேண்டாம்; சமாஜ்வாடி கட்சிக்குப் போடுங்கள் என்று பிரச்சாரம் செய்தார். முஸ்லீம்கள் அதிகம் வாழும் பகுதிகளில் - இந்துக்கள் ஓட்டுகளைக் கவர, மோடியைப் பிரச்சாரத்துக்கு அழைத்து வந்தது பா.ஜ.க; ஆனால் எல்லா தந்திரங்களும் படுதோல்வி அடைந்துவிட்டன. ●

## ஒரிசாவில் “அன்னியர்” கிளாடிஸ் அருந்தொண்டு

மதவெறியர்களின் ‘அன்னியர்’ எனும் வெறுப்புப் பிரச்சாரத்தில் - குடும்பத்தையே பலி கொடுத்தார் ஆஸ்திரேலியா பெண். அவரது மனித நேயப் பணி தொடருகிறது!

ஒரிசாவில் சங்பரிவார் கும்பலால் எரித்துக் கொல்லப்பட்ட டாக்டர் ஸ்டெயின்ஸ் - அவரது இரண்டு மகன்கள் பிலிப், திமோத்தி; அவர் ஆஸ்திரேலியாவிலிருந்து - பழங்குடி மக்களுக்கு மருத்துவ சேவை செய்ய வந்தவர்; அவரது மனைவி கிளேடி ஸ்டெயின் - கணவர், மகன்களைப் பறிகொடுத்த பிறகும், அதே பகுதில் தங்கி கணவர் விட்டுச் சென்ற மருத்துவ சேவையைத் தொடர்ந்து வருகிறார். பாரிப்பதா எனுமிடத்தில் உள்ள தொழுநோய் மருத்துவமனை யில் இப்போதும் தொண்டாற்றி வரும் கிளாடிஸ், வடக்கு ஒரிசாப்பகுதி மக்களால் மிகவும் மதிக்கப்படுகிறவர். “1987-ல் நிறுவப்பட்ட மருத்துவமனை இது. கணவர் மறைவுக்குப் பிறகு நான் இங்கேயே பணியைத் தொடருகிறேன். நான் என்னுடைய மக்களிடமே வாழ்வது போலவே உணருகிறேன். சமுதாயத்துக்கு சேவை செய்வதே எனது மதம்” என்று கூறுகிறார் கிளாடிஸ்.

தனது கணவர் விரும்பிய படி - தொழுநோயாளிகளுக்காக, பெரிய மருத்துவமனை ஒன்றை கட்டி வரு கிறார். மதவெறியர்களின் நெருப்புக் குப் பலியாகாமல் உயிர் பிழைத்த அவரது ஒரே மகள் ஈஸ்தர் மருத்துவக் கல்லூரியில் படித்து வருகிறார். 1983 ஆம் ஆண்டில் ஒரிசாவில் ஸ்டெ யின்சை சந்தித்த போது அவரை விரும்பி 1983-ல் அவரை திருமணம் செய்து கொண்டார் கிளேடிஸ்.

## சோனியாவை எதிர்க்கும் ‘இந்தியப் பார்ப்பனியம்’



பார்ப்பனர்களின் இன-வகுப்பு வாதங்கள் இந்தியாவில் ஆழமாகவே வேரூன்றியிருக்கின்றன. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜின்னாவை, காந்தி பரிந்துரைத்தபோது, இந்துக்கள் அதிகம் வாழும் நாட்டில் ஒரு முஸ்லீம் பிரதமராவதா என்று, பட்டேல் எதிர்த்தார் நேரு பிரதமரானார். இன்று அவரது குடும்பத்துக்கு எதிராகவே இனவாதம் எழுந்துள்ளது. சோனியா அன்னியர் என்ற வாதம் சட்டத்துக்கு எதிரானது என்றாலும், இந்தியாவின் பார்ப்பன உயர்சாதி சிந்தனை அப்படித்தான் இருக்கிறது. சோனியா பிரதமராவதைத்தடுத்து நிறுத்துமாறு சன்யாசி என்று கூறிக் கொள்ளும் உமாபாரதியும், சுஜ்மாவும் இனவாதம் பேசுகிறார்கள். இந்தியாவில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் பிரதமராக வரும் வாய்ப்பை மொரார்ஜியும், சரண்சிங்கும் தடுத்தார்கள். “கீழ்சாதி சாமார் ஒருவர் இந்த நாட்டில் பிரதமராக முடியாது என்ற புரிதலோடு நான் சாகப் போகிறேன்” என்று வேதனையோடு கூறினார் ஜெகஜீவன்ராம்.

முகலாயர் ஆட்சியானாலும், பிரிட்டிஷார் ஆட்சியானாலும் - இதே பார்ப்பன உயர்சாதியினர் தான் அவர்களை வரவேற்று ஏற்றுக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களை அடிமைப்படுத்தினார்கள். 1942-ல் சுதந்திரப் போராட்ட வீரர்களைக் காட்டி கொடுத்த மேல்சாதிக்காரர் (வாஜ்பாய்) பிரதமராகவே வர முடிந்தது.

தென்னாப்பிரிக்காவில் நிறவெறி ஆட்சி நடந்தபோது - அங்கே வாழ்ந்த இந்தியர்கள் கருப்பர்களுக்கு எதிராக வெள்ளையர் பக்கம் தான் நின்றார்கள். ஒரு சில தலைவர்கள் மட்டுமே கருப்பர்களுக்காக குரல் கொடுத்தார்கள். முபோங்கேனி நெகிமா என்ற தென்னாப்பிரிக்க பாடலாசிரியர், இந்தியர்களின் நிறவெறியைக் கண்டித்து ‘சுலு’ மொழியில் எழுதிய பாடல் பிரபலமாக கறுப்பர்கள் பகுதியில் ஒலித்து. ஆனாலும் மண்டேலா மிகவும் பெருந்தன்மையோடு - அந்த கவிஞரை மன்னிப்புக் கேட்க வைத்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தலித் பத்திரிகையாளர் தேவை என்று, ஒரு நண்பர்வந்தார். டெல்லி பத்திரிகையாளர் சங்கத்துக்குச் சென்று, 1996-ல் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர் பட்டியலைப் பார்த்தோம். 684 பத்திரிகையாளர்களில் 454 பேர் பெயருக்குப் பின்னால் சாதியைப் போட்டிருந்தனர். அதில் ஒருவர் கூட தலித் இல்லை. எஞ்சியுள்ள 232 பேர்களைப் பற்றி விசாரித்தபோது, அதிலும் ஒருவர்கூட தலித் இல்லை என்பது தெரிய வந்தது. இந்தியாவின் பிரதமராக யார் வரவேண்டும்? யார் வருவார்கள் என்பதை எல்லாம் இவர்களே எழுதுகிறார்கள். இவர்களிடமிருந்து நாம் பார்ப்பன இன பாகுபாட்டைத் தவிர வேறு எதை எதிர் பார்க்க முடியும்?

வாஜ்பாய் பதவியிலிருந்து விடைபெறும் பேச்சின்போது - இதே பத்திரிகையாளர்களும் காமிராக்காரர்களும், காந்தி படத்துக்கு பக்கத்தில் நின்று அவர் பேசுவதைக் காட்டுகிறார்கள். அதற்குப் பக்கத்திலேயே அவர் மாட்டி வைத்துள்ள ‘இந்து’ கடவுள் படத்தைக் காட்டவில்லை. ஆனால் ஆந்திர முதல்வர் ராஜசேகர் ரெட்டி முதலமைச்சரானவுடன், அவர் ‘மதம் மாறிய கிறிஸ்தவர்’ என்பதைக் காட்டுவதற்காக - அவர் வீட்டில் மாட்டியுள்ள ஏசு கிறிஸ்துவின் படத்தையும் சேர்த்துக் காட்டுகிறார்கள். மோடி - தேர்தலில் முறைகேடு செய்ததை - தேர்தல் ஆணையாளர் லிங்டோ, சுட்டிக்காட்டியபோது - அவர் கிறிஸ்தவர் என்பதால் அப்படிக் கூறுகிறார் என்றார் மோடி. இந்திய பார்ப்பன மேல்சாதி உணர்வே இப்படித்தான் - வெறுப்பையும், வகுப்பு வாதத்தையும் கொண்டிருக்கிறது.

**மூத்தப் பத்திரிகையாளர் ஜவீத் நக்வி கட்டுரையிலிருந்து**

## பெண்களை இழிவுபடுத்தும் சுஷ்மா-உமாபாரதி

இந்து பார்ப்பனியம் - பெண்களை - மனிதர்களாகவே அங்கீகரிக்க மறுக்கிறது. கணவன் இறந்து விட்டால், மனைவியை கணவனோடு சேர்த்து உயிரோடு எரிக் கும் ‘சதி’ என்ற சமூகக் கொடுமையை பார்ப்பனர்கள் அரங்கேற்றி வந்தார்கள். பின்னர், பிரிட்டிஷ் ஆட்சியில் அது தடை செய்யப்பட்டது. ஆனாலும், கணவனை இழந்த பெண், பூ, பொட்டு அணியாமல், மொட்டை அடித்து, வெள்ளைப் புடவை உடுத்தி, உணவுக் கட்டுப்பாடு களோடு, சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளா கும் பெண்ணாக வாழ வேண்டும் என்ற நிலையை உருவாக்கி விட்டார்கள். சங் பரிவார் கூட்டம் அந்தக் கொடூரமான - மனித விரோதக் கலாச்சாரத்தை, இன்னும் புனிதப்படுத்துகிறது.

சோனியா பிரதமராக பதவி ஏற்றால், மொட்டை அடித்துக் கொண்டு, வெள்ளைப் புடவை கட்டிக் கொண்டு, தரையில் படுத்து, தானியங்களை மட் ஷடுமே சாப்பிட்டுக் கொண்டு, ‘விதவை யாக’ மாறப் போவதாக, பா.ஜ.க. தலைவர் சுஷ்மா சுவராஜ் அறிவித்தார். ஏற்கனவே முதல்வரானவுடன் மொட்டை அடித்துக் கொண்ட உமாபாரதி, மீண்டும் மொட்டை அடிக்க இயலாது என்பதால், முதல்வர் பதவியை விட்டு விலகி, சன்யாசம் மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்தார். பெண்களை அடிமைப் படுத்தும் இழிவுப் பண்பாட்டை - சங் பரிவார் பெண்களே போற்றிப் பாது காக்கத் துடிக்கிறார்கள். சங்பரிவார் கொள்கை பார்ப்பனீயம் தான் என்பதை, இது மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

கேட்டால் - இது பெண்களே தேர்ந் தெடுத்துக் கொள்ளும் வாழ்க்கை; அதில்

(4ம் பக்கம்)

தலையங்கம்

# குறைந்தபட்ச செயல் திட்டம்!

15 கட்சிகளை உள்ளடக்கிய, அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் குறைந்தபட்ச செயல் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த கால தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியின் மோசமான செயல் திட்டங்களுக்கு மாறாக, பல முற்போக்கான அம்சங்கள் இதில் இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கதாகும். பொடா சட்டத்தைத் திரும்பப் பெறுதல்; தமிழைச் செம்மொழியாக்குதல்; சேது சமுத்திரத் திட்டத்தை விரைவு படுத்துதல்; லாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்காதிருத்தல்; ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு அரசியல் சட்டத்தில் 370வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள சிறப்பு உரிமைகளைப் பாதுகாத்தல்; கல்வி காவிமயமாக்கப்பட்டதை மாற்றி அமைத்தல்; மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டுக்கான சட்டம் இயற்றுதல்; நாட்டின் மொத்த வருமானத்தில் 6 சதவீதம் – கல்விக்கு ஒதுக்குதல்; இலங்கையில் வாழும் தமிழர்கள் மற்றும் மதச் சிறுபான்மையினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை நிறைவேற்றும் நோக்கத்தோடு சமரச முயற்சிகளை ஆதரித்தல்; கண்மூடித்தனமான அமெரிக்க ஆதரவுக் கொள்கையை கைவிடல் போன்ற வரவேற்கத்தக்க அம்சங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான அனைத்து இடஒதுக்கீடுகளும், நிரப்பப்படும் என்றும், இதற்கு காலவரையறை நிர்ணயித்து, சட்டம் இயற்றப்படும் என்றும், செயல் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கேற்ப ரயில்வே துறையில் காலியாக உள்ள இடங்கள் நிரப்பப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் கூறியிருக்கிறார். இரயில்வேத் துறையில் கடந்த ஆண்டு குரூப் 'சி' பிரிவில் 1,18,052 பணியிடங்களையும், 'டி' பிரிவில் 39,759 பணியிடங்களையும், வாஜ்பாய் ஆட்சி நிரப்பாததால், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான வேலை வாய்ப்புகள் முடக்கப்பட்டு விட்டன.

ஆண்டு ஒன்றுக்கு, குறைந்தது 100 நாட்களுக்காவது, மிகக் குறைந்த ஊதியத்திலாவது, ஏழை, நடுத்தரக் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு தருவதைக் கட்டாயப்படுத்தி, சட்டம் கொண்டு வரப் போவதாகச் செயல் திட்டம் உறுதி அளித்திருப்பது, குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப் படுமானால், கிராமங்களில் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று சமூக வியலாளர்கள் கருதுகிறார்கள்.

தனியார் துறைகளில், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை, வலியுறுத்தி தந்தை பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து இயக்கங்களை நடத்தி வருகிறது. தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. – தங்கள் தேர்தல் அறிக்கைகளிலும் இதை வலியுறுத்தியிருந்தன. இடதுசாரி கட்சிகளும் கொள்கை அளவில் இதை ஆதரித்துள்ளன. ஆனால், செயல் திட்டத்தில் இதுபற்றி திட்டவட்டமான அறிவிப்பு இல்லை என்பது வருத்தத்துக்குரியதாகும். தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிப்பது, எந்த வகையில் சாத்தியமாகும் என்பது குறித்து, அரசியல் கட்சிகளுடனும் தொழில் நிறுவனங்களுடனும் – பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்று, மேலோட்டமாகவே செயல்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. இதே போல் – முஸ்லீம்களுக்கு, தனி இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று, தேர்தல் அறிக்கையில் பல அரசியல் கட்சிகள் உறுதி கூறியிருந்தன. அது பற்றியும் செயல் திட்டத்தில் திட்ட வட்டமான அறிவிப்பு எதுவும் இல்லை. சமூகநீதி தொடர்பான இந்த மிக முக்கியப் பிரச்சினைகளை அலட்சியப்படுத்திவிடக் கூடாது என்று, சுட்டிக்காட்டி வலியுறுத்த விரும்புகிறோம்.

ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தைக் குலைப்பதில் தீவிரம் காட்டியவர் என்ற புகாருக்கு உள்ளான ஜே.என். தீட்சித்தும் – இந்தியாவின் மரபுவழி விதை நெல்களை – அமெரிக்க பன்னாட்டு ஆய்வு நிறுவனங்களிடம் காட்டிக் கொடுத்த புகாருக்கு உள்ளான விஞ்ஞானி சாமிநாதனும் உயர்பதவிகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் செயல்பாடுகளை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# 'வேத விற்பன்னர்' ஜோஷியின் திருவிளையாடல்கள்

எழுபதுகளின் தொடக்கத்தில் மிகப் பழமை வாய்ந்த சைக்கிள் ஒன்றில் அலகாபாத் பல்கலைக் கழகத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தார் ஒரு இயற்பியல் பேராசிரியர். எழுபதுகளின் மத்தியில் ஸ்கூட்டருக்கு மாறினார். அப்போது வாடகை வீட்டில் அவர் குடியிருந்து வந்தார். 1987-ல் பல்கலைக் கழகத்திற்கு செல்வதை நிறுத்திக் கொண்டார். ஆனால் 1994-ல் பணி ஓய்வு பெறும் வரை பேராசிரியருக்கான சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறவில்லை. தற்போது அரண்மனை போன்ற சொந்த வீடு. ஆடம்பரமான கார்கள் பல என்று வாழ்ந்து வருபவர். இவர் தான் மனிதவள மேம்பாட்டு அமைச்சராக பவனி வந்த முரளி மனோகர் ஜோசி.

தான் வேலைக்கே செல்லாமல் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்த பல்கலைக் கழகத்தை தற்போது தனக்குச் சொந்தமான தனியார் நிறுவனம் போல் மாற்றிவிட்டார் திருவாளர் ஜோசி. இவர் நிபுணத்துவம்(?) பெற்ற துறையாகக் கருதப்படுகிறது 'ஸ்பெக்ட்ராஸ் கோப்பி' மூலக்கூறு அமைப்பு மற்றும் ஒளியியல் பற்றியது. தனது சிஷ்ய கோடியான இராம கோபால் என்பவரை விதிமுறைகளுக்குப் புறம்பாக இத்துறையின் தலைவராக நியமித்துள்ளார் ஜோசி. இவர் மூலம் ஆராய்ச்சிக்காக பல கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் உருப்படியான ஆய்வு ஏதும் நடக்கவில்லை. பல்கலைக் கழகத்தின் பல துறைகள் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டு வருகிறது. இவற்றில் அடிப்படை வசதிகள்கூட இல்லை. அலகாபாத் நகரில் ஜோசிக்கு வேண்டப்பட்ட பல கல்லூரிகளுக்கும் நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து (தனியார் பல்கலைக் கழகம்) வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தை பல கூறுகளாகப் பிரித்து அதன் தலைவர்களாக ஆர்.எஸ்.எஸ். காரர்கள் நியமிக்கப்பட்டனர். உள்ளூர் அதிகாரிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஜோசிக்கு எதிராய் வாய் திறந்தால் பணி மாறுதல் என்று தொடங்கி பல்வேறு விதமான தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். ஜோசியின் தவறுகளைச் சுட்டிக்காட்டிய பேராசிரியர்கள் பலரது ஆராய்ச்சி உதவித் தொகைகள் அதிரடியாய் நிறுத்தப்பட்டன.

1977ல் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் பல்கலையில் ஜோசி பாடம் கற்பிக்கவில்லை. ஆராய்ச்சி செய்யவில்லை. எனவே அவருக்கு சம்பளம் கொடுப்பது நியாயமற்றது என கூறி 1992-ல் வழக்குத் தொடுக்கப்பட்டது. ஜோசி, ஜோதிட வகுப்பெடுத்து வருவதாகவும், ஆய்வுகள் செய்து வருவதாகவும் பல்கலைக் கழக துணைவேந்தர் எழுத்துப்பூர்வமான வாக்கு மூலம் அளித்தார். ஜோசி டெல்லியில் இருந்த நாட்கள். பா.ஜ.க.விற்காக இந்தியா முழுவதும் சென்று வந்தது - அவரது ரயில், பஸ் பிரயாணங்கள் ஆகியவற்றைத் தொகுத்து பல்கலைக்கழக மாணவர்கள் நீதிபதியிடம் அளித்து துணைவேந்தரின் பொய்க் கூற்றைக் கேலிக் கூத்தாக்கினர். ஆனாலும், நீதியின் செங்கோல் பல்கலைக் கழக துணை வேந்தர் கூற்றே சரியெனத் தலை ஆட்டியது. 1994-ல் ஜோசி பணி ஓய்வு பெறும் வரை கிஞ்சிற்றும் வெட்கமின்றி சம்பளம் பெற்றுக் கொண்டுதான் இருந்தார். அலகாபாத் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வரும் போது வேறொரு அதிசயமும் நிகழ்ந்தது. பல்கலைக்கழகக் கணக்குப் பிரிவில் இருந்த பதிவேடுகள் களவாடப்பட்டு, ஜோசி தொடர்பாக இருந்த பக்கங்கள் கிழிக்கப்பட்டு விட்டன. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும் இதன் மீது விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. ஜோசிக்கு எதிரான வழக்கை நிர்மூலமாக்க செய்யப்பட்ட வேலை இது.

ஜோசி பணியாற்றி வந்த அதே துறையில் அகர்வால் என்பவரும் பணியாற்றி வந்தார். இவர் மிகவும் புகழ்பெற்ற இயற்பியல் விஞ்ஞானி. அகில இந்திய அறிவியல் கழகத்தில் முக்கிய அங்கம் வகிப்பவர். இவருக்கு துறைத் தலைவர் பதவி மறுக்கப்பட்டு ஜோசிக்கு வழங்கப்பட்டது. இதை எதிர்த்து அகர்வால் உச்சநீதி மன்றம் சென்றார். "ஜோசியின் பதவி உயர்வு, சட்டத்திற்கு புறம்பானது, முறையற்றது" என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. சட்டம், நீதி, நியாயம், நேர்மை, தர்மம் என அனைத்தையும் ஏறி மிதித்து வந்த ஜோசிக்கு எதிரான தீர்ப்பு இது ஒன்று தான். 1977 வரை உண்மையில் பணி செய்து வந்த காலத்தில் ஜோசி பீற்றிக் கொள்வது போல் அடிப்படை ஆய்வுகளோ குறிப்பிட்டு கூறும்படியான ஆய்வு களோ ஜோசியால் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக பல்கலைக்கழகத்தை காவிமயமாக்கி எவ் வளவு ஆர்.எஸ்.எஸ்.சாகாக்களை நடத்த முடியு மோ அவ்வளவு நடத்தி 'சாதனை' புரிந்தார்.

கடந்த ஆண்டு பல்கலைக் கழகத்தில் 60 பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவர்கள் அனைவரும் ஜோசியின் அடிவருடிகள். தகுதி வாய்ந்தவர்களுக்கு இது காறும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. ஜோசியின் பாதத்தை யார் தொட்டு வணங்கு கிறார்களோ அவர்களுக்கு உரிய கவனிப்பு உண்டு. பேரா. அகர்வால், விஜய்குமார் சர்மா, நரேஷ் சந்திரா, சின்ஹா என ஒரு சில பேராசிரியர்களும் சில பொது மக்களும் தான். துணிச்சலுடன் ஜோசியை விமர்சித்தனர்.

அலகாபாத் நகரில் வசிக்கும் வழக்கறிஞர்கள், சிவில் உரிமை ஆர்வலர்கள் மாணவர் தலைவர்கள், அறிவு ஜீவிகள் ஒன்றிணைந்து பல்வேறு பிரிவு மக்களையும், ஒருங்கிணைத்து, ஜோசியைத் தோற்கடிக்க அலகாபாத் மக்கள் முன்னணி என்ற ஒரு அமைப்பை உருவாக்கினர்.

எனவே இனிமேல் ஜோசி குறித்து மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை. அவர் மக்கள் மன்றத்தில் தோற்கடிக்கப்பட்டார்.

புதிதாக பதவியேற்கும் அரசு ஜோசி அரங்கேற்றிய கோளாறுகளைச் சரி செய்ய வேண்டியது அவசியம். – **'தெகல்கா' இதழிலிருந்து**

# போபால் விஷவாயு: புதிய ஆட்சியின் கவனத்துக்கு

1984-ம் ஆண்டு போபாலில் 'யூனியன் கார்பைடு' நிலையத்திலிருந்து வெளியேறிய விஷவாயுவின் பாதிப்பிலிருந்து, மக்கள் இன்னும் விடுபடவில்லை. பல்லாயிரம் மக்களின் வாழ்க்கையைப் பலிகொண்ட இந்த அமெரிக்க நிறுவனத்தின் விஷவாயு - இப்போது அப்பகுதியில் நிலத்தடி நீரையும் - விஷமாக்கி வருகிறது. இது தொடர்பாக நியூயார்க் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு வழக்கில், நீதிபதி கீனன், ஒரு வேண்டுகோளை முன்வைத்துள்ளார். இந்திய அரசோ அல்லது ம.பி. மாநில ஆட்சியோ, ஒப்புதல் கடிதம் தந்தால், மாசு படிந்த நிலத்தடி நீரை, சரி செய்து தரும் செலவை யூனியன் கார்பைடு நிறுவனமே ஏற்க உத்தரவிடுவேன் என்று கூறியுள்ளார் நீதிபதி. ஒப்புதல் கடிதம் பெற ஜூன் 30, 2004 வரை நீதிபதி கெடு நிர்ணயித்துள்ளார்.

மத்திய மாநில அரசுகள் இதுவரை, இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதிய ஆட்சியாவது இதில் கவனம் செலுத்துமா? 'கிரின் பீஸ்' எனும் சுற்றுச் சூழல் இயக்கம் - இதற்காகக் கையெழுத்து இயக்கம் ஒன்றை நடத்தி வருகிறது. ●

# புரோகிதர் மேலாதிக்கம் - உருவான வரலாறு

**பி**ரேம் நாத்பசாஸ் ஆங்கிலத்தில் எழுதிய நூலை - தமிழில் 'இந்திய வரலாற்றில் பகவத் கீதை' எனும் தலைப்பில் விடியல் பதிப்பகமும், சூலூர் வெளியீட்டகமும் இணைந்து வெளியிட்டுள்ளன. 1975ம் ஆண்டு, இந்நூலை எழுதிய பிரேம்நாத் பசாஸ் - ஒரு காஷ்மீரி. தந்தை பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு - கடவுள் மறுப்புக் கொள்கைக் கண்ணோட்டத்தோடு இந்த நூல் எழுதப்பட்டுள்ளது இதன் தனிச் சிறப்பாகும். கடந்த 24ம் தேதி திங்கள் கிழமை, புதுவை 'வணிகர் வளாக அரங்கில்' இதன் வெளியீட்டு விழா நடைபெற்றது. புதுவை மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் அமைப்பாளர் சுகுமாரன் தலைமை தாங்கினார். 'புரட்சியாளர் அம்பேத்கர் தொண்டர்படை' நிறுவனர் ஃபியூச்சர் இராதா நூலை வெளியிட, புதுவை மாநில தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், ஓவியக் கல்லூரி பேராசிரியர் ஓவியர் இராசராசன் ஆகியோர் நூலைப் பெற்றுக் கொண்டார்கள். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் அ.மார்க்ஸ் ஆகியோர் கருத்துரை வழங்கினர். நூலின் உள்ளடக்கத்தை மிகச் சுருக்கமாக தொகுத்துக் கூறினார் விடுதலை இராசேந்திரன். வாசகர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்ற நோக்கத்தில் அதை இங்கு வெளியிடுகிறோம்.

பெரியார் இயக்கத்துக்கான வரலாற்று ஆவணம் என்று கூறுமளவுக்கு, ஏராளமான வரலாற்றுச் செய்திகளை உரிய ஆதாரங்களுடன் தொகுத்தளித்துள்ளது இந்நூல். 950 பக்கங்களைக் கொண்டது. விலை: ரூ.350/-

- 700 சமஸ்கிருத கவிதைகளைக் கொண்டது பகவத்கீதை.
- கீதை - இந்துமதத்தின் புனித நூலாகவும் - வழிகாட்டியாகவும் லட்சிய நூலாகவும் போற்றப்படுகிறது. அது மிகச் சிறந்த லட்சிய நூலாக இருந்திருக்குமானால், அந்த நூல் வெளிவந்த காலத்தில் நிலவிய மனித குலத்தின் சிக்கலான பிரச்சினைகளையும், கடும் துயரங்களையும் முன்னிலைப்படுத்தி விவாதித்திருக்க வேண்டும். கீதை அதைச் செய்யவில்லை.
- கீதைக்கு ஏராளமான விளக்க உரைகள் வந்துள்ளன. அவை அனைத்தும், கீதையைப் புகழ்ந்து புகழேணியின் உச்சியில் ஏற்றுவதற்கே போட்டி போட்டன. கீதையின் முரண்பாடுகளைப் பூசி மெழுகி, சப்பைக் கட்டு கட்டுவதற்கான முயற்சிகளிலே அவைகள் இறங்கின.
- கீதை உலகத்துக்கே வழிகாட்டக் கூடியது என்றும் சமூகத்தின் தலைசிறந்த ஒழுக்க நெறிகளைக் கூறுகிறது என்றும் கூறுகிறார்கள். அது உண்மையானால் பகவத்கீதையின் கோட்பாடுகளை முழு நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்ட இந்தியர்கள் - அறிவாற்றலிலும், தார்மீக நெறியிலும் ஏன் தாழ்நிலையை அடைந்தார்கள்? ஒட்டு மொத்தமாகப பார்த்தால் மனித முன்னேற்ஷறத்தைப் பாழ்படுத்துவதற்கும் சமூகத் தீமைகளை வளர்ப்பதற்குமே கீதையின் போதனைகள் பயன்பட்டன.
- கருத்து முதல்வாதத்தை முன் வைக்கும் - ஆன்மீகச் சிந்தனை தான் வேத காலத்திலிருந்து இந்தியாவில் இருந்து வரும் ஒரே சிந்தனை மரபு என்று கூறுவது வரலாற்று உண்மைகளை இருட்டடிப்பதாகும். கி.மு. 500 லிருந்து கி.பி. 500 வரை இந்தியா முழுதும் பகுத்தறிவு அடிப்படையிலான பொருள் முதல்வாத சிந்தனை மரபே நிலவியது. கீதை வலியுறுத்தும் கோட்பாடுகளையும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் ஆய்வு செய்ய வேண்டுமானால், திட்டமிட்டே மறைக்கப்பட்ட இந்த வரலாறுகளை முதலில் நாம் வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டும்.
- பவுத்தத்தை ஒழிப்பதற்கு - 9ம் நூற்றாண்டில் ஒரு ஆயுதமாகப் பயன்பட்டது, இந்தப் பகவத் கீதை தான்.
- பார்ப்பனர்கள் - வரலாற்றை எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தார்களோ அதையே கடந்தகால இந்திய வரலாறாக்கி விட்டனர். பொது மனிதர்களின் பார்வையில் வரலாறை எழுத முயற்சிக்கவே இல்லை? வரலாறுகளை பார்ப்பனர்கள் எழுதிக் கொண்டார்கள்.
- கைபர் போலன் கனவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்த பார்ப்பனர்களின் குறிக்கோள் - நல்ல இன்பமான வாழ்க்கை - நல்ல உடல்நலம் நோக்கியதாக மட்டுமே இருந்தன. ரிக் வேதப் பாடல்கள் இதைத்தான் வலியுறுத்தின.
- ஆரியர்கள் - தங்களின் சிந்தனைத் தரத்துக்கு ஏற்றவாறு கடவுள்களை உருவாக்கிக் கொண்டனர். அறிவாலும், பண்பாலும், சமூகம் வளர்ச்சி பெறும் போது, இத்தகைய கடவுள்கள் தூக்கி எறியப்பட்டு விடுகின்றன. ஆனால் இந்தியர்கள் தங்களது மூடநம்பிக்கை காரணமாக, இந்தக் கடவுள்களை இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

**சக மனிதர்களில் ஒருவனாகக் கருதப்பட்ட கடவுள். பிறகு "விண்ணுலக மாந்தராக" ஏற்றம் தரப்பட்டது.**

- வேதகாலக் கடவுள்கள் எப்படி கற்பிக்கப்பட்டன? கடவுள்களும் மானுடர்களில் ஒருவராகவே கருதப்பட்டு, நண்பர்களாகவும், உண்டு, குடித்து, உடன் வாழும் நண்பர்களாகவும் கருதி, வேதப்பாடல்களை பாடினார்கள்.
- சக மனிதர்களில் ஒருவனாகக் கருதப்பட்ட கடவுள். பிறகு "விண்ணுலக மாந்தராக" ஏற்றம் தரப்பட்டது. அப்போது, சடங்குகளையும், படையல்களை யும், மேல் உல குக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று நம்பியதால், அதைச் செய்வதற்கு "புரோகிதர்" என்ற பிரிவு உருவானது. இந்தப் புரோகிதர்களுக்கு மட்டுமே கடவுளின் 'சக்தி' 'ரகசியம்' எல்லாம் தெரியும் என்றும், யாகப் பொருள்களையும் மந்திரங்களையும் அவர்களிடம் மேலே கொண்டு செல்லக்கூடிய ஆற்றல் புரோகிதர்களுக்கு மட்டுமே உண்டு என்ற கருத்து பரவியது.

**பகவத்கீதையின் கோட்பாடுகளை முழு நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்ட இந்தியர்கள் - அறிவாற்றலிலும், தார்மீக நெறியிலும் ஏன் தாழ்நிலையை அடைந்தார்கள்?**

- இந்தக் கருத்தை நம்பிக்கையாக மாற்றுவதற்கு புரோகிதர்கள் மாயாஜாலக் கதைகளை உருவாக்கினார்கள்.
- இயற்கையின் விதிகளையும் - அதற்கான விஞ்ஞான ரீதியான காரணங்களையும் அறிந்திடாத மனிதன், கடவுளை மகிழ்வித்து, அதன் மூலம் - இயற்கை விதிகளைத் தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ள முடியும் என்று நம்பினான். இந்த நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு இடைத்தரகர்களாக மாறிய புரோகிதப் பார்ப்பனர்கள் - சகல அதிகாரம் படைத்தவர் களாக மாறினர். சக மனிதனாகக் கருதப்பட்டு, முதலில் ரிக் வேதத்தின் மூலம் கூறப்பட்ட பல கடவுள்கள், இப்போது புரோகிதர்களுக்கும் பயன்படாததால, அந்தக் கடவுள்களை புரோகிதர்கள் கைகழுவினார்கள். தியோசன், மித்திரன், சாவித்திரி, பூசன், ஆதித்தியன், மாருத்தியன், அதிதி, திதி, ஊர்வசி போன்ற கடவுள்களை பார்ப்பனர்களே ஒதுக்கி விட்டார்கள். (இது வேத காலப் பார்ப்பனர்களின் கடவுள் மறுப்பு). மகாதேவன் என்ற நிலைக்கு, 'ருத்திரன்' என்ற கடவுள்உயர்த்தப்பட்டு 'சிவன்' என்று பெயர் பெற்றான். இந்த 'சிவன்' யாக சாலையில் கறுப்பு உடையில் தோன்றி, யாகத்தில் படைக்கப்படும் பொருள்கள் எல்லாம் தனக்கே சொந்தம் என்று கேட்டதாக, புரோகிதர்கள் கதைகளைப் பரப்பினர். ருத்தரனுக்கு அடுத்த முக்கிய கடவுளாக விஷ்ணுவை உருவாக்கினார்கள். அனைத்து முக்கிய யாகங்களிலும், சிவனே நேரடியாக வந்து கலந்து கொள்கிறான் என்று புரோகிதர்கள் கதை கட்டினார்கள்.
- மக்கள் யாகங்களை நம்பி, உற்பத்திப் பொருள்களில் தங்கள் உயிர் வாழ்வதற்குப் போக, எஞ்சிய பெரும் பகுதியை யாகத்துக்கே அளித்தார்கள். பார்ப்பனர்கள் - பெரும் கொள்ளை அடித்து, பண்பாட்டுக் காவலர்களாக தங்களை மாற்றிக் கொண்டனர்.
- வேத காலத்தில் - பார்ப்பனர்கள் மதிக்கப்படுகிறவர்களாக மாறினர். பிறகு இந்த மதிப்பைப் பயன்படுத்தி, மக்களை அச்சுறுத்தி, புரோகிதர்களாக மாறினார்கள், அடுத்தகட்டமாக ஆதிக்கவாதிகளாக மாறினார்கள். பிறகு - இந்த ஆதிக்கத்தைத் தொடர்ந்து காலம் காலமாகத் தக்க வைத்துக் கொள்வதற்கான திட்டங்களைத் தீட்டத் துவங்கினர். இதற்காகவே தங்கள் முழு நேரத்தையும் பார்ப்பனர்கள் செலவிட்டனர்.
- தனது தேவைக்கு ஏற்ப இயற்கையைக் கட்டுப்படுத்த விரும்பி, அதற்காகக் கடவுளைத் திருப்தி செய்த மனிதன், சிந்தனை வளர்ந்து, இயற்கையின் மாற்றத் துக்கான காரண காரியங்களைப் புரிந்து கொண்ட பிறகு உலகின் ஏனைய பகுதிகளில், இத்தகைய சடங்குகள் அறிவியலுக்கு ஏற்ப மாற்றம் பெற்று விட்டது. ஆனால், இந்தியாவில் மட்டும், இந்த மாற்றம் ஏற்படவே இல்லை. காரணம், இந்த மந்திரங்களையும், சடங்குகளையும், தங்களிடமே தக்க வைத்துக் கொண்டுவிட்ட பார்ப்பனர்கள் - இவைகளை தங்களுக்கான மந்திரங்களாகக் காப்பாற்றி, மக்கள் முன்னேற்றத்தைத் தடை செய்து, சமூகத்தில் தேக்க நிலையை ஏற்படுத்திவிட்டனர்.
- இதற்காக - யாகங்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கான நூல்களை எழுதி, அதைத் தங்களுக்குள் ரகசியமாக வைத்துக் கொண்டனர். இதற்குப் பெயர் "பிராமணங்கள்" யாகங்களைப் புரியாத புதிராக்கி - யாருடைய நலனுக்காக, எந்த நோக்கத்துக்காக யாகங்கள் நடத்தப்படுகின்றன என்பதற்கு எந்த விளக்கமும் தராமல், "பிராமணங்களை" உருவாக்கிக் கொண்டனர். இதன் மூலம் பிராமணங்களைப் படித்தவர்கள் கூட - யாகங்களை செய்ய முடியாது; பார்ப்பனப் புரோகிதர்களால் மட்டுமே அதைச் செய்ய முடியும். ஆதிக்கவாதிகளாக மாறிய பார்ப்பனர்கள், இதன் மூலம் - மூன்றாவது கட்டமாக - தங்களைக் கடவுளுக்குச் சமமாக அடுத்தக் கட்டத்துக்கு உயர்த்திக் கொண்டுவிட்டனர்.
- இதன் மூலம் - பார்ப்பனப் புரோகிதர்கள் கடவுளின் ஒரு பிரிவு; மற்ற கடவுளர்கள் ஒரு பிரிவு என்ற நிலை வந்தது. யாகங்கள் - இந்த இரண்டு பிரிவினருக்கும் பங்கிடப்பட்டன. சுலோகங்களும், சடங்குகளும் கடவுளுக்கும் யாகப் பொருள்கள் மற்றொரு கடவுளான பார்ப்பனர்களுக்கும் என்று பங்கீடுகளை உருவாக்கினார்கள்.
- படிப்படியாக - பார்ப்பனர்கள் தங்களை உயர்த்திக் கொண்டே போனதற்கு, சமூகத்தில் எதிர்ப்புகளும் வரத் துவங்கின. இந்த எதிர்ப்புகளை சமாளிக்க - பார்ப்பனர்கள், அடுத்த கட்டத்துக்கு தங்களை உயர்த்திக் கொண்டார்கள். கடவுளுக்கும் மேலாக, படைப்பில் முதன்மையானவர்களாகத் தங்களை அறிவித்துக் கொண்டனர். இதற்காக 'பிராமணங்களில்' சில இடைச் செருகல்களைச் செய்து கொண்டனர். அப்படி இடைச் செரு

(4ம் பக்கம்)

(3 பக்கத் தொடர்ச்சி)

கலாக வந்தவைகளில் ஒன்று தான் ‘சதபதபிராமணம்’. “ரிஷிகளின் மரபுகளில் வந்த புரோகிதப் பார்ப்பான் - கடவுளுக்கு எல்லாம் கடவுள்; அனைத்துக் கடவுள்களும் அவனுக்குள் அடக்கம்” என்று ‘சதபத பிரமாணம்’ கூறுகிறது.

- பார்ப்பனப் புரோகிதக் கும்பலின் இந்த மூர்க்கமான கொடுங்கோல் ஆதிக்கம், மத்திய காலத்துக்கு முந்தைய இந்திய வரலாறு முழுதும் நிலவியது. மன்னர்களே பார்ப்பனர்களைக் கட்டுப்படுத்த முடியாது. மன்னர்கள் பதவி ஏற்கும் போது புரோகிதன் கூறுவான்: “மக்களே, நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இந்த மனிதன் உங்களுக்குத் தான் அரசன். ஆனால் சோமன் தான் பார்ப்பனர்களுக்கு அரசன்”.
- வேதங்கள் - மனிதர்களால்தான் பாடப்பட்டன. இதற்கு வேதங்களிலேயே சான்றுகள் உண்டு. ஆனால் பார்ப்பனர்கள் வேதங்கள் கடவுள்களால் பாடப்பட்டவை என்று பச்சையாகப் பொய் கூறினார்கள். எனவே கடவுளே பார்ப்பனர்கள்தான் என்று சாதித்தார்கள்.
- எதிர்ப்புகள் நசுக்கப்பட்டன; அதற்காகவே ‘மனுதர்மம்’ வந்தது. வேதத்தைக் கேட்க சூத்திரர்களுக்கு தடை போட்டார்கள். “வேதங்கள் விவாதங்களுக்கு அப்பாற்பட்டது” என்று மனுதர்மம் கூறியது. எனவே வேதங்களை இயற்றியது கடவுள் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். வேதத்துக்குப் பணியமறுத்தால், சமூகத்தை விட்டு விரட்டப்பட்டு விடுவார்கள் என்று ‘மனு’வின் சட்டம் மிரட்டியது.
- கி.பி.7 அல்லது 8 ஆம் நூற்றாண்டுகளிலேயே மரப்பட்டைகளிலும், ஓலைகளிலும் எழுதி வைக்கும் எழுத்து வடிவங்கள் வந்துவிட்டன. ஆனால் பார்ப்பனர்கள் - எழுத்து வடிவம் வந்த பிறகும்,வேதங்களை எழுத்து வடிவில் பதிவு செய்யவே இல்லை. காரணம் இவைகள் மற்றவர்களிடம் பரவினால், தங்கள் ஆதிக்கம் தகர்ந்துவிடும் என்பதால் தான். இதன் காரணமாகத் தான் மரப்பட்டை, ஓலைகளில் கண்டுபிடிக்கப்பட்ட இந்திய எழுத்து வடிவங்கள் எதிலும், வேதங்கள் கிடைக்கவே இல்லை. இந்தியாவில் இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்து வடிவங்கள் அனைத்துமே பவுத்த மதத்தைச் சார்ந்தவைகளாக மட்டுமே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பவுத்தத் துறவிகள் இயற்றிய “வசிஷ்ட தர்ம சாஸ்திரம்” தான் முதன் முதலில் எழுத்து வடிவத்தில் பதிப்பிக்கப்பட்டதாகும்.

(தொடரும்)

# கழகத் தோழர்கள் கைதாகி விடுதலை!

**காளப்பட்டியில் தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் 60பேர் கைது**

கோவை காளப்பட்டியில் கடந்த 16.5.04 அன்று தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதல் நடத்தியோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரியும், நிரந்தரப் பாதுகாப்பு கிடைக்க காவல் நிலையம் அமைக்கக் கோரியும், தனி நியாய விலைக்கடை மற்றும் முழுமையான நிவாரணம் வழங்கக் கோரியும் வலியுறுத்தி 26.5.04 மாலை 5 மணிக்கு செஞ்சிலுவை சங்க கட்டிடம் முன்பு தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் வெ.ஆறுச்சாமி, கோவை மாநகர தலைவர் ம.ரே.ராசக்குமார், செயலாளர் வே.கோயில், அமைப்பாளர் கா.சோமசுந்தரம், அலுவலகப் பொறுப்பாளர் சா.கதிரவன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் ந.பிரகாசு, பொள்ளாச்சி ஒன்றியச் செயலாளர் கா.சு.நாகராசு, திருப்பூர் அங்ககுமார், திருப்பூர் நகர இளைஞரணி செயலர் இராவணன், தெற்கு மாவட்ட செயலாளர் இரமேசுபாபு, மேட்டுப்பாளையம் நகரச் செயலர் சந்திரசேகர், பொள்ளாச்சி நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி, ஆதித்தமிழர் விடுதலை முன்னணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், பீளமேடு நடராசு, சட்டக்கல்லூரி மாணவர் மதுசூதனன், வழக்கறிஞர் லெனின், மாணவரணி தோழர் பன்னீர் செல்வம், திருப்பூர் சசிகலா, மாணிக்கம், இராசன், ஈசுவரன் உட்பட 60 தோழர்கள் கைதானார்கள்.

நிவாரணம் கொடு! நிவாரணம் கொடு! முழுமையான நிவாரணம் கொடு!!

காளப்பட்டி கலவரத்துக்கு காரண மானவர்கள் மீது முழுமையான நடவடிக்கை எடு!

பாதுகாப்பு கொடு! பாதுகாப்பு கொடு! தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு கொடு!!

கைது செய்! கைது செய்!! காளப்பட்டி தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு காரணமானவர்களை வன்கொடுமைச் சட்டத்தில் கைது செய்!! - என்று முழக்கங்கள் ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்டது. பின்னர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்களை காவல் துறையினர் கைது செய்து வேனில் ஏற்றிச் சென்றார்கள். இரவு 8 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

## குடிசைவாழ் மக்களின் பத்திரிகை

**கு**டிசைகளிள் வாழும் மக்களுக்காக - பெங்களூரிலிருந்து குடிசைவாதிகளையே ஆசிரியராகக் கொண்டு குடிசைகள் உலகம் என்ற மாதப் பத்திரிகை ஒன்று வெளிவந்து கொண் டிருக்கிறது.

குடிசை வாழ் மக்களின் பிரச்சினைகளுக்காகவே நடத்தப்படும் இந்தப் பத்திரிகை மிகவும் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கும் செல்கிறது. வண்ணப் படங்களோ, விளம்பரங்களோ இல்லாமல் வெளிவரும் இந்தப் பத்திரிகை மாதம் 1000 பிரதிகளிலிருந்து 2000 பிரதிகளாக உயர்ந்துள்ளது.

## கழகத் தோழர்களுக்குவேண்டுகோள்!

தோழமை கொண்ட கழகத் தோழர்களுக்கு,

வணக்கம். 16.5.2004 அன்று மாலை 5 மணியளவில் கழகத்தின்ஆட்சிக் குழு கூட்டம் - சென்னையில் கழகத் தலைவர் தலைமையில் கூடியது. அப்போது கழக அமைப்புகளை மாற்றி அமைக்கவும், ‘புரட்சி பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு சந்தாக்கள் சேர்க்கும் இயக்கத்தைத் தீவிரப்படுத்தவும், கழகத் தலைவர், பொதுச்செயலாளர்கள், களப்பணி ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்டம் முழுதும் சுற்றுப் பயணம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட விவரப்படி சுற்றுப்பயணம் திட்டமிடப்பட்டுள்ளது. கழகத் தோழர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள்

| | |
|---|---|
| 17.6.04 | சேலம், நாமக்கல் |
| 18.6.04 | திருப்பூர் |
| 19.6.04 | ஈரோடு |
| 25.6.04 | கோவை |
| 26.6.04 | பொள்ளாச்சி |
| 27.6.04 | மதுரை |
| 28.6.04 | திண்டுக்கல் |
| 2.7.04 | நாகை |
| 3.7.04 | தஞ்சை |
| 4.7.04 | திருச்சி, கரூர் |
| 5.7.04 | பெரம்பலூர் |
| 16.7.04 | தருமபுரி |
| 17.7.04 | வேலூர் |
| 18.7.04 | சென்னை |
| 19.7.04 | புதுவை |
| 24.7.04 | நெல்லை, தூத்துக்குடி |
| 25.7.04 | விருதுநகர் |
| 26.7.04 | இராமேசுவரம் |

- தலைமை நிலையம்

## ‘பூர்வ ஜென்ம பலன்’ டாக்டர் ராமதாஸ் பதிலடி!

**பா**ட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளர்களை தோற்கடிக்குமாறு தனது ரசிகர் மன்றத்துக்கு உத்தரவு போட்ட நடிகர் ரஜினிகாந்த் - “பூர்வ ஜென்ம பலன் ஏதாவது அவர்களுக்கு இருக்கும் என்றால், வெற்றி பெறட்டும்” என்றார். பா.ம.க. வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெற்று விட்டார்கள். தேர்தல் முடிவுக்குப் பிறகு டாக்டர் ராமதாசிடம் ரஜினி பற்றி செய்தியாளர்கள் கேட்டார்கள். “நடிகர் ரஜினி, இப்போது திரைப்படம் பக்கம் போய் விட்டார்; அவர் படம் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். பூர்வ ஜென்ம பலன் ஏதாவது அவருக்கு இருக்குமானால், அவர் படம் வெற்றி பெறும்; இதில் நான் செய்வதற்கு எதுவுமில்லை” என்று பதிலளித்துள்ளார்.

**செல்பேசி எண் மாற்றம்**

கழகக் களப்பணி ஒருங்கிணைப்பாளர் சென்னை கேசவன் புதிய செல்பேசி எண் 94440 53879

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.

தொலைபேசி: 2451 2857, 2847 4830

(1 பக்கம் தொடர்ச்சி)

நாம் எப்படி தலையிட முடியும் என்கிறார்கள். இந்த சமூகத்தில் ஒரு பெண், தனது பெயரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது. தனது திருமண வாழ்க்கையைத் தேர்வு செய்யும் உரிமை கிடையாது. தனது கல்வியையோ, தனது எதிர்காலத்தையோ தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை கிடையாது. திருமணத்துக்குப் பிறகு, குழந்தை பெறும் உரிமைகளை முடிவு செய்யும் உரிமை கிடையாது. பாரம்பரிய சொத்தில் பங்கு பெறும் உரிமை கிடையாது. ஆனால், கணவன் இழந்தவுடன் நெருப்பில் போய் விழுந்து சாவதற்கும் வெள்ளைப் புடவை அணிந்து, மொட்டை போட்டுக் கொள்வதற்கு மட்டும் முழு சுதந்திரமாம் ! அதில் தலையிட மாட்டார்களாம்! எப்படி இருக்கிறது, கதை?

இந்தியாவில் பெண்களுக்கு ஓட்டுரிமையே தரக் கூடாது என்று ஒரு காலம் வரை கூறி வந்தவர்கள் தான் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள். இந்திரா பிரதமரானவுடன், ஒரு விதவை எப்படி பிரதமராகலாம் என்று கேட்டதும் இவர்கள் தான். எல்லாவற்றையும் துறக்கத் தயாராகும் சுஷ்மாக்களும் - உமாபாரதிகளும் பதவிகளை மட்டும் துறக்க மறுப்பது ஏன்? ●

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 3rd June 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூன் 10, 2004 | புரட்சி 3 | முழக்கம் 22 | விலை : ரூ.2.50

# தனியார் துறை இடஒதுக்கீடு: மகாராஷ்டிரா வழிகாட்டுகிறது

தனியார் துறைகளில் - தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கும் 51 சதவித இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்தி, மகாராஷ்டிர மாநில அரசு, சட்டம் கொண்டு வந்துள்ளது. இந்தியாவுக்கே வழிகாட்டக் கூடிய இந்த சமூகநீதி சட்டத்தை, அம்மாநில முதல்வர் ஷிண்டே, கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார். ஷிண்டே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒரு சமூகநீதிப் போராளி. அரசின் உதவிகளை ஏதாவது ஒரு வழியில் பெரும் அனைத்து தனியார் நிறுவனங்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும். அரசு நிலத்தைச் சலுகை விலையில் பெற்றிருந்தாலோ, அரசிடமிருந்து ஏதேனும் நிதி உதவி பெற்றிருந்தாலோ, அரசின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியிருந்தாலோ, அரசின் உரிமம் மற்றும் கண்காணிப்புக்கு உட்பட்டிருந்தாலோ, அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலோ அத்தனை தொழில் நிறுவனங்களுக்கும் இந்த சட்டம் பொருந்தும் என்று சட்டம் கூறுகிறது.

### பன்னாட்டு நிறுவனங்களின் மிரட்டல்

அதிர்ச்சி அடைந்த பார்ப்பன-பனியா சக்திகள், இந்த புரட்சிகர சட்டத்தை அமுல்படுத்தவிடாமல், தடுக்கும் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளனர். இந்தச் சட்டம் பற்றி செய்திகளை வெளியிடாமல் இருட்டடித்த பார்ப்பன ஏடுகள், சட்டத்துக்கு எதிர்ப்புகள் வருவதை மிகைப்படுத்தி, மிரட்டத் துவங்கியுள்ளன.

கொரியாவைச் சார்ந்த ஒரு பன்னாட்டு நிறுவனம் பூனேவுக்கு அருகில் ரூ.500 கோடி முதலீட்டில் தொழில் துவங்க இருக்கிறது. இந்த இடஒதுக்கீடு சட்டத்தை அமுல்படுத்த முடியாது என்றும், வற்புறுத்தினால், தொழில் துவங்கும் திட்டத்தை நிறுத்தி விடுவோம் என்றும் இந்த நிறுவனம் அரசை மிரட்டுகிறது. இதே போல், பிரிட்டனைச் சார்ந்த ஒரு நிறுவனமும், அமெரிக்காவைச் சார்ந்த ஒரு நிறுவனமும் அரசை மிரட்டியுள்ளன. இந்நிறுவனங்களில் உயர் பொறுப்புகளில் இருக்கும் பார்ப்பன அதிகாரிகள், இதற்குப் பின்னால் இருந்து செயல்படுகிறார்கள்.

## சங்கராச்சாரியின் பார்ப்பன சதி முறியடிப்பு

# பழனி போட்டி முருகன் சிலை நீக்கம்

பழனி முருகன் கோயிலில் கர்ப்பக்கிரகத்தில், சங்கராச்சாரி ஆலோசனைப்படி, இரவோடு இரவாக நிறுவப்பட்ட அய்ம்பொன் சிலை அகற்றப்பட்டது. சித்தர் வழிபாட்டு மரபில் வந்த பழனி முருகன் கோயிலை வைதீக மரபாக மாற்றும் பார்ப்பன சதி முயற்சி, தோல்வியில் முடிந்தது. சங்கராச்சாரியின் இந்தப் பார்ப்பன சதிக்கு எதிராக, தந்தை பெரியார் திராவிடர் கழகம், பழனியில் ஆர்ப்பாட்டம் மற்றும் பிரச்சார இயக்கங்களை நடத்தியது. கழகத்தின் போராட்டம் இப்போது வெற்றி பெற்றுள்ளது. பல்வேறு இயக்கம்,

### கழகத்தின் போராட்டம் வெற்றி!

கட்சிகளும், இதே கோரிக்கையை முன் வைத்துப் போராடின.

பழனி முருகன் கோயிலில் உள்ள முருகன் சிலை, பார்ப்பனரல்லாத போகர் என்ற சித்தரால், மூலிகைகளால் செய்யப்பட்டதாகும். பார்ப்பனர்கள் ஊடுருவி, கைப்பற்றிய கோயில்களில் உள்ள கடவுள் சிலைகள் எல்லாம் அய்ம்பொன்னால் ஆனவை; திருமலை நாயக்கன் மன்னர் காலத்தில் பழனி கோயில் அர்ச்சகர்களாக இருந்த தமிழர்கள் மாற்றப்பட்டனர். ராமப்பய்யர் என்ற மன்னரின் தளபதி, அங்கே பார்ப்பனர்களைக் கொண்டு வந்து அமர்த்தினான். அதனைத் தொடர்ந்து மூலிகைகளாலான சிலை இருக்கும் கர்ப்பக்கிரகத்துக்குள்ளே பார்ப்பன மரபுப்படி அய்ம்பொன்னாலான சிலையை, செய்து, இரவோடு இரவாக ஜெயலலிதா ஆட்சி தந்திருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, சங்கராச்சாரி பழனி கோயிலுக்குள் கொண்டு வந்து வைத்தார்.

கடந்த ஜன.27-ம் தேதி நள்ளிரவு - ரகசியமாக இது நடந்து முடிந்தது. அல்லூர் விசவநாத சிவாச்சாரியார் தலைமையில், பார்ப்பனர் புரோகிதர்கள் வேதமந்திரங்களை ஓதி சிலையை நிறுவினர். அதே பார்ப்பன புரோகிதர்கள் கடந்த 7ம் தேதி காலை மீண்டும் வேத மந்திரங்களை ஓதி நிறுவிய சிலையை அகற்றியுள்ளனர். முன்னதாக ஜெயலலிதாவின் ஆலோசகரும், சோதிடருமான கேரளாவைச் சேர்ந்த உன்னிக் கிருஷ்ண பணிக்கர், கடந்த வாரம் அறநிலையத் துறை அமைச்சர் ராமசாமியுடன் பழனி கோயிலுக்கு வந்து, அறநிலையத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதனைத் தொடர்ந்து, மூலிகை சிலைக்கு போட்டியாக சங்கராச்சாரியால் நிறுத்தப்பட்ட சிலையை அகற்ற முடிவு செய்யப்பட்டது. கோயில் நிர்வாக அதிகாரியாக இருந்த ராஜா என்பவர் பலிகடாவாக்கப்பட்டு, இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பழனியில் - புதிய சிலையை நிறுவியவுடன், கோயிலுக்கு வருகை தந்த காஞ்சி சங்கராச்சாரி, செய்தியாளர்களிடம் அதை நியாயப்படுத்தி, புதிய சிலையை நிறுவியது 'தெய்வ சங்கல்பம்' (கடவுள் ஆணை) என்று கூறினார். இப்போது - தேர்தலில் மக்கள் தந்த 'தீர்ப்பு ஆணை' - 'கடவுள் ஆணை'யை நிராகரித்து விட்டது. மதமாற்றத் தடைச் சட்டம் திரும்பப் பெற்றதைத் தொடர்ந்து, பழனி முருகன் சிலை பிரச்சினையிலும் சங்கராச்சாரி முகத்தில் மக்கள் மன்றம் கரியைப் பூசியுள்ளது. ●

### ஈ.வெ.கி.ச. இளங்கோவன் இல்ல பகுத்தறிவுத் திருமணம்

மத்திய தொழில் வர்த்தக இணை அமைச்சர் ஈ.வெ.கி.ச. இளங்கோவன் - வரலட்சுமி இளங்கோவன் ஆகியோரின் மகன் திருமகன் ஈ.வெ.ரா. - பூர்ணிமா திருமண நிகழ்ச்சி, ஜூன் 6ம் தேதி காலை சென்னையில் பகுத்தறிவு சுயமரியாதைத் திருமணமாக சிறப்புடன் நடைபெற்றது. எந்த மூடச் சடங்குகளும் இல்லை. மணமகனும் - மணமகளும், திருமணப் பதிவேட்டில் கையெழுத்திட, விருந்தினர்கள் வாழ்த்தொலிக்க மணவிழா நிறைவடைந்தது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் நல்லக்கண்ணு, வரதராசன், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ஆகியோர் பதிவேட்டில் சாட்சிகளாக கையொப்பமிட்டனர். இது தந்தை பெரியார் - ஈ.வெ.கி. சம்பத் இல்லத் திருமணம் என்று அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. கலைஞர், ஆந்திர முதல்வர், மத்திய அமைச்சா பிரணாப் முகர்ஜி மற்றும் அனைத்துக் கட்சியினரும் மணவிழாவுக்கு வந்திருந்தனர். மாலை நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆட்சிக் குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், மணமக்களை வாழ்த்தினர். மணமகன் பெரியார் கொள்கையில் தீவிரமான ஈடுபாடுக் கொண்டவர் என்று, ஈ.வெ.கி.ச. இளங்கோவன், அறிமுகப்படுத்தினார்.

## 'ஜெ.' ஆணவம்; புகழ் மாலை சூட்டியவர்களே கூறுகிறார்கள்

"தமிழக முதல்வரும் - அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா அவர்களின் ஆணவத்துக்கும், ஆட்சிப் போக்குக்கும் சரியான அதிரடி, இந்தத் தோல்வி."

- தேர்தல் முடிவுகள் வெளிவந்த நாளில்
தி.க. தலைவர் கி.வீரமணி அறிக்கை. 'விடுதலை' மே, 13.

தமிழகத்தில் ஆளும் கட்சி அடைந்த தோல்விக்கு அதன் பொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் அகங்காரம் தான் காரணம் என்று காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரர் நவி. மும்பையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் தெரிவித்தார்.

நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அடைந்த படுதோல்விக்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானது அதன் தலைவர் ஜெயலலிதாவின் அகங்காரம். மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களை அவர் கட்டுப்படுத்திய விதம்,அவர்களை பதவியிலிருந்து அகற்றியது போன்றதெல்லாம் தான் அவரதுதோல்விக்குக் காரணமாக உள்ளது. இப்போது அவர் பழைய நடவடிக்கைகளை மாற்றி வருகிறார். இதை அவர் தேர்தலுக்கு முன்னதாக செய்திருந்தால், ஓட்டு கிடைத்திருக்கும். சோகத்தில் இருந்த அரசு ஊழியர் குடும்பங்கள் ஜெயலலிதாவுக்கு ஓட்டுப் போடவில்லை. அவர் தனது ஆட்சியில் போட்ட சட்டத்தில் அமுல்படுத்தியது அரசு ஊழியர்களின் பதவி பறிப்பு சட்டத்தை மட்டும் தான் - பிற சட்டங்கள் எல்லாவற்றையும் அமுல் செய்யவில்லை. மத மாற்றத் தடைச் சட்டத்தையும் வாபஸ் பெற்று விட்டார். இப்போது ரத்து செய்து என்ன பயன்? எல்லாம் தான் முடிந்து விட்டதே! இது போன்ற ஆலோசனைகள் எல்லாம் யார் அவருக்கு சொல்கிறார்கள் என்பது அந்த 'ஆண்டவனு'க்குத் தான் தெரியும். நான் நினைக்கிறேன், அவருக்கு அவர் தான் ஆலோசகராக இருப்பார் என்று."

- காஞ்சி சங்கராச்சாரி மும்பை பேச்சு 'காலைக்கதிர்' 7.6.2004

தலையங்கம்

# குடியரசுத் தலைவர் உரை

மத்தியில் ஆளும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி முன் வைத்த பல செயல் திட்டங்களை – நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் பேசிய குடியரசுத் தலைவர், தனது உரையின் மூலம் அங்கீகரித்துள்ளார். பல செயல் திட்டத்தின் நல்ல அம்சங்களை வரவேற்று, இதே பகுதியில் நாம் எழுதியிருக்கிறோம். பொடா சட்டம் திரும்பப் பெறப்படும் என்று, குடியரசுத் தலைவர் அறிவித்துள்ளார். இந்த நிலையில், மாநில அரசுகள், இனி ‘பொடா’வைப் பயன்படுத்தவே கூடாது என்று வற்புறுத்த விரும்புகிறோம். சட்டரீதியாக ‘பொடா’ திரும்பப் பெறுவதற்கு, இன்னும் சிறிது காலம் தேவைப்படும் என்பதால், அது வரை சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்று கருதி மாநில அரசுகள் செயல்படக் கூடாது. மத்தியில் புதிய ஆட்சி பொடாவை ரத்து செய்வோம் என்று அறிவித்த பிறகும், தமிழக அரசு ‘பொடா’ சட்டத்தை பயன்படுத்தியிருக்கிறது (சுப.இளவரசன் வழக்கு). குஜராத் மாநில ஆட்சி, ‘பொடா’வைவிட மோசமான ஒரு சட்டத்தை மாநில அளவில் அவசர அவசரமாக நிறைவேற்றியிருக்கிறது. தமிழகத்திலும், குஜராத்திலும் நடக்கும் மக்கள் விரோத ஆட்சிகள் அடக்குமுறை சட்டங்களை நம்பித்தான் ஆட்சி செலுத்த வேண்டியிருக்கிறது. இது கண்டிக்கத்தக்கதாகும்.

தனியார் துறை இடஒதுக்கீடு பற்றி, தொழில் நிறுவனங்களிடமும், அரசியல் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தப் போவதாக குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிட்டிருப்பது, பிரச்சினையைக் கிடப்பில் போடும் முயற்சியோ என்ற சந்தேகத்தை உருவாக்கி இருக்கிறது. மகாராஷ்டிரா மாநில அரசு, தனியார் துறைகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 51 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்திருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இது பாராட்டி வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். ஆனால் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த விடாமல், பன்னாட்டு நிறுவனங்கள் மிரட்டத் துவங்கியிருக்கின்றன. பார்ப்பன ஆதிக்கத்தில் உள்ள பார்ப்பன – பன்னாட்டு நிறுவனங்களிடம் சமரசம் பேசி அவர்கள் ஒப்புதலோடு, இடஒதுக்கீட்டைக் கொண்டு வர முயற்சிப்பது, ‘மயிலே மயிலே இறகு போடு’ என்று கேட்பது போலத்தான். ஒரு போதும் ஆதிக்க சக்திகள் இதற்கு ஒப்புதல் தராது.

அமெரிக்காவில் அனைத்து தொழில்களும், தனியாரிடம் தான் இருக்கின்றன. அங்கெல்லாம், மைனாரிட்டி மக்களான கருப்பர்களுக்கும், ஸ்பானியர்களுக்கும் இடஒதுக்கீடுகள் செய்யப்படும் போது, அதே அமெரிக்க நிறுவனங்கள், இந்தியாவில் மட்டும் அதை எதிர்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

தொழில் நிறுவனங்களுக்கு – உலகில் மிகப் பெரும் சந்தையாக விளங்கும் நாடு இந்தியா. எனவே தான் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவைக் குறி வைக்கின்றன. இந்த நிலையில், எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடிய இடஒதுக்கீடு சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துவிட்டால், இந்த நிறுவனங்கள், மாநில அரசுகளை மிரட்ட முடியாது. தனியார் துறை இடஒதுக்கீடு இல்லாத மாநிலங்களில் முதலீட்டைத் திருப்பி விடுவோம் என்ற அச்சுறுத்தலுக்கு இடமில்லாமல் தடுக்கலாம். மத்திய அரசு இதைத் தீவிரமாக பரிசீலிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

பல்வேறு சிறந்த பொதுச்செயல் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த 100 நாள் வேலை வாய்ப்புக்கான சட்ட உரிமை, தமிழைச் செம்மொழியாக்குதல்; பெண்களுக்கான 33 சதவீத ஒதுக்கீடு போன்ற திட்டங்கள் குடியரசுத் தலைவர் உரையில் இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பொது வேலைத் திட்டத்தில் இடம் பெறாத சில அம்சங்களும், குடியரசுத் தலைவர் உரையில் இடம் பெற்றுள்ளதை சுட்டிக்காட்டி இடதுசாரி கட்சிகள் விமர்சனம் செய்துள்ளன. குறிப்பாக இஸ்ரேல் நாட்டுடன் நட்புறவு தொடரும் என்று வலிந்து கூறப்பட்டுள்ளதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பாக மற்றொரு செய்தியையும் சுட்டிக்காட்டியாக வேண்டும். அண்மையில் வெளிநாட்டுத்துறை அமைச்சரை சந்தித்துப் பேசிய இலங்கை அதிபரின் பிரதிநிதி கதிர்காமர், இந்தியாவுடன் ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஒரு திட்டத்தை முன் வைத்துள்ளார். தமிழர் பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் இயக்கத்தினருடன் சர்வதேச நாடுகளின் தலையீட்டில், சமரசப் பேச்சுக்களை நடத்தி வரும் இலங்கை அரசு, இந்தியாவுடன் ராணுவ ஒப்பந்தம் போட விரும்புவது, பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது. கூட்டணியில் இடம் பெற்றுள்ள தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. கட்சிகள், இது பற்றிய முழு விவரங்களையும் அறிந்து, ஈழத் தமிழர் நலக் கண்ணோட்டத்தில், எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆளும் கூட்டணியில் இடம் பெற்றிருந்தாலும் தவறுகளை சுட்டிக் காட்டிக் களைய வேண்டியது சமுதாயக் கடமையாகும்.

# கலைஞர் பிறந்த நாளில் சமூக நீதி முழக்கங்கள்

ஜூன் 3ம் தேதி - சென்னை தீவுத் திடலில் நடந்த கலைஞரின் 81வது பிறந்த நாள் விழா, சமூகநீதிக்கான உறுதி ஏற்பு விழாவாகவே அமைந்தது. சமூகநீதிக் காவலர் வி.பி.சிங், விழாவில் பங்கேற்று ஆற்றிய உரையும், அதற்கு கலைஞர் தந்த உறுதியும், டாக்டர் ராமதாஸ் முன் வைத்த வேண்டுகோளும், பெரியாரியத்துக்கு வலிமை சேர்த்தன. “சாவு ஒரு முறை தான் வரும் அது பெரிய தண்டனை அல்ல; பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் அவமானத்துக்கு உள்ளாவதுதான், தினமும் ஆயிரம் முறை அனுபவிக்கும் பெரிய தண்டனையாகும். அதை ஒழிக்க பெரியார் பிறந்த இந்த மண்ணில் இயக்கங்கள் நடந்துள்ளன. நான் பிரதமராக இருந்த காலத்தில் மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல் செய்தபோது, குறிப்பிட்ட பிரிவினரின் எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் எனக்கு பக்க பலமாக நின்றவர், கலைஞர் கருணாநிதி. என்னால் எவ்வளவு கஷ்டங்களை அவர் அனுபவித்தார் என்பது எனக்குத் தெரியும். எல்லோருக்கும் இது தெரியும். இந்தக் கூட்டத்தில் இதை நான் ஒப்புக் கொள்கிறேன். அவரது ஆட்சி அதனாலேயே கலைக்கப்பட்டது. எனக்காக அவர் செய்த தியாகங்களை மறக்க முடியாது. சமூக நீதியை மீட்கும் இயக்கத்தை அவரால் தான் நடத்த முடியும்” என்றார் வி.பி.சிங்.

இதற்கு பதிலளித்துப் பேசிய கலைஞர், “நான் முதல்வர் ஆனாலும் ஆகாவிட்டாலும், தமிழக மக்கள் தி.மு.க.விடம் ஆட்சியை ஒப்படைத்தாலும் ஒப்படைக்காவிட்டாலும் ஆட்சிச் செங்கோலை ஏந்தினாலும் ஏந்தாவிட்டாலும், சமூகநீதியைக் காக்கும் போர்வாள் என் கையில் இருக்கும்” என்றார் கலைஞர். ●

## டாக்டர் ராமதாஸ் அறைகூவல்: மீண்டும் கருஞ்சட்டைப் படை

**விழாவில் பேசிய பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் “பெரியார் கொள்கையை சுயமரியாதை கொள்கையை முழு அளவில் வெற்றி பெறச் செய்ய மீண்டும் கருஞ்சட்டைப் படையை அமைக்க வேண்டும். முன்பு போல, கலைஞர் கருஞ்சட்டைப் போட வேண்டும். எங்களையும் போடச் செய்ய வேண்டும். நாங்களும் கருஞ்சட்டை அணிந்து, அவர் பின்னால் அணி வகுக்கத் தயாராக இருக்கிறோம். ஏராளமான இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள்” என்றார்.**

# தமிழர் குடும்பங்கள் பங்கேற்ற ‘தொடரும் தவிப்பு’ நூல் வெளியீட்டு விழா

தோழர் பூங்குழலி எழுதிய ‘தொடரும் தவிப்பு’ நூல் வெளியீட்டு விழா கடந்த 5ம் தேதி மாலை 7 மணியளவில் சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கத்தில் சிறப்புடன் நடைபெற்றது. கவிஞர் தமித்தலட்சுமி வரவேற்புரையாற்ற, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், பேரா. சரசுவதி நூலை வெளியிட, பேரா. பிரபா கல்விமணி நூலைப் பெற்றுக் கொண்டார். வழக்கறிஞர் சந்திரசேகர், கவிஞர் அறிவுமதி கருத்துரை வழங்கினர். நூலாசிரியர் பூங்குழலி ஏற்புரை நிகழ்த்தினார். ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த 26 தமிழர்களின் பிரச்சினைகள்-தேவைகளுக்கு சலிப்பின்றி முகம் கொடுத்து, 13 ஆண்டுகாலம், முழுமையாகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்ட அற்புதம் அம்மாள் சந்தித்தப் பிரச்சினைகளையும், இடர்ப்பாடுகளையும் விவரிக்கிறது இந்த நூல்.

‘இது மனித உரிமைக்களத்தில் நிற்பவருக்குப் பயன்படக்கூடிய அற்புதமான காவியம்’ என்று பேராசிரியர் கல்விமணி குறிப்பிட்டார். அற்புதம் அம்மையாரும், அவருக்கு உறுதியாக துணை நின்ற அவரது துணைவர், கவிஞர் குயில் தாசனும், பாராட்டி, கவுரவிக்கப்பட்டனர். நூலாசிரியர் பூங்குழலியின் இந்த முதல் முயற்சியை அனைவரும் பாராட்டினர். நூல் தயாரிப்புக்கு உதவிய ஓவியர் புகழேந்தி, உட்படப் பலரும் பாராட்டப் பெற்றனர். தமிழர் குடும்பங்களின் உணர்ச்சி சங்கமமாக நடந்தது இந்நிகழ்வு. அரங்கம் நிரம்பி வழிந்தது. நூல் வெளியீடு : தமிழ்க்குலம் பதிப்பாலயம், 33 நரசிம்மாபுரம், சென்னை-600041; விலை : ரூ.60.

# பிரதமர் அலுவலக அதிகாரிகள் - யார்? யார்?

மிகவும் அதிகாரம் கொண்ட அமைப்பு பிரதமர் அலுவலகம்., வாஜ்பாய் பிரதமராக இருந்த போது, பிரதமர் அலுவலகத்தின் முறைகேடுகள் பற்றி பல புகார்கள் வந்தன. இப்போது புதிய பிரதமர் மன்மோகன் சிங்கின் பிரதமர் அலுவலக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவிட்டனர். தனது பிரதமர் அலுவலகத்தில், கடந்த காலத்தில் பிரஜேஷ்வர் மிஸ்ராவைப் போல - சர்வ அதிகாரம் படைத்த தனிமனிதர்கள் உருவாகக் கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங் முடிவெடுத்துள்ளார். பிரதமரின் முதன்மைச் செயலாளராக டி.கே.ஏ. நாயர் நியமிக்கப்பட்டுள்ளார். பஞ்சாப் உட்படப் பல மாநிலங்களில் தலைமைச் செயலாளராகப் பணியாற்றிய இவர், மிகவும் மென்மையான அணுகுமுறை கொண்டவர் என்று கூறப்படுகிறது. இரண்டாவது இடத்தில் இருப்பவர் ஜெ.என்.தீட்சத் எனும் பார்ப்பனர். தேசிய பாதுகாப்பு ஆலோசர் என்ற பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார். ஏற்கனவே இந்தியாவின் இலங்கைத் தூதராக இருந்தவர். கடந்த சில ஆண்டுகளாகவே சோனியாவோடு நெருக்கமாக செயல்பட்டு வருகிறார். காங்கிரஸ் கட்சிக்கு அயல்நாட்டு விவகாரம் பற்றிய ஆலோசனைகளை வழங்கி வந்தார். இவர் காக்காய் பிடிக்கும் கலையில் கை தேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. ரா, அய்.பி. போன்ற புலனாய்வு நிறுவனங்களை இவர்தான் கண்காணிப்பாராம். வெளிநாட்டுத் துறை அமைச்சர் நட்வர்சிங்குடன் பல பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு கொள்பவர் தீட்சத். ஆனாலும், இருவரும் நெருக்கமான நண்பர்களாம்.

மூன்றாவது முக்கிய அதிகாரி எம்.கே.நாராயணன். புலனாய்வுத் துறையின் இயக்குனராக இருந்து ஓய்வு பெற்றவர். கேரள மாநிலம், ‘தீயா’ எனும் தலித் இனத்தைச்

(4ம் பக்கம்)

## அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்: திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம்

**தமிழ்நாட்டுக் கோயில்களில் அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கிட, தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வலியுறுத்தியுள்ளார். இக்கோரிக்கையை வலியுறுத்தி ஜூலை 5ம் தேதி, தமிழக அரசின் முக்கிய அலுவலகங்கள் முன் திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கிறது. மதுரையில் திராவிடர் கழகப் பொதுக்குழு கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கி.வீரமணி இவ்வாறு கூறினார்.**

# வேத மறுப்புக் கருத்துக்களை ஊடுருவி அழித்த பார்ப்பனர்கள்

**(புதுவையில் 24.5.2004 அன்று நடைபெற்ற 'இந்திய வரலாற்றில் பகவத் கீதை' நூல் வெளியீட்டு விழாவில் - நூலின் உள்ளடக்கத்தை விளக்கி - பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரை)** (சென்ற இதழ் தொடர்ச்சி)

- பார்ப்பனர்களின் சடங்கு - யாகங்களில் வெறுப்பும், சலிப்புமடைந்த ஒரு கூட்டம் - காடுகளை நோக்கி, 'தபசு' செய்யப் புறப்பட்டது. பார்ப்பனர்களிலே சிலரும் - பெருமளவு சத்தியர்களுமே, இப்படிக் காட்டை நோக்கிக் கிளம்பியவர்கள். தங்களை வருத்திக் கொண்டு, வாழ்க்கையின் துயரங்களுக்கு விடை தேடும் முயற்சிகளில் இவர்கள் இறங்கினார்கள். இவர்கள் யாகங்களை எதிர்த்தனர். அதைவிட 'தியானமே' சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார்கள். இவர்கள் அப்போது எழுதிய நூல் தொகுதிகளுக்குப் பெயர் "ஆரண்யகங்கள்". யாக மந்திரங்களின் மோசடிகளையும், புரோகிதர்களின் நயவஞ்சகத்தையும், இந்த 'ஆரண்யகங்கள்' தோலுரித்தன. இயற்கையின் புதிர்களுக்கான விடைகளை பகுத்தறிவின் அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கினர்.
- முதலில் வந்த 'ஆரண்யகங்கள்' பிராமணங்களின் 'கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டன. பிறகு பிராமணங்களை முற்றாக ஒதுக்கிவிட்டு ஆரண்யகங்களை விரிவுபடுத்தி எழுதினார்கள். அதுதான் 'உபநிஷத்துக்கள்'. புத்தமதம் தொடங்கப்படும் காலம் வரை, இந்த உபரிஷதங்கள் புதிது புதிதாக வந்து கொண்டே இருந்தன. உபரிஷதங்களின் காலம் - புத்த மதம் தொடங்கிய கி.மு. நான்காம் நூற்றாண்டோடு முடிவடைந்து விட்டது. உபநிடதங்களின் காலம் முடிவுக்கு வந்தாலும் கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரை உபநிடதங்கள் எழுதப்பட்டுக் கொண்டே இருந்தன. உபநிடதங்களில் வேதத்துக்கு எதிரான கருத்துகளும் உண்டு. ஆனால் பார்ப்பனர்கள், வேதங்களின் இறுதி வடிவமே உபநிடதங்கள் என்று கூறுகிறார்கள். இதில் அடங்கியுள்ள கருத்துகளுக்கு 'வேதாந்தம்' என்று பெயர்.

200க்கும் மேற்பட்ட உபநிடதங்கள் இருக்கின்றன. ஆனால் வேதத்தோடு இணைத்துப் பார்க்கப்படுவது 108 உபநிடதங்கள் தான். ஆனால், புரோகிதக் கலாச்சாரத்துக்கு, சத்திரியர்களிடமிருந்து (அரசாளும் பிரிவு) எழுந்த முதல் எதிர்ப்பை உபநிடதங்களில் காண முடிகிறது.

> வேதத்தை மறுப்பவர்களை 'நாத்திகர்கள்' என்றும் வேதத்தை நம்புகிறவர்களை 'ஆத்திகர்கள்' என்றும் பார்ப்பனர்கள் பிரச்சாரம் செய்தார்கள். ஆத்திகம்-நாத்திகம் என்பது பார்ப்பனர்கள் உரு வாக்கிய சொற்றொடர்களே!

- அரசர்களாக இருந்த சத்திரியர்களுக்கும், புரோகிதப் பார்ப்பனர்களுக்கும் சமூகத்தில் யாருக்கு அதிக அதிகாரம் என்பதில், பகைமை முற்றிக்கொண்டே வந்தது. சில சத்திரிய மன்னர்களே, பார்ப்பனர்களின் வேதங்களையும், யாகங்களையும் கற்றுக் கொண்டு, புரோகிதர்களைப் புறக்கணித்தனர். உதாரணமாக ஜனமே ஜெயன் என்ற மன்னன், புரோகிதர்களை அழைக்காமலே யாகம் நடத்தினான்.
- உபநிடதங்களில் மறுபிறப்பு - மறு உலகம் - கடவுள் - ஆன்மாவை மறுக்கும் கருத்துக்கள் அங்குமிங்குமாக காணப்படுகின்றன. 'சுவம் சவேதம்' என்ற ஒரு உபநிடதம் பகுத்தறிவுக் கருத்துக்களைக் கூறுவதோடு மூடநம்பிக்கைகளைச் சாடுகிறது.
- ஆனால், ஒரு திட்டமிட்ட வரலாற்று மோசடி அரங்கேற்றப் பட்டது. பகுத்தறிவைப் பேசிய உபநிடதங்களைப் பார்ப்பனர்கள் முழுமையாகப் புறக்கணித்தார்கள். கருத்து முதல்வாத அடிப்படையில் ஆன்மீகம் பேசிய உபநிடதங்களை மட்டுமே பார்ப்பனர்கள் பிரகடனப்படுத்தினார்கள். இப்போது தொகுக்கப்பட்டுள்ள 'வேதாந்தத்தில்' கருத்து முதல்வாதத்தை முன்னிறுத்தும் - 'ஆன்மீகம்' பேசும் உபநிடதங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இந்திய தத்துவ இயலில் இதுவே அதிகாரபூர்வமானது என்று உறுதியாக்கி விட்டார்கள். முதலில் வேதங்கள் - பிறகு பிராமணங்கள்; இதிலிருந்து ஆரண்யங்கள்; இறுதியாக உபநிஷத்துக்கள் என்று வந்து, 'வேதாந்தம்' என்று இறுதி வடிவம் எடுத்தது. சகமனிதனாக வேதங்களில் பாடப்பட்ட கடவுள்களை விண்ணுலகத்தவராக மாற்றி, பார்ப்பனர்கள் முதலில் மதிக்கப்பட்ட மனிதர்கள் என்ற நிலையிலிருந்து, புரோகிதர்களாக மாறி ஆதிக்கவாதிகளானார்கள். அடுத்த கட்டமாக, தங்களையும் கடவுளுக்கு சமமாக்கிக் கொண்டார்கள். இறுதியாகத் தங்களையே கடவுளுக்கும் மேலானவர்களாக்கிக் கொண்டனர்.

இப்படித்தான் புரோகிதர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைப் படுத்திக் கொண்டனர்.

- வேதங்களில் துவங்கி - வேதாந்தம் வரை பல்வேறு மாறுதல்களுக்குட்பட்ட சிந்தனைப் போக்குகளில் - வேத எதிர்ப்புக் கருத்துக்களும் உள்ளடக்கமாக இருந்தாலும் - வேதச்சார்பு சிந்தனைகளை மட்டுமே பார்ப்பனர்கள் வேதாந்தமாக்கி - மற்றவைகளை ஒதுக்கி விட்டதையும் பார்த்தோம். இதனைத் தொடர்ந்து மேலும் பல சிந்தனைகளும் இருந்தன. பூர்வ மீமாம்சம், உத்திர மீமாம்சம் அல்லது வேதாந்தம், வைசேஷிகம், நியாயம், சாங்கியம், யோகம் - எனும் 6 சிந்தனை மரபுகள் தோன்றின. இவைகளில் வைசேஷிகம், நியாயம், சாங்கியம், யோகம் ஆகிய நான்கு மரபுகளும் பகுத்தறிவை நோக்கியே சிந்தித்தன. ஆனாலும் நாட்கள் செல்ல செல்ல - பழமைப் போக்குடன், இவைகள் சமரசம் செய்து கொண்டன.

> சில சத்திரிய மன்னர்களே, பார்ப்பனர்களின் வேதங்களையும், யாகங்களையும் கற்றுக் கொண்டு, புரோகிதர்களைப் புறக்கணித்தனர். ஜனமே ஜெயன் என்ற மன்னன், புரோகிதர்களை அழைக்காமலே யாகம் நடத்தினான்.

- சாங்கியம் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க - பகுத்தறிவுச் சிந்தனையாகும். இந்தச் சிந்தனைக்கு வடிவம் கொடுத்தவர் கபிலர் என்ற பார்ப்பனரல்லாதவர் இவரை 'அசுரர்' என்று குறிப்பிடுகிறார்கள். சாங்கியச் சிந்தனைகளை 'அசுரர்களுக்கு' கற்றுத் தந்ததாக, 'பாகவதம்' குறிப்பிடுகிறது. உலகம் படைக்கப்பட்டது அல்ல; அது பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டது என்ற பகுத்தறிவு அடிப்படையிலான பரிணாமக் கோட்பாடு சிந்தனைக்கு ஏற்ப இதன் கோட்பாடுகள் அமைந்திருந்தன. ஆனாலும், இதிலும் பார்ப்பனியக் கருத்துகளைப் பார்ப்பனர்கள் தந்திரமாக நுழைத்து விட்டார்கள். "சாங்கியம் - கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டது; வேதப் புரட்டுகளுக்கு எதிரானது. பின்னாட்களில் இதில் வேதங்களுக்கு ஆதரவான கருத்துகள் இடைச் செருகல்களாக சேர்க்கப் பட்டுள்ளன. இவைகளை எல்லாம் வெட்டி எறிந்துவிட்டால் கூட, சாங்கிய மூலக் கருத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை; இதிலிருந்தே இவை இடைச் செருகல் என்பதை உறுதி செய்ய முடியும்" என்கிறார், ஆய்வாளர் கார்பே. வைசேஷியகம், நியாயம், சாங்கியம், யோகம் ஆகிய சிந்தனை களின் பகுத்தறிவுக் கருத்துக்களை பார்ப்பனர்கள் ஊடுருவி சிதைத்த பிறகு, வேண்டா வெறுப்பாக, இவைகளையும் பார்ப்பனர்கள் அங்கீகரித்தார்கள்.
- கபிலரைப் போலவே - மற்றொரு சிந்தனையாளர் கணாதர். இவர் சிந்தனைகளைத் தோற்றுவித்தது வைசேஷிகம். இவர் கூறிய 'அணு' பற்றிய கொள்கைகள் - தாராள சிந்தனைக்கு தூண்டுதலாக இருந்தது. கபிலர், கணாதர் வழிவந்த சிந்தனையாளர்கள் - எவ்வித சமரசத்துக்கும் இடம் கொடுக்காமல் வேதக் கடவுள்கள், யாகங்கள், மந்திரங்கள், சடங்குகள், உபநிடதங்கள், உட்பட அனைத்தையும் ஒட்டு மொத்தமாக நிராகரித்து, தூக்கி எறிந்தார்கள்.
- கி.மு. 6-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு சமயத் தொண்டு அமைப்பு உருவானது. இந்த அமைப்பில் இடம் பெற்றவர்களின் பெயர் 'பரிவிராஜகர்' என்பதாகும். இவர்கள் - நாடோடிகள். வீட்டை விட்டு வெளியேறி ஊர் ஊராகச் சென்று மக்களை சந்தித்து, வைதீகப் பார்ப்பனியத்துக்கு எதிரான மதமறுப்புப் பிரச்சாரங்களை செய்தனர். பார்ப்பன புரோகிதர்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வந்தாலும், அது பற்றிக் கவலைப்படவில்லை. அறிவுப் புரட்சி நடப்பதற்கான களம் அமைத்துக் கொடுத்தவர்கள் இவர்கள் தான்.

"இவர்களில் பார்ப்பனர்கள் எவரும் இல்லை. இவர்களின் கருத்துக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. மன்னர்கள், சான்றோர்கள், அரசு அலுவலகர்கள், வணிகர்கள், கைவினைஞர்கள், உழவர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் பரிவிராஜகர்களை வரவேற்று பெருமதிப்புச் செய்தனர்" - என்று ரைஸ்டேவிட்ஸ் என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார். இவர்களுக்காக - மக்கள் ஊர் தோறும் மேடைகளை அமைத்துக் கொடுத்தார்கள்.

- வேத - யாகங்களில் நம்பிக்கை இல்லாமல், வீட்டை விட்டு வெளியேறி காடுகளுக்குச் சென்று, 'தவம்' செய்த கால கட்டத்தைத் தொடர்ந்து - காடுகளுக்குச் செல்லாமல், ஊர்தோறும் சென்று மக்களை சந்தித்து சிந்தனைகளைப் பரப்பும் அமைப்பு உருவாகி, அறிவுப் புரட்சிக்கு அடித்தளமிட்டது. பரிவிராஜகர்கள் - துறவிகளின் கூட்டமைப்பு ஒன்றையும் உருவாக்கினார்கள். இதிலிருந்து முகிழ்த்தது தான், பவுத்தம், சமணம்.
- சுய சிந்தனையாளர்களின் வளர்ச்சி, பார்ப்பனர்களுக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்தன. இவர்கள் மீது வெறுப்பைத் தூண்டிவிடும் பிரச்சாரத்தைப் பார்ப்பனர்கள் மேற்கொண்டார்கள். வேதத்தை மறுப்பவர்களை 'நாத்திகர்கள்' என்றும் வேதத்தை நம்புகிறவர்களை 'ஆத்திகர்கள்' என்றும் பார்ப்பனர்கள் பிரச்சாரம் செய்தார்கள். ஆத்திகம்-நாத்திகம் என்பது பார்ப்பனர்கள் உருவாக்கிய சொற்றொடர்களே! (கடவுளை மறுப்பவர்கள் நாத்திகர்கள் அல்ல; வேதத்தை மறுப்பவர்களே நாத்திகர்கள் என்று இறந்து போன சங்கராச்சாரியும் கூறியிருக்கிறார்.)
- பவுத்த - சமண மதங்களுக்கு அடித்தளமிட்ட மற்றொரு சிந்தனை 'லோகாயதா'. இந்தச் சொல்லுக்கு 'மக்களிடையே பரவி இருப்பது' என்பது பொருள். இது முழுமையான கடவுள் - வேத மறுப்பு சிந்தனைகளைக் கொண்ட அமைப்பு. ரிக்வேத காலத்திலேயே - இது தோற்றம் கொண்டுவிட்டது. ஆனால் லோகாயதவாதிகளின் நூல்கள் முழுவதையும் பார்ப்பனர்கள் - அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அழித்துவிட்டார்கள். இவர்களின் முக்கிய இலக்கியமான 'பிரகஸ்பதி சூத்திரம்' (கி.பி.600) முழுதுமாக அழிக்கப்பட்டுவிட்டது. பார்ப்பனர்களின் 'இதிகாசங்களிலும்', புத்தரது உரையாடல்களிலும்

(4ம் பக்கம்)

(2 பக்கத் தொடர்ச்சி)

சார்ந்தவர். சோனியாவும், மன்மோகன் சிங்கும் விரும்பி இவரைத் தேர்வு செய்துள்ளனர். ராஜிவ்காந்தியோடு நெருக்கமாக இருந்தவர். ஜம்மு காஷ்மீர், வடகிழக்கு மாநிலப் பிரச்சினைகள் உட்பட உள்நாட்டு மோதல்களை சமாளிப்பதற்கான ஆலோசகராக செயல்படுவார் என்று தெரிகிறது.

மற்றொருவர் எ.என்.வோரா. முன்னாள் உள்துறைச் செயலாளர். ஜம்மு காஷமீர் மாநிலத்தில் பல்வேறு விடுதலைக் குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியவர். இது தவிர, பிரதமர் அலுவலகத்தில் பிரிதிவிராஜ், சவான் என்ற இணை அமைச்சர் இடம் பெற்றுள்ளார். இவர் காங்கிரஸ்காரர். கொள்கைகளை விவாதித்து, கட்சி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுக்கும் பணிகளில் கடந்த காலங்களில் ஈடுபட்டு வந்தார். உண்மையாக செயல்படக் கூடியவர் என்று பிரதமரின் நம்பிக்கையைப் பெற்றவர். கூட்டணி கட்சி உறுப்பினர்களோடு அரசியல் தொடர்புகளை மேற்கொள்ளும் பொறுப்பு இவருக்கு தரப்பட்டுள்ளது.

இவர்கள் எல்லோரையும் விட - மிகவும் அதிகாரம் வாய்ந்த பொறுப்பில் - பிரதமர் அலுவலகத்தில் நியமிக்கப்பட்டுள்ளவர் புலோக் சாட்டர்ஜி. அமைச்சரவையால் செய்யப்படும் நியமனங்களுக்கான கமிட்டியின் பொறுப்பை இவர் கவனிப்பார். சோனியா எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, 1999-ல் அவரின் தனி உதவியாளராக செயல்பட்டு, சோனியாவின் நம்பிக்கையைப் பெற்றவர் இவர்.

சோனியா குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை அமுல்படுத்தும் ஆலோசனைக்குழுவின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். பிரதமர் மன்மோகன் சிங்கின் வீட்டுக்கு, சோனியாவே சென்று சந்தித்துள்ளார். இந்த நிலையில், இதன் மூலம் யார் யாரைப் போய் சந்திப்பது என்ற பிரச் சினைக்கு சோனியா முற்றுப்புள்ளி வைத்துள்ளார். அதோடு சோனியாவின் அரசியல் ஆலோசகர்களான அகமதுபட்டேல், அம்பிகாசோனி, சாலமன் குர்ஷித், ஜெய்ராம் ரமேஷ் ஆகியோர் அரசாங்க நடவடிக்கைகளில், தலையீடு செய்யக் கூடாது என்று கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பிரதமர் அலுவலகம் - இருக்குமிடம் ‘சவுத் பிளாக்’; உள்துறை அமைச்சர் இருக்குமிடம் ‘நார்த் பிளாக்’; கடந்த கால ஆட்சிகளில், இரண்டு பிரிவுகளும், கருத்து வேறுபாடுகளுடனேயே செயல்பட்டன. இப்போது நிலைமை மிகவும் சுமூகமாக இருக்கிறது என்கிறார்கள். மிக முக்கியத் துறைகளான உள்துறை (சிவராஜ் பட்டீல்), நிதி (சிதம்பரம்), வெளிநாட்டுத் துறை (நட்வர்சிங்), பாதுகாப்புத் துறை (பிரணாப் முகர்ஜி)களை நிர்வகிக்கும் அமைச்சர்கள், பிரதமரோடு மிகவும் சுமூகமான உறவு கொண்டவர்கள். இத்தகைய சுமூகமான ஒத்துழைப்புகளோடு செயல்படும் வாய்ப்பைப் பெற்றுள்ள ஒரு பிரதமர், நீண்ட காலத்துக்குப் பிறகு மன்மோகன்சிங் தான் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ●

# பெண்களை இழிவு செய்யும் பழமொழிகள்

## பூ. மணிமாறன்

நம்முடைய கலாச்சாரத்தில் காணப்படுகின்ற ஆயிரக்கணக்கான பழமொழிகளை, ஏதோ ஒரு முனிவர் ஆசிரமத்தில் அமர்ந்து கொண்டு எழுதவில்லை. பழமொழிகளுக்கு இவர்கள் தான் ஆசிரியர்கள் என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவும் முடியாது. கிராமப்புறங்களில் வாழும் சாதாரண மக்கள் தான் பழமொழிகளுக்கு ஆசிரியர்கள். அவர்களுடைய வாழ்வியல் சூழலே பழமொழிகளின் பிறப்பிடம் என்பதில் ஐயமில்லை. அன்றாட வாழ்வில் மக்கள் படுகின்ற கஷ்டங்கள், தாக்கத்தை ஏற்படுத்தும் அனுபவங்கள், கசப்பான உணர்வுகள், கண்ணீர்க் கதைகள், உலகப் பார்வை, உலக மதிப்பீடுகள் இவையனைத்தும் பழமொழிகளின் பிறப்புக்கு மூல காரணங்களாக அமைகின்றன. எந்த ஒரு பழமொழியும் அன்றாட வாழ்வை விட்டு தன்னையே தனிமைப்படுத்திக் கொண்ட நிலை இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. மனிதனின் அன்றாட அனுபவச் சிக்கல்களோடு பின்னிப் பிணைந்தவை தான் பழமொழிகள். ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு தாலியைக் கட்டு என்ற பழமொழியில், மனிதன் திருமணச் சடங்குகளில் சந்திக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றான்.

இப்படி மனித அனுபவங்களிலிருந்து பிறப்பெடுக்கும் பழமொழிகள் சமூகத்தில் வாழும் ஆணையும், பெண்ணையும் சமமாகப் பார்க்கவில்லை என்பது தான் பரிதாபம். ஆச்சரியம் ஏனென்றால், சமூகம் என்பது ஆணை மட்டுமோ அல்லது பெண்ணை மட்டுமோ தனித்தனியே கொண்டதல்ல. பழமொழிகளில் பெண்களை மட்டும் ஏன் இரண்டாம் நிலைக்கும், இழிநிலைக்கும் தள்ள வேண்டும் என்று ஆழமாக அலசிப் பார்க்கும் போது, ஆண்மை மற்றும் ஆணாதிக்கச் சிந்தனையும் மேலோங்கி நின்றதே காரணங்களாகத் தெரிகின்றன சர்வதேச அளவில் சமூக அமைப்பு என்று எடுத்துப் பார்க்கும் போது, இந்த ஆணாதிக்க சிந்தனைப் பெண்ணை இழிவாகவே கருதி வந்துள்ளது. அந்தச் சிந்தனையிலிருந்து வெளிப்படுவதுதான் “கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்,” “பெண்டிர்க்கு அழகு பேசாதிருத்தல்” என்ற பழமொழிகள்.

‘இளமைத் திருமணம் நீண்ட கால அன்பு’ என்ற பழமொழிதான் குழந்தைத் திருமணத்திற்கு வித்திட்டிருக்கலாம். மேலும், வாழப் பெண் தாயோட, வாழாத பெண்ணுக்கு மை ஏண்டி, பொட்டு ஏண்டி, மஞ்சள் குளிப்பு ஏண்டி, என்ற பழமொழிகள் கல்யாணம் முடித்த பெண் பல்வேறு காரணங்களால் கணவனோடு வாழ முடியவில்லையென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சப்தமிட்டுச் சொல்கின்றன. விதவையானாவள் சுத்தமாகவும் மஞ்சள் போட்டு குளிக்கவும் கூடாதென்பது எந்த விதத்தில் நியாயமானது? பெண் என்றால் பேயும் இறங்கும், பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும் என்ற பழமொழிகள் பெண்கள் பலவீனம் உள்ளவர்கள் என்று உறுதிபடக் கூறுகின்றன. இப்படி இன்னும் பல கலாச்சாரக் கூறுகள் பெண்களை அடிமைப்படுத்துகின்றன. மேலும் ஆணுக்கு நிகர் பெண்ணில்லை”, ஆணுக்கு இணையாக பெண் சிந்திக்க முடியாது செயல்பட முடியாது என்ற ஆணாதிக்கக் கருத்தியலும் வெளிப்படுகிறது.

தொடர்பு என்பது இருவருக்கிடையே நடைபெறுகிறது. தொடர்புபடுத்துவதில் சம்பந்தப்பட்ட இருவருக்கிடையே ஒரு உறவு ஏற்படுகிறது. ஒருவர் ஒரு கருத்தை வெளிப்படுத்தும் போது, அதற்கு அதைக் கேட்பவர் பதில் மொழி கொடுக்க வேண்டும். இது நிகழும் போது தான் ஆரோக் கியமான ஒரு தொடர்பு இருக்க முடியும். பெண்களை மையப்படுத்திய பழமொழிகளைச் சூழ்நிலைக்கேற்ப எல்லோரும் சொல்லும்போது பழமொழி சொன்னவருக்கும், சொல்லப்பட்டவருக்கும் இடையே உள்ள தொடர்பு அறுத்துவிடுகிறது. பழமொழியைக் கேட்கும் ஒரு பெண் அது சரியா? தவறா? என்று யோசிப்பதில்லை உதாரணமாக, “பெண்டிற்கு அழகு பேசாதிருத்தல்”, “அடக்கமே பெண்ணுக்கு அழகு”, “மௌனி குடியைக் கெடுப்பாள்” போன்ற பழமொழிகளை அடிக்கடி கேட்கும் போது, இதில் தவறேதுமில்லை என்று எண்ணிக் கொண்டு பெண்கள் பேசாதிருந்துவிடுகிறார்கள். இப்படிப் பழமொழிகளில், ஒரு சுமூகமான தொடர்புபடுத்துதல் இல்லை என்பதும் வெளிப்படுகிறது.

எல்லாப் பழமொழிகளிலும் போலவே தமிழிலும் பெண்ணை மையப்படுத்திப் பேசும் பழிமொழிகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. இந்த பழிமொழிகள் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அளவில் ஒரு சிலவற்றைத் தவிர, பெரும்பாலானவை பெண்ணை ஒரு கேலிக் காரியாகத்தான் சித்தரிக்கின்றன. பெண் பிள்ளையாய்ப் பிறந்ததிலிருந்து தள்ளாடும் கிழவியாகும் வரை, ஒரு பெண் பல்வேறு நிலைகளில் மனம் வெதும்பும் அளவில் பழமொழிகளில் பேசப்படுகிறாள். இந்தப் பூமியில் பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, காதலியாக, மனைவியாக, தாயாக, விதவையாக, மாமியாராக, கிழவியாக இருந்த தன்னுடைய கடமைகளை ஆணுக்கு விரும்பிய வகையில் செவ்வன செய்து வரவேண்டும் என்று பழமொழியில் சொல்லப்படுகிறது! (தொடரும்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29,
பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை - 600 041.
தொலைபேசி: 2451 2857, 2847 4830

### பா.ஜ.க. தலைவராக ஜோஷி தீவிர முயற்சி

வேத சோதிடப்புலி முரளி மனோகர் ஜோஷி தேர்தலில் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, கட்சித் தலைவர் பதவியைப் பிடிக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளார். “இப்போது எனக்கு எந்த வேலையும் இல்லை; கட்சியை பலப்படுத்தும் தீவிர நடவடிக்கைகளில் இறங்க முடியும். எனவே, என்னை பா.ஜ.க. தலைவராக்குங்கள்” என்று, ஆர்.எஸ்.எஸ். தலைமையிடம் கூறி வருகிறார். ஆர்.எஸ்.எஸ். தலைமையும் ஜோஷிக்கு ஆதரவாக, பா.ஜ.க. தலைவர்களிடம் பேசி வருகிறது. ஆனால், பா.ஜ.க.வின் இரண்டாம் நிலை தலைவர்கள், ஜோஷியை ஆதரிக்கவில்லை; “தேர்தலில் தோற்றவர்கள் கட்சித் தலைவரானால், அது எதிர் விளைவுகளை உண்டாக்கிவிடும். பிறகு, தோற்றுப் போனவர்களை எப்படி அமைச்சராக்கினீர்கள் என்று நம்மால் ஆளும் கட்சியைக் கேட்க முடியாமல் போய் விடும்” என்கிறார்கள்.

### வழக்கறிஞர் குமாரதேவன் நன்கொடை

வழக்கறிஞர் குமாரதேவன் - தனது மணவிழா நாளையொட்டி கழக வளர்ச்சிக்கு ரூ.1000 நன்கொடை வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

### முல்லை வேந்தன் வணிக நடுவம் திறப்பு விழா

மேட்டூர் பாப்பம்மாள் திருமண மண்டபம் அருகில் முல்லை வேந்தன் வணிக நடுவம் என்ற பெயரில் கடை திறப்பு விழா 30.5.2004 ஞாயிறு காலை 11.00 மணிக்கு நடைபெற்றது. வழக்கறிஞர் அர்ச்சுனன் தலைமையில் மேட்டூர் முன்னாள் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பா.கோபால், காண்டிராக்டர் வ. மாதுராஜ், செ.பெ. சீரங்கன் ஆகியோர் முன்னிலையில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி கடையினை திறந்து வைத்தார்.

மின் கட்டணத்தை தவிர்க்க சூரிய ஒளி மின்சாதனங்கள், கடை, வீடு, வாகன திருட்டை தடுக்க பாதுகாப்பு அலாரம், கொசுக்கடியிலிருந்து பாதுகாக்கும் நெட்லான், சன்னல் வலைகள், குளியல் அறை, கழிப்பறைகளுக்கு துருப் பிடிக்காத பி.வி.சி., பைபர், சின்டெக்ஸ் கதவுகள், மின் தடையை சமாளிக்க பேட்டரி வகைகள் மேலும், வீடு கட்டுமானத்திற்குத் தேவையான இரும்பு, வண்ணம், மின்சாதனப் பொருட்கள் போன்றவை விற்பனைக்கு உள்ளன.

சேலம் மாவட்டக் கழக அமைப்பாளர் தோழர் முல்லைவேந்தன், கனகா ஆகியோரின் மகன் அகராதி (எ) அகரன் ஆறாவது பிறந்த நாள் (29.5.2004) முல்லை வேந்தன் வணிக நடுவம் திறப்பு விழா ஆகிய நிகழ்வுகளை முன்னிட்டு கனகா முல்லை வேந்தன் தம்பதியினர் தலைமைக் கழக கட்டட நிதியாக ரூ.1000 நன்கொடையாக கழகத் தலைவரிடம் வழங்கினர்.

(3 பக்கத் தொடர்ச்சி)

லோகாயத வாதம் பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன. “இந்தியப் பொருள் முதல் வாத சிந்தனைகளை (பார்ப்பன வேத - எதிர்ப்பு சிந்தனை) அவற்றின் எதிர்ப்பு இலக்கியங்களிலும், திறனாய்வு நூல்களிலும் காணப்படும் மேற்கோள்களிலிருந்து மட்டுமே அறிய முடிகிறது” என்கிறார், முன்னாள் குடியரசுத் தலைவரும் - இந்து மத ஆய்வாளருமான பார்ப்பனர் இராதா கிருஷ்ணன்.

- லோகாயதக் கருத்துக்களை எளிமையாக விளக்கியவர் - சார்வாகர். இதனால் பார்ப்பனர்களின் பழிப்புக்கும், தூற்றுதலுக்கும் உள்ளானார். ‘சார்வாகம்’ என்ற சொல்லுக்கு ‘இனிமையான பேச்சு’ என்று பொருள்.

இப்படி பரிவிராஜகர்களின் நாடு தழுவிய பிரச்சாரமும், சார்வாகரின் லோகாயதமும் - பவுதத சமண சிந்தனைகளுக்கு அடித்தளமிட்டன.

**பவுத்தம் உருவாக்கிய புரட்சி - அடுத்த இதழில்.**

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 10th June 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூன் 17, 2004 | புரட்சி 3 | முழக்கம் 23 | விலை : ரூ.2.50

## கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அறிக்கை

# தோழர்களுக்கு வேண்டுகோள்!

**கழக சுற்றுப்பயணம் தொடர்பாக தோழர்களுக்கு - கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:**

*கழகத் தோழர்களுக்கு, வணக்கம்.*

*திட்டமிட்டபடி நானும், கழகப் பொதுச்செயலாளர்கள், களப்பணி ஒருங்கிணைப்பாளர்களும், தோழர் களை சந்திக்க வரவிருக்கிறோம். அப்போது - தோழர்கள், கீழ்க்குறிப்பிட்ட பணிகளை முடித்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

1) *'பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு சந்தாக்களை சேர்த்து - சந்தாத் தொகை, முகவரிப் பட்டியலை முடித்து வைத்திருங்கள்.*
2) *கழகத்தின் வெளியீடுகளை - ஏற்கனவே தோழர்களுக்கு விற்பனைக்கு அனுப்பியிருக்கிறோம். நூல் விற்பனைக் கணக்கை இந்தப் பயணத்திலேயே தோழர்கள் முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். விற்கப்பட்ட நூல்களுக்கான தொகையையும், விற்கப்படாமல் இருக்கும் நூல்களையும் ஒப்படைத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.*
3) *நமது கழகவெளியீட்டு நூல்களை தொடர்ந்து வாங்கக் கூடியவர்களின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்து வைக்கவும்.*
4) *மாவட்டத்தில் உள்ள மொத்தக் கழகக் கிளைகளின் எண்ணிக்கையையும், ஏற்கனவே 'பெரியார் முழக்கம்' வாங்கிக் கொண்டிருக்கும் சந்தாதாரர்களின் பெயர்ப் பட்டியலையும் -*
5) *மாவட்டத்தின் கழக உறுப்பினர்கள் - பொறுப்பாளர்களின் பெயர் முகவரியடங்கிய பட்டியலையும் தயார் செய்து வைத்திருக்கவும்.*

*மாவட்டக் கலந்துரையாடல் கூட்டத்தின்போது மேற்குறிப்பிட்ட அனைத்தையும் அவசியம் தவறாது ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.*

### களப்பணி ஒருங்கிணைப்பாளர்கள்

*கழகப் பணிகளை முறைப்படுத்தி - கழக அமைப்புகளை மேலும் வளர்த்து, வலிமைப்படுத்தும் நோக்கத்தோடு, கழகக் களப்பணி ஒருங்கிணைப்பாளர்களின் பொறுப்பில் மாவட்டக் கழகங்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன. களப்பணியாளர்கள் - அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டக் கழகங்களில் கவனம் செலுத்தி, தோழர்களோடு தொடர்பு கொண்டு செயல்படுவார்கள். கழகத் தோழர்கள் அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இதன்படி*

(1) *களப்பணி ஒருங்கிணைப்பாளர் ஏ.கேசவன் - சென்னை, காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம் மாவட்டக் கழக வளர்ச்சிகளுக்காக, கழகத் தோழர் களோடு தொடர்பு கொண்டு செயல்படுவார். அவரது முகவரி: ஏ. கேசவன், 12 தாணா தெரு, புரசைவாக்கம், சென்னை-600 007. பேசி: 044 2550 3879; 094440 53879*

(2) *களப்பணி ஒருங்கிணைப்பாளர் அ. பெரியசாமி - மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, நெல்லை, இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தோழர்களோடு தொடர்பு கொண்டு செயல்படுவார். முகவரி: அ.பெரியசாமி, சின்ன உடைப்பு, அஞ்சல் பயிற்சி மய்யம் (அஞ்சல்), மதுரை-625022. பேசி: 98429 59663.*

(3) *களப்பணி ஒருங்கிணைப்பாளர் இல. அங்ககுமார் - கோவை (வடக்கு), திருச்சி, ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் கழகத் தோழர்களோடு தொடர்புகொண்டு செயல்படுவார். முகவரி: இல. அங்ககுமார், 27, கணேஷ் நகர், தென்னம் பாளையம் கிழக்கு, திருப்பூர்-641604; பேசி: 98427-25598*

(4) *களப்பணி ஒருங்கிணைப்பாளர் ந. பிரகாசு - கோவை மாநகர், கோவை (தெற்கு), திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் கழகத் தோழர்களோடு தொடர்பு கொண்டு செயல்படுவார். முகவரி: ந. பிரகாசு, ராஜீ தையலகம், 68 காந்தி மண்டபம் வீதி, பொள்ளாச்சி-642001. பேசி: 98429-596661.*

(5) *களப்பணி ஒருங்கிணைப்பாளர் திண்டுக்கல் தாமரைக்கண்ணன் - நாகை, தஞ்சை, பெரம்பலூர், தேனீ மாவட்டங்களில் கழகத் தோழர்களோடு தொடர்பு கொண்டு செயல்படுவார். முகவரி: தி. தாமரைக்கண்ணன், 63 வள்ளல் பாரி நகர், அடியனூத்து (அஞ்சல்), திண்டுக்கல்-624 003. பேசி: 98428 82268*

*புதிய கழக அமைப்புகளை உருவாக்குதல் - ஏற்கனவே இருந்து வரும் அமைப்புகளின் செயல்பாடுகளைத் தீவிரமாக்க ஒத்துழைத்தல் உட்பட கழக வளர்ச்சிப் பணிகள், கழகக் களப்பணி ஒருங்கிணைப் பாளர்களின் முக்கிய செயல்பாடாக இருக்கும். தோழர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.*

*இது தவிர கழகக் களப்பணி ஒருங்கிணைப்பாளர் திருப்பூர் அங்ககுமார் - கழக வெளியீடுகளான நூல்களின் விற்பனைக்கான முழு பொறுப்புகளையும் ஏற்று செயல்படுவார்.*

*கழகக் களப்பணி ஒருங்கிணைப்பாளர் ந. பிரகாசு, 'பெரியார் முழக்கம்' இதழ் தொடர்பான - சந்தா திரட்டுதல், புதுப்பித்தல் போன்ற அனைத்துப் பணிகளுக்கும் முழுமையான பொறுப்பை ஏற்று செயல்படுவார்.*

*கழகத்தின் கொள்கைகளை மேலும் விரிவாக - பரந்த அளவில் மக்களிடம் கொண்டு சேர்த்திடவும் - மேலும் தீவிரமாக செயல்படவும், கழக அமைப்புகள் வலிமையாக வேண்டும் என்ற நோக்கத்தோடு, கழகப் பொதுச்செயலாளர்கள், களப்பணி ஒருங்கிணைப்பாளர்களுடன் கலந்துரையாடி இத்திட்டங்களை உருவாக்கியுள்ளோம்; பெரியாரியலை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், மக்கள் ஆதரவைத் திரட்டவும், மத்திய மாநில அரசுகளை செயல்படவைக்கவும், நமது களச் செயல்பாடுகளை வகுத்து செயல்படுவோம்! இது நமது அனைவரின் லட்சியக் கடமை என்ற உணர்வோடு களம் இறங்கிடுவோம்!*

*தங்கள் ஒத்துழைப்பை நாடும்,*

**(த.செ. மணி)**
*தலைவர், த.பெ.தி.க.*

*முகாம்: கோவை*
*13.6.2004*

# அமெரிக்காவில் நாத்திகர் உரிமைக் கிளர்ச்சி

**அ**மெரிக்காவில் - தேசிய ஒருமைப் பாட்டுக்கான உறுதி மொழியில் 'கடவுள்' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இதனால் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்கூட, கடவுளின் பெயரால் உறுதிமொழி எடுக்க வேண்டும். அமெரிக்கா வாழ் நாத்திகர்கள் இதை எதிர்த்து தொடர்ந்து போராடி வருகிறார்கள். கடந்த வாரம் கலிபோர்னியாவைச் சார்ந்த மைக்கேல் நியுடவ் எனும் டாக்டர், தமது மகளின் சார்பில் வழக்குத் தொடர்ந்தார். அவர் ஒரு கடவுள் மறுப்பாளர். தமது மகள் படிக்கும் பள்ளியில் - உறுதிமொழியில் 'கடவுள்' கட்டாயமாக்கப்படுவதைத் தடை செய்ய வேண்டும் என்பது அவரது வழக்கு. அரசும், மத நிறுவன மும் பிரிக்கப்பட்டுவிட்டபோது, அரசு அறிமுகப்படுத்தியுள்ள உறுதி மொழியில் கடவுள் என்ற சொல் இடம் பெறுவது, மதச்சார்பின்மை கொள்கைக்கு எதிரானது என்பது இவரது வாதம். வழக்கை விசாரித்த கலிபோர்னியாவின் கீழ் நீதிமன்றம், இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டது. இத்தகைய உறுதி மொழி அமெரிக்கா வின் அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கது தானா என்ற கேள்வி யையும் நீதிமன்றம் எழுப்பியது. பிறகு வழக்கு அமெரிக்காவின் உச்சநீதி மன்றத்துக்குச் சென்றபோது, கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை தள்ளுபடி செய்துவிட்டது. அதற்கு, நீதிபதிகள் முன் வைத்த கருத்து மகளுக்காக ஒரு தந்தை வாதாடக் கூடாது என்பதுதான்.

அமெரிக்காவின் ஒருமைப்பாட்டு உறுதிமொழியில் 'கடவுள்' இடம் பெற்றிருப்பது, அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது அல்ல என்றும் அவர்கள் கூறிவிட்டார்கள். ஆனாலும், தொடர்ந்து, இந்தக் கோரிக்கைக்காகத் தாம் போராடப் போவதாக, கடவுள் மறுப்பாளரான டாக்டர் நியுடவ் அறிவித்துள்ளார். கடவுள் மறுப்பாளரின் போராட் டத்துக்கு பெரியாரிஸ்டுகளாகிய நாம் வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

**(தொடர்ச்சி 4ம் பக்கம்)**

### சுற்றுப்பயணம் மாற்றங்களுடன்

| | |
|---|---|
| 17.6.04 | சேலம், நாமக்கல் |
| 19.6.04 | ஈரோடு |
| 25.6.04 | கோவை |
| 26.6.04 | பொள்ளாச்சி |
| 27.6.04 | மதுரை |
| 28.6.04 | திண்டுக்கல் |
| 2.7.04 | நாகை |
| 3.7.04 | தஞ்சை |
| 4.7.04 | திருச்சி, கரூர் |
| 5.7.04 | பெரம்பலூர் |
| 11.7.04 | திருப்பூர் |
| 16.7.04 | தருமபுரி |
| 17.7.04 | வேலூர் |
| 18.7.04 | சென்னை |
| 19.7.04 | புதுவை |
| 20.7.04 | கடலூர் |
| 24.7.04 | நெல்லை, தூத்துக்குடி |
| 25.7.04 | விருதுநகர் |
| 26.7.04 | இராமேசுவரம் |

**- தலைமை நிலையம்**

தலையங்கம்

## பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் அவசியமும் – தேவையும்

தமிழ்நாட்டில் ‘சாமியார்கள்’ கும்பல், பல்வேறு நூதன வடிவங்களில் மக்களை ஏமாற்றி வருகின்றன. அப்பாவி மக்களின் மூடநம்பிக்கைகளே – இந்த சாமியார்களின் மூலதனம்! பல சாமியார்கள் – கிரிமினல் வழக்குகளை சந்தித்து வருகின்றனர். ஆனாலும், மக்களிடம் மண்டிக் கிடக்கும் மூடநம்பிக்கைகள் புதிய சாமியார்களை உற்பத்தியாக்கிக் கொண்டிருக்கிறது.

திண்டுக்கல் மாவட்டம் கொடை ரோடு அருகில் உள்ள ஜெகநாதபுரத்தைச் சார்ந்த கண்ணன் என்பவர் தனது பெயரை ஆனந்தசாமி என்று மாற்றிக் கொண்டு, “அருள் கூறி” – பணம் சம்பாதித்து வந்திருக்கிறார். தனது ‘சக்தியின் மகிமையை’க் காட்டுவதற்காக – பூமிக்குள் நுழைந்து மூடிக் கொண்டு ‘தவம்’ செய்து பிறகு மீண்டும் வெளியே வருவாராம். கடைசியாக – குட்லாம்பட்டி எனும் கிராமத்து அருகே – மூன்று நாட்கள் பூமிக்குள்ளே இருக்கப் போவதாகக் கூறி பூமிக்குள் சென்றவரை அவரது ‘சீடகோடிகள்’ பழிவாங்கிவிட்டனர். மேலே பலகையைப் போட்டு மூடி, மூச்சுவிடுவதற்கு ரகசியமான ஏற்பாடுகளை செய்து வந்த சீடர்கள், இம்முறை பூமிக்கு மேலே சிமெண்டால் மூடி, அதில் தீயைப் போட்டுக் கொளுத்தியுள்ளனர். மூன்று நாட்கள் கழித்து போலீசார் தோண்டிப் பார்த்தபோது சாமியார் மூச்சுத் திணறி உள்ளே இறந்து கிடந்தது தெரிய வந்தது. ஆனாலும், அவரது பெயரைக் கூறி, அவரது சமாதியைக் காட்சிப் பொருளாக்கி, வியாபாரம் நடந்து வருகிறதாம்! இப்படி ‘பூமிக்குள்’ சமாதியாகப் போவதாகக் கூறும் சாமியார்களை தற்கொலை முயற்சியின் கீழ், போலீசார் வழக்குத் தொடர்ந்து, அதைத் தடுத்திருக்க வேண்டும். அப்படித் தடுத்திருந்தால், இப்படி ஒரு “கொலை” நடந்திருக்காது. அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மக்கள் இந்த ‘அற்புதங்களை’ நம்பி, இவைகளினால், தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். இந்த நிலையில் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும், முற்போக்கு இயக்கத்தினரும், அறிவியலாளர்களும் உணர வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். மூடநம்பிக்கை எதிர்ப்புப் பிரச்சாரம் என்பது, பெரியார் இயக்கத்துக்கு மட்டுமே உரிய பிரச்சினை என்று கருதிவிடக் கூடாது. சமுதாய முன்னேற்றத்தில் கவலை உள்ள ஒவ்வொரு கட்சிக்கும், அமைப்புக்கும், தோழர்களுக்கும், இந்தக் கடமை உண்டு. இது பற்றி ‘இந்து’ நாளேட்டில், அறிவியலையும், ஆன்மீகத்தையும் ஒன்றாக்கிக் குழப்பக் கூடாது என்று வெளிவந்த ஒரு சிந்தனையாளரின் கட்டுரையை இதே இதழில் நாம் வெளியிட்டிருக்கிறோம்.

இதே போல் – பரணீதரன் என்ற 13வயது சிறுவன், தான் சன்னியாசம் பெற்றுவிட்டதாகக் கூறி, தனது பெற்றோர்களுடன் வர மறுத்து விட்டார்; சேலம் அம்மாப்பேட்டையைச் சார்ந்த அவரது பெற்றோர்கள் – அறியாப் பருவத்தில் உள்ள தனது மகனைப் பயன்படுத்தி ராகவேந்திரா நிறுவனம் ஒன்று, பணம் சம்பாதிக்கப் பார்க்கிறது என்று புகார் கூறியுள்ளனர். காவல்துறை சமரசம் செய்து கொண்டிருப்பதாக செய்திகள் வந்துள்ளன. சிறுவனை இளம் வயதில் ‘ஆன்மீகத்தில்’ ஈடுபடுத்தியது அவர்களது பெற்றோர்கள் தான்; இப்போது அவர்களுக்கு எதிராகவே அது திரும்பி விட்டது. சிறுவனுக்கு ‘சாமியார்’ வேடம் தரித்த கூட்டத்தினர், சிறுவர்கள் உரிமைகளுக்கான சட்டத்தை மீறியிருக்கிறார்கள். ஆனாலும் பக்தி, தியானம், ஆன்மீகம் என்று சொல்லிவிட்டால், சட்டம் தனது கடமைகளைச் செய்ய மறுத்துவிடுகிறது. இதை நம்மைப் போன்ற பகுத்தறிவாளர்கள் சுட்டிக்காட்டினால், பக்தர்கள் மனதைப் புண்படுத்துவதாக – பார்ப்பனர்களும், அவர்களால் தூண்டிவிடப்படுகிறவர்களும் கூப்பாடு போடுகிறார்கள்.

தொலைக்காட்சிகள் – ஒளிபரப்பும் மெகா தொடர்கள் இந்த மூடநம்பிக்கையை உரம் போட்டு வளர்க்கின்றன. இதில் ‘சன்’ தொலைக்காட்சி முதலிடம் வகிக்கிறது என்பது வெட்கத்துக்கும் வேதனைக்கும் உரியதாகும். பெரியாரியத்தை ஏற்றுக் கொண்டு, மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரத்தை மட்டும், அதிலிருந்து துண்டித்துக் கொள்ளும் சில குழுக்களும் இருக்கின்றன. பெரியார் தொண்டர்கள் வறட்டு நாத்திகம் பேசுகிறார்கள் என்போரும் உண்டு. பல மூடநம்பிக்கைகளுக்கு, கலாச்சாரம் பூசி – இது தமிழர் கலாச்சாரம் என்று ‘புனித’ப்படுத்துகிறவர்களும் இருக்கிறார்கள். அத்தனை அமைப்புகளையும் கேட்கிறோம் –

பூமிக்கடியில் சாகடிக்கப்பட்டும், ‘சாமியார்களை’யும், இளம் வயதில் ‘காயடிக்கப்படும்’ சன்னியாசிகளையும் தடுத்து நிறுத்துவது எப்படி? இந்தக் கேள்வியை சமூக முற்போக்கு சிந்தனையாளர்களின் முன் வைக்கிறோம். இத்தகைய மூடநம்பிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்காகவே தனியான ஒரு சட்டம் கொண்டு வரப்பட வேண்டிய அவசியமும் தேவையும் இருக்கிறது என்றே நாம் கருதுகிறோம்.

அதற்காக சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்த, பகுத்தறிவுப் பிரச்சாரத்தை செய்ய சமூகக் கவலை உள்ள எல்லா இயக்கங்களும் முன்வர வேண்டியது அவசியமாகும்.

# தமிழ் செம்மொழி – பார்ப்பனர்களின் எரிச்சல்

தமிழ் செம்மொழியாகும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை ‘துக்ளக்’ ஆசிரியர் சோ மற்றும் ‘தினமலர்’ அந்துமணி வகையறாக்களுக்கு. துக்ளக் தனது அட்டைப்பட கார்ட்டூனில் தமிழக மக்கள் குடிநீர், காவிரி, வறுமை, வேலையின்மை என்ற தட்டியோடு வருவதுபோலவும், கலைஞர் அதற்கு “இந்தா... தமிழ் செம்மொழியாயிடுச்சு... இத்தோட உன் பிரச்சனையெல்லாம் தீர்ந்தது.. உனக்கு இனிமே கவலையே இல்லை போ!” என்று கூறவது போலவும் சித்தரிக்கப்பட்டிருந்தது.

‘தினமலர்’ வாரமலரில் அந்துமணி பதில்கள் பகுதியில் தமிழ்மொழியை செம்மொழியாக்க சட்டம் கொண்டு வருவதால் என்னென்ன பயன் என்றுஒரு வாசகர் கேட்பது போலவும், அதற்கு அந்துமணி காவிரி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்; ஏழை நெசவாளர் வீட்டுத் தறி நிற்காமல் இயங்கும்; ஒரு வேளை கஞ்சிக்கே வழியில்லாதவருக்கு மூன்று வேலையும் மட்டன் பிரியாணி கிடைக்கும்; தமிழ் மக்கள் அனைவரும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளை மறந்து தம் பிள்ளைகளை தமிழ் பள்ளிகளில் சேர்ப்பர்; சக தமிழர்களுடன் தமிழிலேயே பேசுவர்; இவ்வளவும் நடக்கப் போகிறது பாருங்கள்...! என்று பதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் செம்மொழி என்று அறிவிப்பு இன்னமும்கூட வெளியிடப்படவில்லை. அதற்குள் இவர்களுக்குள் வயிற்றெரிச்சல் தாங்கவில்லை. வாஜ்பாய் அரசு சமஸ்கிருத மொழிக்கென்று ஒரு ஆண்டையே அறிவித்த போது, இவ்வாறு இவர்கள் கார்ட்டூன் போடவில்லை. கேள்வி, பதில் எழுதவில்லை. சமஸ்கிருதம் செம்மொழி என்று அறிவிக்கப்பட்ட போது இவர்களுக்கு எரியவில்லை. இப்போது மட்டும் தமிழ் மொழியை செம்மொழி என்று அறிவித்தால் தமிழக மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா என்று அங்கலாய்க்கிறார்கள். தமிழக மக்களை வாஜ்பாய் அரசு காவிரிப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் வஞ்சித்த போது, இவர்கள் குரல் கொடுக்கவில்லை. அப்போது அட்டைப்பட கார்ட்டூன் வெளியிடவில்லை. பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணிக்குத்தான் தமிழக மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று துக்ளக் சோ பத்திரிகை முழுவதும் தலையங்கம் எழுதினார். இருந்தாலும் மக்கள் மதவெறி பா.ஜ.க.வை குப்பைக் கூடையில் தூக்கியெறிந்து விட்டனர். இதனால் ஏற்படும் குடைச்சலை, மன உளைச்சலை பல வழிகளில் தீர்த்துக் கொள்கிறார். வருணாச்சிரம வெறி என்பது மனிதர்களுக்கு மட்டும் எதிரானது அல்ல; ஒரு மொழிக்கும்கூட எதிரானது என்பதையே ‘தினமலர்’, ‘துக்ளக்’ வகையறாக்களின் எரிச்சல் காட்டுகிறது.

**– நன்றி: ‘தீக்கதிர்’ ஏட்டில்**
**மதுக்கூர் ராமலிங்கம்**

# புத்த மார்க்கத்தைப் பார்ப்பனர்கள் அழித்த கதை

**(புதுவையில் நடந்த ‘இந்திய வரலாற்றில் பகவத் கீதை’ நூல் ஆய்வுக் கூட்டத் தில் விடுதலை இராசேந்திரன் தொகுத்து வழங்கிய நூல் அடக்கம் - சென்ற இதழ் தொடர்ச்சி)**

● உபநிடதங்களில் கூறப்பட்ட சிந்தனைகள்; கணாதர், கபிலர் போன்ற சிந்தனையாளர்களின் புரோகித எதிர்ப்பு கருத்துக்கள்; பரிவிராஜகர்கள் எனும் நாடோடிப் பிரச்சாரகர்களின் வேத மத எதிர்ப்புப் பிரச்சாரம்; எல்லாவற்றுக்கும் மேலாக சார்வாகர்களின் பகுத்தறிவுக் கருத்துகள் - எல்லாம் சேர்ந்து, பார்ப்பனர்கள் சமூக மேலாதிக்கத்தைக் கேள்விக்குறியாக்கின. பார்ப்பனர்களின் ஆதிக்கப்பிடி குலையத் துவங்கியது. சமூகம் ஒரு சிந்தனைப் புரட்சிக்கு தயாராகிக் கொண்டிருந்தது.

● பார்ப்பனர்களுக்கு எதிரான இந்தப் புதிய சிந்தனைகளைப் பிரச்சாரம் செய்தவர்கள் - அரசு அதிகாரத்தில் இருந்த சத்திரியர்கள்கள் தான். உபநிடத காலத்துக்குப் பின்பு, வணிக சமூகத்தின் துணையுடன், சத்திரியர்கள் பார்ப்பன புரோகித ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தார்கள்.

● பார்ப்பன வேத மரபுகளுக்கு எதிரான மெய்யியல் சிந்தனை மரபுகளை நிறுவியவர்கள் அனைவருமே பார்ப்பனரல்லாதார் என்பதில் எவ்வித அய்யமும் இல்லை. சிலர் பிற்படுத்தப்பட்டவர்கள், சிலர் அடிமைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள்; சிலர் “தீண்டத்தகாதவர்கள்” .

● புத்தர் சத்திரிய இனத்தைச் சார்ந்தவர். சாக்கிய குல மன்னர் வம்சத்தைச் சார்ந்தவர். இவரது தந்தை சுத்தோதனன் நேபாளப் பகுதியில் கபிலவஸ்து என்ற நகரை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். அரசரின் துணைவி மாயாதேவி. இருவருக்கும் கி.மு.543-ல் லும்பினி என்ற சிற்றூரில் சித்தாந்த கவுதமன் மகனாகப் பிறந்தார்.

● இளவரசராக வளர்ந்தும் - அரண்மனையைவிட்டு வெளியேறிய சித்தார்த்தன் - முனிவர்களிடம் பாடம் கற்பது - ஆழ்ந்த தியானம் செய்வது என்று பல ஆண்டுகளைக் கழித்தார். பரிவிராஜகர் என்ற நாடோடிப் பகுத்தறிவுப் பிரச்சாரகர்களுடன் இணைந்து, பல இடங்களில் சுற்றித் திரிந்து விவாதித்தார். இறுதியில் அவர் உருவாக்கிய புத்த மார்க்கம் - சமூகத்தில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தது.

● பிக்குகளின் சங்கம் ஒன்றை உருவாக்கி அவர்கள் வழியாக நாடு முழுதும் பவுத்தக் கொள்கைகளைப் பரப்பச் செய்தார். பெண்கள் முன்னேற்றத்தை புத்தக் கொள்கை வலியுறுத்தியது. அவர்களும் துறவியாகும் உரிமை வழங்கப்பட்டு, பிக்குனிகளாக நியமிக்கப்பட்டனர். அதுவரை - பார்ப்பன வீடுகளுக்குள் மட்டுமே நடந்து வந்த குருகுலக் கல்விமுறை மாற்றப்பட்டன. கல்விக் கூடங்கள் - பவுத்த கட்டிடங்களுக்கு மாற்றப்பட்டன. புரோகிதர்களின் மொழியான சமஸ்கிருதம் மறைந்து, மக்கள் மொழியான பாலி பிரபலமடைந்தது. வறட்சி மற்றும் பஞ்சத்தைப் போக்குவதற்கு யாகங்களை நடத்தும் முறை கைவிடப்பட்டு, பாசனத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. சமூகத்தை வர்ணாஸ்ரம அடிப்படையில் பிரிந்ததை புத்தர் கடுமையாக எதிர்த்தார். புத்தர் மிகச் சிறந்த ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார். சாதி, ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தனது எண்பதாவது வயதில் - கி.மு.483-ல் புத்தர் இறந்தார்.

● புத்தர் தனது கொள்கைகளை ஏற்றுக் கொண்ட பார்ப்பனர்களையும் தனது மார்க்கத்துக்குள் சேர்த்துக் கொண்டார். அதைப் பயன்படுத்திக் கொண்டு பார்ப்பனர்கள் புத்த மார்க்கத்தை ஊடுருவி அழித்துவிட்டனர். நாகார்ஜுனன் என்ற பார்ப்பான் ‘மகாயானம்’ என்ற பவுத்தப் பிரிவை உருவாக்கினான். ‘சூன்யவாதம்’ என்ற கோட்பாட்டை, புத்தமார்க்கத்துக்குள் வெகுநுட்பமாக இவன் நுழைத்துவிட்டான். உறுதிப்படுத்த முடியாததை ‘வெறுமை’ என்று சூன்யவாதம் கூறியது. நாகார்ஜுனன் ‘வெறுமை’க்கு புதிய வியாக்யானம் தந்தான். ‘வெறுமை’ என்பது ‘இல்லா ஒன்று’ அல்ல. எல்லாவற்றுக்குமே இதுவே ஆதாரனமானது என்றான். இந்த ‘வெறுமை’யை ‘பிரம்மம்’ என்று கூறி - அதை பவுத்தத்துடன் இணைத்து ‘பவுத்த பிரம்மம்மே’ அறுதியான உண்மை என்று வியாக்யானம் செய்தான். புத்தர் என்பவரை மாமனிதராகக் கருதாமல், உலகத்துக்கு அப்பாற்பட்டவர்’ என்று கூறி, புத்தர் உலகில் தோன்றி மறைந்தார் என்றும் - புத்தராக அவர் வலம் வந்தது மாயத் தோற்றம் என்றும் நாகார்ஜுனனின் மகாயானம் கூறி - புத்தமார்க்கத்தின் அடிப்படையையே தகர்த்தது. புத்த மார்க்கம் நிறுவனப்படுத்தப்பட்ட மதமாகியது. ஏராளமான பார்ப்பனர்கள் மகாயான புத்த மதத்தில் சேர்ந்தனர்.

(தொடரும்)

# பெரியார் பாதையில் வாழ்ந்து காட்டும் ஒரு கிராமம்

**தி**ருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செக்கடிக்குப்பம் எனும் கிராமம் பெரியார் கிராமமாகவே திகழ்கிறது; இது பற்றி 'தினமணி' (5.6.2004) வெளியிட்டுள்ள செய்தி:

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு அருகே உள்ள செக்கடிக்குப்பம் கிராமத்தில் கூழ் வார்க்கும் திருவிழாவுக்கு மாற்றாக வெள்ளிக்கிழமை நடந்த தமிழ் மன்னர்கள் விழாவில் பகுத்தறிவுப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

"குங்குமக்காரா, குங்குமக்காரா குங்குமப் பொட்டு வச்சி நிக்காதே, ஆம்பளையா நீ, பொம்பளையா நீ பல்லக் காட்டி நிக்காதே" என மன்மதராசா பாடல் மெட்டிலும், மணப்பாறை மாடுகட்டி பாடல் மெட்டிலும் நா.காத்தவராயனின் குரல் உச்சஸ்தாயில் ஒலித்தது.

இவ்விழா குறித்து ம.தி.மு.க ஒன்றியச் செயலாளர் ம.ஏழுமலை, அப்பகுதியின் ஒன்றியக் குழு உறுப்பினர் எம்.அர்ச்சுனன் (ம.தி.மு.க.) ஆகியோர் 'தினமணி' நிருபரிடம் கூறியது:

மனிதன் மனிதனாகவே வாழ வேண்டும் என பெரியார் ஈ.வெ.ரா. வலியுறுத்தினார். அவரது கொள்கைகளை வலியுறுத்தி 'மனித இனத்தின் முன்னோடி', 'உலகத் தமிழினத்தின் தலைவர்' ராவண அசுரன் ஆண்டு விழா தமிழ் மன்னர்கள் திருவிழாவாக கடந்த 40 ஆண்டுகளாக நடந்து வருகிறது.

தமிழ் மன்னர்கள் ராவணன், கும்பகர்ணன், மேகநாதன் ஆகியோரின் வேடம் தரித்தவர்கள் நகர்வலம் வருவார்கள். அவர்கள் வரும் போது கிராம மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்துத் தீர்வு காணுமாறுக் கோருவார்கள்.

அவர்கள் நகர்வலம் செல்லும் போது கிராமத்து ஆண் களும், பெண்களும், குழந்தைகளும் கருப்பு உடையில் அணிவகுத்து வருவார்கள். தமிழ் மன்னர்களை வரவேற்கும் விதமாக தமிழர்களின் கலை களான கோலாட்டம், சிலம்பாட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**தமிழ் மன்னர்கள் விழாவையொட்டி நடந்த கருஞ்சட்டைப் படையினரின் ஊர்வலம். (வலது) பெண்ணிடம் குறை கேட்கும் தமிழ் மன்னர்கள் (இடமிருந்து) மேகநாதன், ராவணன், கும்பகர்ணன்**

பின்னர் வீடுகளில் செய்யப்பட்ட இட்லி, தோசை, வடை வகைகள் ஒன்றாகச் சேகரிக்கப்பட்டு, பொது விருந்தில் பரிமாறப்படும்.

மாலை நிகழ்ச்சியாக பகுத்தறிவுச் சொற்பொழிவுகள், தெருக்கூத்து நிகழ்ச்சியுடன் விழா முடிவடைகிறது. கிராம மக்களின் கோரிக்கைகள் விழா தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டு சம்பந்தப்பட்டத் துறைக்கும், அரசுக்கும் அனுப்பப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இவ்விழாவை வைகோ பேரவை குடும்பத்தினர் நடத்தி வருகின்றனர். வைகோ பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்ததால் கடந்த 2 ஆண்டுகளாக இவ்விழா நடைபெறவில்லை.

**பகுத்தறிவு திருமணங்கள்:** செக்கடிப்பாளையத்திலும், அதைச் சுற்றியுள்ள சிந்திப்பட்டு, கோட்டைப் பூண்டி, ரோட்டு பாளையம், சான்றோர் தோப்பு, கலர் பாளையம் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் கடந்த 3 தலைமுறைகளாக வாழ்க்கை நல ஒப்பந்த விழா எனப்படும் பகுத்தறிவுத் திருமணங்கள் நடந்து வருகின்றன. முதல் திருமணம் 7.1.69 அன்று நடைபெற்றது. இதுவரை 248 திருமணங்கள் நடைபெற்றுள்ளன.

அனைத்து திருமணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கிராமத்தில் பெரும்பான்மையான ஆண்கள் பகுத்தறிவு திருமணங்களைச் செய்து கொள்கின்றனர். பெண் கொடுக்கும்போது மட்டும் பகுத்தறிவு திருமணங்களை வலியுறுத்துவதில்லை. அதேபோல் காதணி விழா, மஞ்சள் நீராட்டு விழாவும் நடைபெறுவதில்லை. இறுதிச் சடங்கின் போதும் கூட இக்கிராமங்களில் மந்திரங்கள் ஒலிப்பதில்லை.

திருமணத்துக்கான விண்ணப்பப் படிவத்தில் தாயின் பெயருக்கும், மணப்பெண்ணின் பெயருக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. சம்பாதிக்கும் பணத்தை ஆண்கள் தங்களின் மனைவியிடமே தந்துவிட வேண்டும். திருமணத்தின் போதே இதற்கான உறுதி மொழியும் மணமகனிடமிருந்துப் பெறப்படுகிறது.

இக்கிராமத்தில் தூயத் தமிழ் வழிக் கல்விச்சாலை என்ற மழலையர் பள்ளியும், பகுத்தறிவு படிப்பகமும் செயல்பட்டு வருகின்றன. மாதந்தோறும் இக்கிராமத்து இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் பகுத்தறிவுப் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையும் வித்தியாசமாகக் கொண்டாடப்படுகிறது. பண்டிகையின் போது பேச்சுப் போட்டி, விநாடி வினா போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

ஊர்ப் பஞ்சாயத்தும் சிறப்பாக இங்கு செயல்படுகிறது. தங்களால் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை எனில் பஞ்சாயத்துத் தலைவரே போலீஸில் இது தொடர்பாக புகார் அளிக்கிறார். அதே போல் அநேகர் ஆங்கில மருத்துவத்தை நாடுவதில்லை.

முதலில் தி.க.விலும், பின்னர் தி.மு.க.விலும் இருந்த இக்கிராமத்தினர் வை.கோவின் மீது ஈடுபாடு கொண்டு தற்போது மதிமுகவில் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

இக்கிராமத்தில் பலருக்கு பெரியார், அண்ணாதுரை, கலைஞர், பிரபாகரன், நெடுஞ்செழியன் என்றே பெயர் சூட்டியுள்ளனர். பெண்களுக்கு விண் நிலவு, யாழ் முல்லை, தனியரசு, பணியரசு, செந்தமிழ் கணினி என்றே பெயர் சூட்டியுள்ளனர்.

ஒரு காலத்தில் இக்கிராமத்தில் பெரும்பாலானோர் சாராயத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இப் பகுத்தறிவுக் கொள்கை பிரச்சாரங்களால் தற்போது பலருக்கு குடிப் பழக்கம்கூட கிடையாது என்றனர் ஏழுமலையும் அர்ச்சுனனும். ●

# ஆன்மீகத்திற்கு அறிவியல் சாயம் பூசாதீர்!

**பகுத்தறிவைப் பரப்பாமல் விஞ்ஞானிகளும் - சமூக இயலாளர்களும் ஒதுங்கி நிற்கக் கூடாது என்பதை வலியுறுத்தி 'இந்து' நாளேட்டில் (22.5.2004) வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்.**

சோதிடங்கள் கூறும் பலன்கள் எல்லாம் உண்மைகளாக இருக்க வேண்டியதில்லை என்பதை முரளி மனோகர் ஜோஷி தமது சொந்த அனுபவத்தின் மூலம் கற்றுக் கொண்டிருப்பார். கிரகங்களின் நிலைகளின் அடிப்படையில் பா.ஜ.க. போட்ட கணக்குகளை இந்திய வாக்காளர்கள் மாற்றி அமைத்துவிட்டார்கள். அதே போல் தேர்தல் கணிப்பு வல்லுநர்களின் எண் ஜோதிடத்தையும் மக்கள் நிராகரித்துவிட்டனர்.

பழமைவாதிகளின் தளபதியையும் அவரது கட்சியையும் மக்கள் தூக்கி எறிந்துவிட்டனர். பிற்போக்குத்தனமான கலாச்சார மற்றும் கல்விக் கொள்கைகளுக்கு எதிராக தீர்ப்பளிப்பது என்ற முடிவுடன் 37 கோடி வாக்காளர்களும் வாக்களித்ததாகக் கூற முடியாது. எனினும் மதச்சார்பின்மை வெற்றி பெறுவதற்கான இரண்டாவது வாய்ப்பை தற்செயலாக வேணும் மக்கள் உருவாக்கியுள்ளனர். மகிழ்ச்சியும் நம்பிக்கையும் அளிப்பதாக இது அமைந்துள்ளது.

இந்திய சமூகத்தில் பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய தருணம் இது. விஞ்ஞானத்தையும் ஆன்மீகத்தையும் இரண்டறக் கலந்தவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். விஞ்ஞானத்துக்கும் ஆன்மீகத்திற்கும் உரிய தனித்தனி இடங்களை அளிப்பதுதான் மதச்சார்பின்மைக் கோட்பாட்டிற்கு வலிமை சேர்ப்பதாக அமையும். மதச்சார்பின்மை கண்ணோட்டமுடைய குடிமக்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், அறிவு ஜீவிகள், அனைத்து மதப் பிரிவுகளையும் சேர்ந்த முற்போக்குச் சிந்தனையுள்ள ஆன்மீக வாதிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இந்திய சமூகத்தை ஆழமான மதச்சார்பின்மையுள்ள ஒரு அமைப்பாக மாற்றி அமைக்க வேண்டும்.

விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவை கற்றுத்தரும் செய்திகளுக்கும் தங்களின் மதநம்பிக்கைகளுக்கும் இணக்கமான ஒரு கண்ணோட்டத்தை உருவாக்க அனைத்து மக்களும் விரும்புகின்றனர். ஆனால் மத அடிப்படைவாதிகள் நவீன விஞ்ஞானம் எவ்வாறு பகுத்தறிவுக்கு ஏற்றதோ அதுபோலவே பிரபஞ்சம் தோன்றியது பற்றிய தங்கள் மத ரீதியான சிந்தனைகளும் பகுத்தறிவுக்கு இயைந்தவையே என்று வாதிடுகின்றனர். இதே அடிப்படையில்தான் இந்துத்துவாவாதிகள் வேத கால விஞ்ஞானம் பற்றி பேசுகின்றனர். விஞ்ஞானக் கோட்பாடுகளும், மதக் கோட்பாடுகளும் பெயரளவில் தான் வேறுபடுகின்றன என்று கதைக்கின்றனர். மதச்சார்பின்மைக் கண்ணோட்டம் உள்ள சிந்தனையாளர்கள் இது போன்ற அம்சங்களில் நாணயமான முறையில் கருத்துக்களை வெளியிட வேண்டும். எல்லா உண்மைகளும் ஒன்றே என்ற கருத்தை ஏற்றுக்

(4ம் பக்கம்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## லண்டனில் ஒரு வழக்கு

பள்ளிகளில் மாணவர்கள் மதச் சின்னங்களை அணியலாமா என்ற விவாதம் - பிரஞ்சு, பிரிட்டன் நாடுகளில் தலைதூக்கியிருக்கிறது. பிரஞ்சு நாடு ஏற்கனவே பள்ளிகளில் மாணவர்கள் மதச் சின்னங்களை அணிவதற்குத் தடை விதிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இப்போது பிரிட்டனிலிருந்து இது பற்றி ஒரு செய்தி வெளி வந்துள்ளது. லண்டனில் லூட்டனில் உள்ள ஒரு பள்ளியில் படிக்கும் ஆசியாவைச் சார்ந்த ஷபீனா பேகம் என்ற 15 வயது மாணவி, பள்ளி நிர்வாகம், தனது மதச்சார்பு உடையை அணிய தடை விதிக்கிறது என்று வழக்குத் தொடர்ந்தார். முகம் உட்பட உடல் முழுதையும் மறைத்துக் கொள்ளும் முக்காடு உடை தனது மதத்தின் அடையாளம் என்பது அவரது வழக்கு. இந்த உடை, உடல் ஆரோக்கியத் துக்கும் - பெண்ணின் பாதுகாப்புக்கும் எதிரானது என்றும், பல்வேறு மத கலாச்சாரங்களைக் கொண்ட மாணவர்கள் படிக்கும் பள்ளிகளில் - அனைவருக்கும் இலகுவான சல்வார் கமீஸ் போன்ற ஆடைகளை சீருடை யாக்கியுள்ளோம் என்றும் பள்ளி நிர்வாகம் கூறியது. வழக்கை விசாரித்த லண்டன் உயர்நீதிமன்றம் பள்ளி நிர்வாகத்துக்கு சாதகமான தீர்ப்பை வழங்கியுள்ளது.



சபீனா பேகம்

“பல மதங்கள் - கலாச்சாரங்களின் பின்னணியில் வரும் மாணவர்கள் படிக்கும் - ஒரு மதச்சார்பற்ற பள்ளியில், அந்த நோக்கத்துக்கு ஏற்ப சீருடைகள் தேர்வு செய்யப்படுகின்றன. இதற்காக மாணவர்கள் சில கட்டுப்பாடுகளை சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். அப்போது தான் பள்ளியை முறையாக நடத்த முடியும். மனுதாரர், தனது கல்வி உரிமையில் தலையிடுவதாகக் கூறுவது, மிகைப் படுத்தப்பட்ட எதார்த்தத்துக்குப் பொருந்தாத வாதமாகும்” - என்று நீதிபதி பென்னட் தனது தீர்ப்பில் கூறியிருக்கிறார். வழக்கை - செப்.2002ல் இந்தப் பெண் தொடர்ந்தார். இடைப்பட்ட காலம் முழுதும், அவரது படிப்பு வீணாகிவிட்டது. என்றாலும், பள்ளி நிர்வாகம், மாணவிக்கு பாதிப்பு ஏற்படாமல், கல்வியைத் தொடர உதவுகிறோம் என்று கூறியதோடு, அந்தப் பெண் மீண்டும் பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தது. ஆனால் மாணவிகளின் பெற்றோர்கள் இதை ஏற்கவில்லை. மகளின் கல்வியைவிட மதமே அவர்களுக்கு முக்கியமாகி விட்டது. மதச் சுதந்திர உரிமை என்ற கோட்பாடு - பெண்களின் உரிமைகளுக்கு எதிராகி விடக்கூடாது. உடல் முழுதும் மறைக்கும் ஆடை - பெண்களுக்கு மட்டும் தானா என்ற கேள்வியோடு இந்தப் பிரச்சினையை இணைத்துப் பார்க்க வேண்டும். பள்ளிகள் - மதவேறுபாடு உணர்வுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்பது மதச்சார்பற்றக் கொள்கையின் அடிப்படையாகும். மதம் உருவாக்கிய பழமைவாத சிந்தனைகளும், கலாச்சாரங்களும், காலத்தின் நவீன வளர்ச்சிக்கும், சமத்துவத்துக்கும் முரண்பாடாகும் போது, அதைக் கைவிடும் மன உறுதியைப் பெற வேண்டியது, மத உணர்வாளர்களின் கடமை மட்டுமல்ல; சமூகப் பொறுப்பும் ஆகும். ●

# பெண்களை இழிவு செய்யும் பழமொழிகள் (2)

**பூ. மணிமாறன்**

“பழமொழிகளில் பெண்கள்” என்பதை ஆராய்ந்து பார்க்கும் போது இரண்டு தலைப்பின் கீழ் சிந்தித்துப் பார்க்கலாம்.

1) பழமொழிகளில் பெண் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறாள்.

2) பழமொழிகளின் உருவாக்கத்திற்குப் பின்னால் ஒளிந்து கிடக்கும் கூறுகள்.

பழமொழிகளில் பெண் எவ்வாறு கித்தரிக்கப்படுகிறாள்?

(அ) பெண் ஒரு அழகுப் பொருள் : பெண்ணைப் பற்றிப் பேசும் பல பழமொழிகள், பெண்ணை ஒரு அழகுப் பொருளாகத்தான் காண்பிக்கிறது. அப்படி அழகுப் பொருளாகப் காண்பிப்பதில் ஆணுக்கு ஆனந்தம் கிடைக்கிறது. பெண்ணிடம் அழகு இருக்கிறதென்பதால் அவளை ஒரு பொருளாக இரசிக்க வேண்டும் என்பதல்ல பெண் அழகிற்கும் மேலானவள்.

பெண் அழகானவள் என்பதால் அவளை மலரால், பொன்னால், புடவையால், அணிகலன்களால் அலங்காரப்படுத்தி, ஆணின் கண்களுக்கு அழகுள்ளவளாக மிளிர வேண்டும் என்ற கருத்தையே பழமொழிகள் வெளிப்படுத்துகின்றன.

(உ.ம்) “பெண்ணுக்கு பொன்னிட்டுப் பார் சுவருக்கு மண்ணிட்டுப் பார்”; “பொன்னிட்ட பெண்ணிற்கு அழகு”; “மலரும் மங்கையும் ஒரு சாதி”; “இடுப்பு சுருங்குவது பெண்ணிற்கு அழகு”; “நீண்ட முடி பெண்களுக்கு பொக்கிசம்”; “வானத்திற்கு அழகு சூரியன், வீட்டிற்கு அழகு பெண்”; “அழகுள்ள கடைக்காரி புளித்த சரக்கையும் விற்க முடியும்”; “என்னைக் கெடுத்தது நரை, என் மகளைக் கெடுத்தது அழகு”.

(தொடரும்)

வெளிவந்துவிட்டது
**‘களத்துமேடு’**
இரண்டாவது இதழ்
● குடும்பமே வன்முறை
தோழர் ஒவியாவின்
விரிவான ‘சுடும்’ பேட்டி
● பெரியார் உருவாக்கிய
“காட்டுமிராண்டிகள்”
- மற்றும் கவிதைகள், செய்திகள்.
தொடர்புக்கு
**அதி அசுரன்**
63 - வள்ளல் பாரி நகர்
அடியனூத்து அஞ்சல்
திண்டுக்கல்-624 003
இனி இதழ் விலை ரூ.5

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29,
பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை - 600 041.
தொலைபேசி: 2451 2857, 2847 4830

# அறிவியல் வாதிகள் மூடநம்பிக்கைகளை எதிர்க்க வேண்டும்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளக் கூடாது. மத நம்பிக்கைகளுக்கு மதிப்பு அளிப்பது என்ற பெயரால் மதநம்பிக்கைகளுக்கும் விஞ்ஞான அறிவுக்கும் உள்ள அப்பட்டமான முரண்பாடுகளை சுட்டிக் காட்டாமல் இருக்கக் கூடாது. இயற்கை எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பற்றிய விஞ்ஞான கோட்பாடுகளும் நமது நாட்டின் புனித நூல்களும், ஆன்மீகவாதிகளும், ஆச்சாரியார்களும் கூறும் கருத்துக்களும் முரண்படுகின்றன.

சுவாமி விவேகானந்தர் காலத்திலிருந்தே விஞ்ஞானத்துக்கும் ஆன்மீகத்துக்கும் இணைப்பு இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் அரங்கேறி வருகின்றன. வேதகால முன்னோர்கள் கூறிய அதே கருத்துக்களைத் தான் விஞ்ஞானம் வேறு பெயரில் விளக்குகிறது என்பது தவறான கருத்து. இதனை பொது வாழ்க்கையில் ஈடுபடும் அறிவு ஜீவிகளும் விஞ்ஞானிகளும் மீண்டும் மீண்டும் விளக்க கடமைப்பட்டுள்ளனர். மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் அதற்கான செயல் விளக்கங்களையும், வாதங்களையும் முன் வைக்க வேண்டும். வேதத்தில் இடம் பெற்றுள்ள ஒரு ஸ்லோகம் ‘க்வான்டம் மெகானிக்ஸ்’ தொடர்பான விதிகளின் மறுவடிவம் தான் என்பது போன்ற விபரீதமான வாதங்களை ஆணித்தரமான முறையில் அம்பலப்படுத்த வேண்டும். சோதிடம், வாஸ்து சாஸ்திரம், ஆயுர்வேதம் போன்றவற்றிற்கு அடிப்படையான பிரபஞ்சக் கருத்துக்களும், விஞ்ஞானம் உருவாக்கியுள்ள பிரபஞ்சக் கோட்பாடுகளுக்குமிடையே உள்ள முரண்பாடுகளை மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் வெளிப்படுத்த வேண்டும். வேத கால விஞ்ஞானத்தின் அடிப்படைகளை பற்றி பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் கேள்விகளை எழுப்ப வேண்டும். அவர்களின் சிந்தனைகளைத் தூண்ட வேண்டும். இவ்வாறு செய்தால்தான் இந்துத்துவாவின் கண்ணோட்டத்தை பகுத்தறிவின் அடிப்படையில் மக்கள் நிராகரிப்பார்கள்.

மதக் கண்ணோட்டங்களுக்கும் விஞ்ஞானத்துக்கும் உள்ள வேறுபடுகளை விளக்குவது அவசர அவசிய தேவையாக இன்று நம் முன் எழுந்துள்ளது. இந்து மதம் பகுத்தறிவுக்கு இயைந்தது என்றும் விஞ்ஞானத்திற்கும் பகுத்தறிவுக்குமுள்ள வேறு பெயர் தான் இந்து மதம் என்றும் ஆன்மீகவாதிகள் கூறி வருகின்றனர். இந்துத்துவாவாதிகளான முரளிமனோகர் ஜோஜி, கே.எஸ்.சுதர்சன் போன்றவர்கள் இதே அடிப்படையில் ஏராளமான நூல்களை எழுதியுள்ளனர்.

இந்துத்துவாவாதிகள் கூறிவரும் சில கருத்துக்கள்

- இந்து மதம் நவீன விஞ்ஞானக் கருத்துக்களுடன் ஒத்துப் போகிறது. எனவே இந்தியா உலக நாடுகளுக் கெல்லாம் வழி காட்டி.
- வேதகால ஆரியர்கள் மனங்களில் நொடிப்பொழுதில் தோன்றிய ஞானோதயத்தின் அடிப்படையில் இந்து மதம் அமைந்துள்ளது. அத்துடன் இந்து மதக் கருத்துக்களுக்கும் நவீன விஞ்ஞான விதிகளுக்கும் ஒற்றுமையைக் காண முடியும்.
- இயற்கையைப் பற்றி விஞ்ஞானம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில்தான் இந்து மதம் அமைந்துள்ளது. வேறு பல மதங்கள் ஒரு கற்பனையான இயற்கைக்கு அப்பாற்பட்ட அதீத சக்தி மீது நம்பிக்கை வைத் துள்ளன. எனவே இந்து மத கோட்பாடுகளே உயர்வானவை.
- வேதங்கள், வேதாந்தங்கள் போன்றவற்றில் கூறப்பட்டுள்ள போதனைகளை இந்தியர்கள் மட்டுமல்ல உலகமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- இப்படிப்பட்ட கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான் வேதகால சோதிடம், கர்ம காண்டம் போன்றவற்றை முரளி மனோகர் ஜோஷியும் அவரது ஆதரவாளர்களும் பல் கலைக் கழகங்களின் பட்டப் படிப்புப் பாடங்களாகவே மாற்றினார்கள்.

தவறான அடிப்படையில் அமைந்துள்ள இந்துத்துவா கோட்பாடுகளின் அடித்தளத்தையே தகர்க்கும் பணியில் இந்திய அறிவு ஜீவிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும். நவீன விஞ்ஞானத்துக்கும் வேதகால சிந்தனைகளுக்கு மிடையே சுட்டிக் காட்டப்படும் தவறான ஒப்பீடுகளை வெட்ட வெளிச்சமாக்க வேண்டும். இந்து மற்றும் ஆரிய சமூகம் மற்ற சமூகங்களைவிட மேன்மையானது என்பது அடிப்படையற்ற கருத்து என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.●

### கழக முயற்சி வெற்றி!

ஒட்டன்சத்திரத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள பரிசுச் சீட்டு விற்பனை எவ்வித தங்குதடையுமின்றி தாராளமாக விற்பனை நடந்து வந்தது. அதனால் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிறைந்த ஒட்டன்சத்திரம் பகுதியில் பரிசுச் சீட்டு மோகம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வந்தது. பரிசுச் சீட்டு விற்பனையை தடுத்து நிறுத்தக் கோரி 01.06.2004-ம் நாளன்று ஒட்டன் சத்திரம் காவல் நிலையம் சார்பு ஆய்வாளருக்கு கழகத்தின் சார்பில் புகார் மனுதரப்பட்டது. புகாரின் அடிப்படையில் உடனடியாக சட்ட விரோதமாக பரிசுச் சீட்டு விற்பனை செய்தவர்களை கைது செய்து காவலில் வைத்தனர். கழகத்தின் மாவட்டத் தலைவர் சக்திவேல் இதைத் தெரிவித் துள்ளார்.

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 18th June 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூன் 24, 2004 | புரட்சி 3 | முழக்கம் 24 | விலை : ரூ.2.50

# தோழர்கள் சந்திப்புப் பயணம்; எழுச்சியுடன் துவங்கியது

தமிழகம் முழுதும் - கழகத் தோழர்களை சந்திக்கும் பயணத் திட்டம் - திட்டமிட்டபடி கடந்த 17-ந் தேதி மேட்டூரில் துவங்கியது. கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, கலந்து கொண்டு, தோழர்களிடையே உரையாற்றினார்.

மாவட்டம் தோறும் - கழகத் தோழர்களை சந்தித்து, கழக அமைப்புகளை புதுப்பித்து, கழகச் செயல் திட்டங்களை தீவிரமாக்கும் நோக்கத்தோடு, கழகத்தின் பயணத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதலில் சேலம் மாட்டக் கழகத் தோழர்களுடனான சந்திப்பு மேட்டூரில் எழுச்சியுடன் தொடங்கியது. மாவட்டம் முழுதுமிருந்தும் 100 தோழர்கள் திரண்டு வந்திருந்தனர். மேட்டூர் பூங்காவில் பகல் 11.30 மணியளவில் நிகழ்ச்சி துவங்கியது. கழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றி தோழர்கள் பலரும் உரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றியும், கழக அமைப்புகள் தீவிரமாக செயல்பட வேண்டிய அவசியம் குறித்தும் விளக்கி உரையாற்றினார்.சேலம் மாவட்டக் கழக அமைப்பாளராக செயல்பட்டு வந்த தோழர் முல்லை வேந்தன், மாவட்டக் கழகத் தலைவராகவும், தோழர் கொளத்தூர் டைகர் பாலு மாவட்டக் கழக செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். கழகப் பேச்சாளர் நங்கவல்லி அன்பு, மற்றொரு களப்பணி ஒருங்கிணைப்பாளராக தேர்வு செய்யப்பட்டார். பிற்பகல் 3 மணிவரையில் தோழர்கள் கழக வளர்ச்சிக்கான கருத்துக்களை முன் வைத்து உரையாற்றினர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

மாலை 6 மணியளவில் நாமக்கல் மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் குமாரபாளையம் பயணியர் விடுதியில் நடைபெற்றது. 20 தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர் வி.பி.ராஜன் மாவட்ட அமைப்பாளராகவும், தோழர்கள் தி.க. கைலாசம் மாவட்ட தலைவராகவும், கு.சாமிநாதன் மாவட்ட செயலாளராகவும், குமாரபாளையம் ப.மோகன் நகரசெயலாளராகவும், தோழர் முத்து சாமி, துணைத் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டனர். கழகத் தோழர்கள் கழக வளர்ச்சிப் பற்றி உரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். இரண்டு மாவட்ட நிகழ்ச்சிகளிலும், களப்பணி ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி பிரகாஷ் கலந்து கொண்டார். மறைந்த தோழர்கள் பத்ரி, வைரவேல், சரவணன் ஆகியோருக்கு வீரவணக்கம் தெரிவிக்கப்பட்டது. •


# காளப்பட்டி கலவரத்தில் சங்பரிவார் கைவரிசை

கோவை மாவட்டம் காளப்பட்டியில் தலித் மக்களான அருந்ததியினர் மீது நடந்த சாதி வெறித் தாக்குதலின் பின்னணி பற்றி 'பிரன்ட்லைன்' பத்திரிகையில் எஸ். விசுவநாதன் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். கலவரத்தை முன்னின்று நடத்தியவர்கள் பாரதி ஜனதா கட்சியினர் தான் என்று, அக்கட்டுரை உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கிறது. கோவை மாவட்டத்தில் அருந்ததி சமூகத்தினரிடம் பா.ஜ.க. ஊடுருவி இருந்தது. குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு - அருந்ததி மக்களிடம் ஆதரவு இருந்து வந்தது. தங்கள் மீது திணிக்கப்படும் தீண்டாமைகளுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வந்த தலித் மக்கள், கோரிக்கைகள் கவனிக்கப்படாததால், தேர்தலைப் புறக்கணிக்க முடிவு செய்தனர். இந்த மக்களின் ஓட்டுகளை நம்பியிருந்த பா.ஜ.கவுக்கு, இந்த முடிவு அதிர்ச்சியாகிவிட்டது. மாநில பா.ஜ.க. தலைவர் ராதாகிருஷ்ணன் - இந்தக் கிராமத்துக்கு ஓட்டு கேட்க வந்த போது, தலித் மக்கள் அவரைக் கண்டு கொள்ளவில்லை. இது பா.ஜ.க. வினரின் ஆத்திரத்தை மேலும் அதிகமாக்கியது. உள்ளூர் ஆதிக்க சாதியினரான கவுன்டர் சமூகத்தைச் சார்ந்த பா.ஜ.க.வினர், தேர்தலுக்குப் பிறகு, தலித் மக்கள் மீது, திட்டமிட்டு இத் தாக்குதலை நடத்தியுள்ளனர். ஏற்கனவே உரிமைக்காக குரல் கொடுத்துவரும் தலித் மக்கள் மீது ஆத்திரம் கொண்டிருந்த, பா.ஜ.க. அல்லாத ஆதிக்க சாதியினரும், இதில் சேர்ந்து கொண்டனர். மே 16-ம் தேதி, 200பேர் கொண்ட ஒரு கூட்டம், ஆயுதங்களுடன் தலித் மக்களைக் கொடூரமாகத் தாக்கியது. வீடுகளை எரித்து, உடைமைகளை அழித்து, கால்நடைகளையும் எரித்துள்ளனர். ஆதி தமிழர் விடுதலை முன்னணி அலுவலகம் தாக்கப்பட்டு, அங்கிருந்த டாக்டர் அம்பேத்கர் படத்தை எரித்துள்ளனர். அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த உள்ளூர் மக்களின் நிலப்பட்டா மாணவர்களின் பள்ளி, கல்லூரி சான்றிதழ்களும் எரிக்கப் பட்டுள்ளன.

தேநீர் கடைகளில் இன்னும் இரட்டை டம்ளர் முறை நீடிப்பதோடு, பொதுச்சாலைகளைப் பயன்படுத்தவும், தலித் மக்களுக்கு இங்கு உரிமை மறுக்கப்படுகிறது. இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஊர்க் கோயிலுக்குள் - தலித் மக்கள் நுழைய அனுமதி இல்லை. "நாம் எல்லோரும் இந்துக்கள்" என்று கூறி வரும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், இந்தத் தீண்டாமையைத் தடுக்க முன்வரவில்லை. இதனால் - ஆர்.எஸ்.எஸ். பிடியிலிருந்து அருந்ததியினர் விடுவித்துக்கொள்ளத் துவங்கிவிட்டனர். தங்களது ஓட்டு வங்கி சிதறிவிட்டது என்ற ஆத்திரத்தில், தேர்தலுக்குப் பிறகு, சாதி வெறியர்கள் இந்தத் தாக்குதலைத் துவக்கிவிட்டனர்' என்று 'பிரன்ட் லைன்' பத்திரிகை எழுதியிருக்கிறது. •

# பார்ப்பன-பனியா பிடியில் அரசியல் கட்சிகள்

தேர்தலில் போட்டியிடும் பிரபல அரசியல் கட்சிகளின் பின்னணியில் பெரும் தொழிலதிபர்களின் ஆதிக்கக் கரங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு காலத்தில், இந்த உறவு ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இப்போது 'உலகமயமாக்கல்' யுகத்தில் - இவைகள் திறந்த புத்தகமாகிவிட்டன. தங்களை இயக்கி வரும் பார்ப்பன-பனியாக்களை அடையாளம் காட்டிக் கொள்வதில் அரசியல் கட்சிகளும் வெட்கப்படுவது இல்லை. உ.பி.யில் சமாஜ்வாதி கட்சியின் தலைவர் முலாயம் சிங்- மாநிலங்களவைக்கு சுயேச்சையாக போட்டியிடும் பிரபல தொழிலதிபர் அம்பானிக்கு தனது கட்சியின் ஆதரவை வழங்கியிருக்கிறார். இந்திய தொழில்துறையில், அம்பானியின் குறுகிய கால வளர்ச்சி, பலரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. அவர் இப்போது வெளிப்படையாகவே



அம்பானியுடன் முலாயம் சிங்

அரசியலுக்கு வந்து விட்டார். அம்பானிக்கு - காங்கிரஸ் கட்சியின் ஆதரவும் உண்டு என்று செய்திகள் வந்தன. பிறகு காங்கிரஸ் அதை மறுத்துள்ளது. பாரதிய ஜனதா கட்சி எப்போதுமே பெரும் தொழிலதிபர்களின் ஆதரவைப் பெற்றது தான். அக்கட்சி, இந்த முறை, இந்தியா முழுதும் பெரும் ஓட்டல்களை நடத்தும் லலித்சூரி என்ற பார்ப்பனருக்கு, தனது ஆதரவை வழங்கியுள்ளது. தமிழகத்தின் பிரபல தொழிலதிபரான எம்.ஏ.எம். ராமசாமி, கருநாடக மதச் சார்பற்ற ஜனதாதள ஆதரவுடன் மாநிலங்களவை உறுப்பினராகிறார். மாநிலங்களவை உறுப்பினர் பதவிகள் - இனி ஏல முறையில் சந்தையில் விற்பனைக்கு வந்தாலும் வியப்பில்லை.

மாநிலங்களவை உறுப்பினர்கள் - சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகிறார்கள். எனவே அந்தந்த மாநிலங்களைச் சார்ந்தவர்களே, போட்டியிடுவதுதான் சரியானது. ஆனால் பாரதிய ஜனதா கட்சி, எந்த மாநிலத்தைச் சார்ந்தவரும் வேட்பாளராக நிறுத்தலாம் என்று சட்டத்தைத் திருத்தியது. இதை காங்கிரசும் ஆதரித்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தேர்தலில் உருண்ட தலைகள் எல்லாம் - இப்போது மறு வாழ்வு பெற்று வருகின்றன. •

## 'தலித்' மேடைகளில் பெரியாருக்கு தடையா?

"கடந்த இரண்டாண்டுகளாக தலித் அமைப்பு மேடைகளில், நாங்கள் மேடையேறுவதற்கு சில விநாடிகள் முன்பாக, பெரியார் குறித்த பாடலைப் பாட வேண்டாமென்று அன்பான வேண்டுகோள் வைக்கப்படுகிறது. அந்தக் கணங்களில் நான் அதிர்ந்து போயிருக்கிறேன். பெரியாரின் நெடிய உழைப்பில் அமைந்த - அரசுகளால் கட்டப்பட்ட கல்லூரிகளில் படித்து நிமிர்ந்த தலித் தோழர்களும், அதிகாரிகளும் - பெரியாருக்கு எதிராக விதைக்கும் கருத்துகள், தலித் அமைப்புகள் சிலவற்றைப் பற்றிக் கொண்டிருப்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

தலித் மேடைகளில் வழக்கமாக நாங்கள் பாடும் மக்களுக்கான வணக்கப் பாடல், புரட்சியாளர் அம்பேத்கர் குறித்த பாடல் ஆகியவற்றிற்கு அடுத்த மூன்றாவது பாடலாக இடம் பெறுவது பெரியார் குறித்த பாடலாகும். பெரியார் பாடலை தவிர்க்கச் சொல்லும் மேடைகளில், கனத்த இதயத்துடன் மூன்றாவது பாடலாகப் பண்டிதர் அயோத்திதாசர் குறித்த பாடலைப் பாடி வருகிறோம். பெரியாரை எதிர்க்கும் தலித் தோழர்கள், இதனை வரலாற்றின் நியதி என்று கூறலாம். ஆனால், தலித் முன்னோடிகள் குறித்து நான் எழுதிய பல பாடல்களில் பெரியாரே இடம் பெற்றுள்ளார். இதனை நான் வரலாற்று நிர்ப்பந்தம் என்கிறேன். அதே நேரம், பெரியாரின் பகுத்தறிவு, சாதி ஒழிப்புக் கொள்கை மற்றும் இந்துத்துவ எதிர்ப்பை உள்வாங்கிய நாங்கள், பெரியாராகவே நின்று பார்ப்பனியத்தைத் தோலுரிக்கிறோம் என்பதை, எமது 'விடுதலைக் குரல்' கலைக் குழுவின் இசை நிகழ்வை நேரில் பார்த்தவர்கள் அறிந்திருக்க வாய்ப்புண்டு.

**– தோழர் 'தலித்' சுப்பையா (விடுதலைக் குரல் கலைக்குழு) 'தலித் முரசு' இதழில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து.**

தலையங்கம்

## ‘இந்து முன்னணி’களின் பொய் முகங்கள்!

ஜெயலலிதா கொண்டு வந்த மதமாற்றத் தடைச் சட்டத்தை தேர்தல் முடிவுக்குப் பிறகு திரும்பப் பெற்றுக் கொண்டார். இதை எதிர்த்து இந்து முன்னணியினர், பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது - முதல்வர் ஜெயலலிதாவுக்கு புகழ் மாலையைச் சூட்டி மகிழ்ந்தவர்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்களும், சங்கராச்சாரி களும் தான்! தமிழ்நாட்டைத் தொடர்ந்து, குஜராத்திலே அம்மாநில முதல்வரும் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு முதல்வர், வரிசையாக திரும்பப் பெற்றுவரும் அறிவிப்புகளில் மதமாற்றத் தடைச் சட்டமும் ஒன்று. இதன் நோக்கம் எதுவாக இருந்தாலும், சட்டம் திரும்பப் பெறப்பட்டதை வரவேற்கிறோம்.

இந்துக்கள் என்று சொல்லப்படுகிறவர்கள், அம்மதத்தை விட்டு ஏன் வெளியேறுகிறார்கள்? இந்து சமூகத்தில் திணிக்கப்படும் தீண்டாமைக் கொடுமைகளிலிருந்து, தங்களை விடுவித்துக் கொள்ளும் - ஒரு போராட்டமாகவே இங்கு மதமாற்றம் நடக்கிறது. பணத்தை வாங்கிக் கொண்டு மதம் மாறுவதாக - ‘சங்பரிவாரங்கள்’ முன்வைக்கும் வாதத்தில், உண்மை இல்லை. பணம் கிடைக்கும் என்பதற்காக மதம் மாறினால், எல்லா சாதிகளிலும், ஏழ்மையில் உழலுபவர்கள் மதம் மாற முன்வந்திருப்பார்கள்; ஆனால், மதமாற்றத்துக்கு ‘தலித்’ மக்கள் மட்டுமே முன்வருவதற்கு காரணம் என்ன? தீண்டாமைப் பிரச்சினை தானே?

கோவை புறநகர்ப் பகுதியான காளப்பட்டியில் - அருந்ததி சமூகத்தினர், ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்களாகவே இருந்துள்ளனர். ஆனால், அங்கே உள்ள கோயில்களுக்குள் சென்று வழிபடும் உரிமை, அவர்களுக்குத் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. “இந்துக்களே ஒன்று சேருங்கள்” என்று முழக்கமிடும் சங்பரிவாரங்களோ, இந்து முன்னணிகளோ, இந்தத் தீண்டாமையை எதிர்த்து, இதுவரை குரல் கொடுத்தது உண்டா? ஆக, தீண்டாமையை யும் சாதி அமைப்பையும் அங்கீகரித்துக் கொண்டு, தலித் மக்கள் இந்துக்களாகவே இருக்க வேண்டும் என்று இவர்கள் அடம் பிடிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? ஆர்.எஸ்.எஸ்ஸில் இருக்கும் தலித்துக்கும் கோயிலுக்குள் நுழையும் உரிமை கிடையாதா என்று கேட்கிறோம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் - மேலமாந்தை எனும் கிராமத்தைச் சார்ந்த ‘தலித்’ மக்கள் - இந்து மதத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டு, முஸ்லீம் மதத்துக்கு மாறப் போவதாக இப்போது அறிவித்துள்ளனர். தலித் மக்கள் அதிகமாக வாழும் இப்பகுதியில், சாதி ஆதிக்க வெறி தலைவிரித்தாடுகிறது. “எல்லாவற்றையும்விட, சாதி ஆதிக்கவாதிகள் எங்களைக் கீழ்த்தரமாக பேசுவதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த அவமானங்களைசுமந்து, என் வாழ்நாள் கழிந்து விட்டது. எனது குழந்தைகளும், பேரக் குழந்தைகளுமாவது தன்மானத்தோடு வாழட்டும்; நாங்கள் முஸ்லீம் மதத்துக்கு மாறியதால் எந்தப் பொருள் வசதியும் கிடைக்கவில்லை. ஆனால் எங்களுக்கு மரியாதை கிடைத்திருக்கிறது” என்று அக்கிராமத்தைச் சார்ந்த 65 வயது முனியாண்டி கூறி யிருக்கிறார் (‘பிரண்ட்லைன்’ ஜூன்2). இதே கிராமத்தில் மளிகைக் கடை ஒன்றை நடத்தி வரும் பெரியார் தொண் டரான பி.காளாடி தனது பேட்டியில் - “நான், கடவுள், மதங்களில் நம்பிக்கை இல்லாத பெரியார் தொண்டன். எங்களுடைய இளைஞர்கள் சுயமரியாதையுடன் வாழ, இந்து மதத்துக்கு முழுக்குப் போட்டு, இஸ்லாம் மார்க்கத்தில் சேர விரும்பும்போது, அவர்களுக்கு உதவுவது, எனது கடமை. உண்மையான ஒரு பெரியார் தொண்டன் என்ற முறையில், நான் அவர்களுக்கு இதில் உதவி வருகிறேன்” என்று கூறியிருக்கிறார். (பேட்டி - பிரன்ட்லைன்) மதமாற்றத் துக்கான உண்மையான பின்னணி இது தான்!

மதமாற்றத் தடைச் சட்டத்தைத் திரும்பப் பெற்றதை எதிர்த்து - ஆர்ப்பாட்டம் நடத்தும் ‘சங் பரிவார்கள்’ தீண்டாமைக்கு எதிராக போராட வரட்டும். கோயில்களில் வீதிகளில், தேநீர்க் கடைகளில், சாதி வெறியர்களின் சிந்தனைகளில் படமெடுத்தாடிக் கொண்டிருக்கும் தீண்டாமை எனும் விஷப் பாம்பை சாகடிக்க முன் வரட்டும்! வருவார்களா?

# பவுத்தர்களைப் படுகொலை செய்த பார்ப்பனர்கள்!

(‘இந்திய வரலாற்றில் பகவத்கீதை’ நூல் உள்ளடக்கம் - சென்ற இதழ் தொடர்ச்சி)

- பவுத்தத்தை முற்றிலுமாக ஒழித்து, மீண்டும் வேதத்தை அரியணையில் ஏற்றத் துடித் தார்கள் பார்ப்பனர்கள். இதற்கு - முதலில் கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களின் படைப்பு இலக்கியங்களை எல்லாம் அழித்து ஒழிக்கும் வேலையைத் துவக்கினர். குறிப்பாக நாத்திகத்தை வலியுறுத்திய லோகாயத வாதிகளின் இலக்கியங்களை முழுமையாக மீட்கவே முடியாதவாறு அழித்து ஒழித்து விட்டனர். இந்த லோகாயதர்களின் வேத-கடவுள் மறுப்பு சிந்தனைகளை எதிர்த்தும், இகழ்ந்தும் பார்ப்பனர்கள் எழுதிய நூல்களி லிருந்து தான் துண்டுதுண்டாக லோகாயத வாதம் பற்றிய கருத்துகள் காணக் கிடைக் கின்றன. இதுபற்றி பிரபல ஆய்வாளர் தேவி. பிரசாத் சட்ட பாத்யாயா இவ்வாறு கூறுகிறார்:

  “பிற சிந்தனை மரபுகளின் படைப்பிலக்கியங் களாவது ஓரளவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால் லோகாயதர்களின் உன்னதப் படைப்பிலக்கியங்களின் மூலப் படிகள் மீட்கவே முடியாதவாறு அழிக்கப் பட்டு விட்டன. துண்டுதுண்டாக வெட்டப் பட்ட சில வரிகள் காணக் கிடைக்கின்றன. அவை கூட லோகாயத எதிர்ப்பாளர்களின் நூல்களில் தான் உயிர் வாழ்கின்றன.”

- படைப்பிலக்கியங்களை மட்டுமல்ல; புத்தகக் கலைகளையும் - பண்பாட்டையும் அழித்து ஒழித்தனர்; புத்த மடலாயங்களை எல்லாம் அழித்தார்கள்.
- நயவஞ்சகமாக படுகொலைகளைப் புரிந்து ஆட்சிக்கு வந்த புஷ்யமித்திரன் என்னும் பார்ப்பன அரசன், அசோக மன்னர் நிறுவிய 84,000 கல்வெட்டுத் தூண்களை இடித்தான். இந்தக் கல்வெட்டுத் தூண்களில் அசோகர் பிறப்பித்த சமூக சீர்திருத்த அரசு ஆணைகளும், புத்தரின் சிந்தனைகளும், மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன.
- பவுத்த பிக்குகளும், பிக்குனிகளும், பவுத்தத்தைத் தழுவிய பாமர மக்களும், ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். பவுத்தத்தை வேரும் வேரடி மண்ணோடும் அழிக்கும் வரை, இந்தப் படுகொலைகள் தொடர்ந்தன.
- காஷ்மீரத்தைச் சார்ந்த பிரபல வரலாற்று ஆசிரியர் கல்கணன் கூறுகிறார். “பிறர் பற்றி பழி கூறுவோர் சிலரின் தூண்டுதலால் ஜாலுக்கண் என்ற காஷ்மீர மன்னன், பவுத்த மடாலயங்களிலிருந்து எழுப்பப்படும் சங்கொலி,தனது தூக்கத்தைக் கெடுப்பதாகக் காரணம் கூறி அவற்றை இடித்துத் தள்ளினான்.”
- ஆய்வாளர் கல்கணன் மற்றொரு அதிர்ச்சி யான தகவலையும் தருகிறார். அபிமன்யு என்ற காஷ்மீரை ஆண்ட பார்ப்பன மன்னன், பவுத்தர்களை இனப் படுகொலை செய்தான் அது இனப்படுகொலை அல்ல என்றும், கடும் பனிப் பொழிவினால், இறக்கிறார்கள் என்றும் பொய்ப் பிரச்சாரம் செய்தான்; இந்தப் படுகொலைகள் நடக்கும் குளிர்காலமான 6 மாதங்களில் - தனது நாட்டைவிட்டு அவன் வெளியேறி விடுவான். தன்வ பிஷாரா என்ற பள்ளத்தாக்குப் பகுதியில் தங்கி விடுவான்; பவுத்தர்கள் படுகொலைகள் நாட்டில் திட்ட மிட்டபடி நடக்கும். கடும் பனியினால் பவுத்தர்கள் மட்டும் தான் இறப்பார்களா? பார்ப்பனர்கள் ஏன் இறப்பதில்லை? “பார்ப்பனர்கள் இறக்காததற்குக் காரணம் அவர்களிடம் உள்ள ஆன்ம சக்தி; அந்த ஆன்மீக சக்தியைப் பயன்படுத்தி, அவர்கள் கடவுளுக்கு யாகங்களையும், படையல்களை யும் செய்ததால், அவர்கள் சாவதில்லை. பவுத்தர்கள் அவ்வாறு செய்யாததால் மரண மடைந்தனர்” என்று விளக்கம் கூறினான், அந்தப் பார்ப்பன மன்னன்.
- பவுத்த மதத்தினர், ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றார்கள் என்று கூறி, ஆத்திரமடைந்து, ஆயிரக்கணக்கான பவுத்த மடாலயங்களைத் தீக்கிரையாக்கினான், காஷ்மீர் மன்னராகிய நரன் என்ற கின்னரன். பவுத்த மதத்தினர் வாழ்ந்த அந்தக் கிராமங்களில் மத்தியமாதா எனும் பகுதியிலிருந்து பார்ப்பனர்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். இவை எல்லாம் ஆய்வாளர் கல்கணன் தரும் தகவல்கள்.
- காஷ்மீர் பகுதியில் மட்டுமல்ல; இந்தியாவின் பிற பகுகளிலும், பவுத்தர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். சிராவஸ்தியை ஆண்ட விக்கிரமாதித்தன் பவுத்தர்களைக் கொடுமைப் படுத்தினான். வங்காள மன்னன் சசாங்கன் பவுத்தர்களைத் தனது பிறவி எதிரிகளாகக் கருதினான். புத்தர் அறிவொளி பெற்றதாகக் கூறப்படும், போதி மரத்தை வெட்டி வேரோடு சாய்ப்பதற்குப் பலமுறை முயன்றான். கேரளாவை ஆண்ட குமாரிலபட்டன் கொடுமை தாங்காமல், பவுத்த மதத்தினர் அனைவரும் கேரளாவை விட்டு வெளி யேறினர். சுதன்வனன் எனும் மன்னன், தனது குடிமக்களுக்கு இவ்வாறு ஆணையிட்டான், “தனுஷ்கோடிப் பாலத்திலிருந்து (இலங்கைக்கு ராமர் கட்டியதாகக் கூறப்படுவது) இமாலயம் வரை, பவுத்த மதத்தினரைக் குழந்தைகள், முதியவர்கள் என்று பாராது அனைவரையும் கொன்றுவிட வேண்டும். அவ்வாறு செய்யா தவர்கள் கொல்லப்படுவர்கள்.” இத்தகவலை ‘சங்கர விஜயம்’ என்ற நூல் தெரிவிக்கிறது, புத்த மார்க்கத்தை விரிவாக ஆய்வு செய்த பேராசிரியர் பி. லட்சுமிநரசு, தனது ஆய்வுகளில், இந்தப் படுகொலைகள் பற்றிய தகவல்களைக் கூறியுள்ளார்.
- ஆய்வாளர் டபிள்யூ.டி. வில்கின்ஸ் இவ்வாறு கூறுகிறார்: “பவுத்தருடைய சீடர்களும் பவுத்த மதத்தைச் சார்ந்த பாமர மக்களும் ஈவு இரக்கமின்றிக் கொடுமைப்படுத்தப்பட் டார்கள். வெட்டிக் கொல்வது, நாடு கடத்துவது அல்லது வாள்முனையில் இந்து மதத்துக்கு மாற்றுவது என்று ஏராளமான கொடுமைகள் செய்தார்கள். பிற மதத்தினர் மீது அடக்குமுறையை ஏவி விடுவதும், அட்டூழியங்கள் புரிவதும் உலகம் முழுதும் நடந்துள்ளது. ஆனால் பவுத்த மதத்தை இந்தியாவை விட்டுத் துரத்துவதற்காக, செய்யப்பட்ட அடக்குமுறைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் ஈடான வேறு ஒன்று உலகின் எந்த மூலையிலும் நடந்தது இல்லை.

(தொடரும்)

# ‘தினமலரின்’ தயாரிப்புக் கடிதங்கள்

‘தினமலர்’ பார்ப்பன ஏடு - வாசகர் கடிதங்கள் என்ற பெயரில், தனது பார்ப்பனக் கருத்துக்களைத் திணிப்பது வாடிக்கையாகிவிட்டது. தந்தை பெரியார் திராவிடர் கழகம் - கோயில் கருவறைக்குள் நிலவும் தீண்டாமையை எதிர்த்துப் போராட்டம் நடத்திய போது, அதை எதிர்த்து, ‘தினமலர்’ ஏட்டில் வெளி வந்த ஒரு கடிதத்தை - அப்படியே வாசகர் பெயரை மாற்றி, அதே நிறுவனத்தின் ‘காலைக்கதிர்’ ஏட்டில், வேறு ஒரு மாவட்டத்தில் வெளியிட்டது. இது ‘அவாளின்’ வழக்கமான வேலை என்பது இப்போது மீண்டும் உறுதியாகியிருக்கிறது. டாக்டர் ராமதாசைக் கடுமையாகக் கண்டித்து - ரஜினி ரசிகர் ஒருவர் எழுதிய கடிதம் 23.1.2004 ‘தினமலர்’ ஏட்டில் வெளி வந்தது. இதே கடிதம் - அப்படியே வேறு மாவட்டத் திலிருந்து வெளிவரும் ‘காலைக் கதிர்’ல் இடம் பெற்றுள்ளது. இதே போல், 30.1.2004-ல் ‘ரஜினி ரசிகர்களே உஷார்’ எனும் தலைப்பில் கடலூர் சுரேஷ் என்பவர் எழுதிய கடிதம் 3.2.2004 ‘காலைக் கதிர்’ல், ஈரோடு முத்துக்குமார் எழுதியதாக தலைப்பை மாற்றி வெளியிட்டிருக்கிறார்கள். 31.1.2004-ல் பாடம் புகட்டுவோம் ராமதாசுக்கு என்ற தலைப்பில் விருதுநகர் ஆர்.ராஜவேலு எழுதிய கடிதம் 4.2.2004 ‘காலைக்கதிர்’ல் கரூர் மு.ரஜினிபித்தன் பெயரில் வெளிவந்துள்ளது. 6.2.2004 ‘தினமலர்’ ஏட்டில் சிதம்பரம் கரிகாலன் எழுதியதாக வெளியிட்ட ஒரு கடிதத்தை அப்படியே 10.2.2004 அன்று - ‘காலைக்கதிர்’ல் சங்ககிரி ஜெயராமன் எழுதியதாக வெளியிட் டிருக்கிறார்கள். ‘தினமலர்’ உருவாக்கும் மோசடிக் கடிதங்களுக்கு - இவைகள் சில உதாரணங்கள் மட்டுமே.

# தனியார் துறை ஒதுக்கீடு - புதிய வெளிச்சங்கள்

தனியார் துறையில் இடஒதுக்கீடு தேவை என்ற முழக்கத்தை முன் வைத்து, தமிழ்நாட்டில் தந்தை பெரியார் திராவிடர் கழகம் சம்பூகன் சமூகநீதி பிரச்சார இயக்கத்தை நடத்தியது. தனியார் துறையில் இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையை பல கட்சிகள் முன் வைத்தாலும், மக்களிடையே அதை விளக்கி இயக்கம் நடத்தியது தந்தை பெரியார் திராவிடர் கழகம் தான். மத்தியில் அய்க்கிய முன்னணி ஆட்சியின் கொள்கைப் பிரகடனங்களில் ஒன்றாக தனியார் துறை இடஒதுக்கீடு இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே மகாராஷ்டிர மாநில அரசு, தனியார் துறைகளில் 51 சதவீத இடஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பித்துள்ள போதிலும், சில அமெரிக்க, லண்டன் நிறுவனங்கள், இதை அமுல்படுத்த மறுப்பது பற்றியும், ஏற்கனவே 'பெரியார் முழக்கம்' செய்தி வெளியிட்டது. இது தொடர்பாக மேலும் பல தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. 'தெகல்கா' வார ஏடு, இது பற்றி விரிவான சிறப்புக் கட்டுரை ஒன்றையும், பல்வேறு தகவல்களுடன் வெளியிட்டிருக்கிறது.

தனியார் துறையில் இடஒதுக்கீடு கொண்டு வரப்பட வேண்டும் என்பதில், மத்திய பெட்ரோலிய ரசாயனத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் மிகவும் உறுதியாக இருக்கிறார். பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலும் அவர் இதைக் கூறியிருக்கிறார். பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி, ம.பி. முன்னாள் முதல்வர் திக்விஜய்சிங், கருநாடக முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஆகியோரும், தனியார் துறையில் இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். திக்விஜய் சிங், ம.பி. முதல்வராக இருந்த போது, போபாலில் தலித் அறிஞர்களைக் கூட்டி விவாதித்து, போபால் பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். தனியார் துறைகளில், வேலை வாய்ப்புகள் மட்டுமல்லாது, விநியோக உரிமை, விற்பனை உரிமைகளிலும், தலித் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பது உட்பட 21 அம்ச கோரிக்கைகளை, அப்பிரகடனம் முன் வைத்தது. வேலை வாய்ப்புகள்கூட, அடி மட்டத்தில் மட்டும் இருக்கக் கூடாது. உயர்நிர்வாகத்திலும் இருக்க வேண்டும் என்று அது வலியுறுத்தியது.

**அரசு வெளிச் சந்தையில் வாங்கும் பொருள்களில் - கறுப்பர் உட்பட மைனாரிட்டிகள் நடத்தும் 5 சதவீத நிறுனங்களிடமிருந்து பொருள்களை வாங்க வேண்டும் என்பது அமெரிக்காவில் பின் பற்றப்படும் சட்டமாகும்.**

உதாரணமாக மாருதி கார் நிறுவனத்தின் வினியோக உரிமையிலும், உதிரிப் பாகங்களை விற்பனை செய்யும் உரிமையிலும், தேவையான பொருள்களை வாங்கும் நிறுவனங்களிலும் - தலித் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கீடு இருக்க வேண்டும்.

இந்தத் தனியார் துறை இடஒதுக்கீட்டுக்கு முன் மாதிரியாக அமெரிக்காவில் பின்பற்றப்படும் சட்டங்கள் தான் விளங்குகின்றன. தந்தை பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள 'தனியார் துறையில் இடஒதுக்கீடு ஏன்?' என்ற நூலில் - அமெரிக்காவில் இது தொடர்பாக அமுலில் இருக்கும் சட்டங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தனியார் துறை மற்றும் அரசுத் துறைகளில், வேலை வாய்ப்புகளில் பாகுபாடுகள் இல்லாமல் கண்காணிக்கவும், அமுல்படுத்தாத நிறுவனங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் அமெரிக்காவில் ஒரு அரசு அமைப்பு உள்ளது. அதன்பெயர் 'சம அளவில் வேலை வாய்ப்புகளை வழங்கும் ஆணையம்' (Equal Employment Opportunity Commission-EEOC).

அரசு வெளிச் சந்தையில் வாங்கும் பொருள்களில் - கறுப்பர் உட்பட மைனாரிட்டிகள் நடத்தும் 5 சதவீத நிறுனங்களிடமிருந்து பொருள்களை வாங்க வேண்டும் என்பது அமெரிக்காவில் பின்பற்றப்படும் சட்டமாகும். அதே போல அரசாங்கத்திடமிருந்து ஒப்பந்தம் பெறும் வேலைகளைச் செய்யும் காண்ட்ராக்டர்கள் - தங்களது வேலைகளை ஒப்படைக்கும் துணை காண்ட்ராக்டர்களில், குறைந்தது 5 சதவீதம் பேர் கருப்பர்கள் உட்பட மைனாரிட்டிகளாக இருக்க வேண்டும். அமெரிக்காவின் கார் உற்பத்தி நிறுவனங்களில் கருப்பர்களுக்கு சமமான வேலை வாய்ப்புகளை வழங்கியாக வேண்டும். மைனாரிட்டி சமூகத்தினர் நடத்தும் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து, உதிரி பாகங்களையும், உற்பத்திக்குத் தேவையான பொருட்களையும் கட்டாயமாக வாங்கியாக வேண்டும்.

அமெரிக்காவில் கருப்பர்கள் (ஆப்பிரிக்க அமெரிக்கர்கள்) 13 சதவீதம் பேர் இருக்கிறார்கள். தென் அமெரிக்க நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்த 'ஹிஸ்பெனிக்ஸ்' எனும் சமூகத்தினர் 11 சதவீதமும், அல்கசா பழங்குடியினர் 0.9 சதவீதமும், அமெரிக்க இந்தியர்கள் 0.9 சதவீதமும், ஆசியர்கள் 3.9 சதவீதமும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே மைனாரிட்டிகள் என்ற பிரிவின் கீழ் வருகிறார்கள். அமெரிக்காவில் பிரபல கார் தயாரிப்பு நிறுவனங்களான 'ஜெனரல் மோட்டார் போர்டு' நிறுவனங்கள், இந்த 'ஒதுக்கீடுகளை' அமெரிக்காவில் இதற்கான சட்டம் வருவதற்கு முன்பே அமுல்படுத்தத் தொடங்கிவிட்டன. ஆனால் இந்தியாவில் மாருதி, ஹோண்டா, பஜாஜ், எல்.எம்.எல்., மிட்சுபிஷி போன்ற பனியாக்கள் நிறுவனங்களில், வேலை வாய்ப்புகளிலோ, உதிரிப் பாகங்களை வாங்குவதிலோ இடஒதுக்கீடுகள் இல்லை. கீழ் மட்டத் தொழிலாளர்களாக, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்கள் இருப்பார்கள். நிர்வாக அதிகாரிகளாக உயர் மட்டத்தில் இருப்பவர்களில் பார்ப்பனர்கள் தான் அதிகம். ஆனால், விற்பனை என்று வரும் போது, பெரும்பான்மையினராக இருக்கும் பிற்படுத்தப்பட்டவர்கள் தலையில் தான் கட்டுகிறார்கள். இந்தியாவில் பெட்ரோலிய அமைச்சகத்தில் மட்டும் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை 'பங்க்' மற்றும் எரிவாயு வினியோகங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கிடு செய்யப்படுகிறது.

**'அமெரிக்க செய்திப் பத்திரிகைகள் ஆசிரியர் கழகம்' 1978-ல் கருப்பர்களை பத்திரிகையாளர்களாக்கும் நோக்கத்தோடு அவர்களுக்கு பயிற்சி மய்யத்தை உருவாக்கியது.**

இந்தியாவில் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகளில் பார்ப்பனர்கள் ஆதிக்கமே தலைவிரித்தாடுகிறது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் இருந்தாலும், உயர் அதிகாரப் பொறுப்புகளில் இருப்பவர்கள் பார்ப்பனர்கள் தான். இந்த ஊடகங்கள் பார்ப்பனியத்தையே பிரச்சாரம் செய்கின்றன. இதே போல், அமெரிக்காவில் தகவல் தொடர்பு சாதனங்களிலும், வெள்ளையர் ஆதிக்கம் தான் தலை விரித்தாடியது. இதைக் கட்டுப்படுத்த 'அமெரிக்க செய்திப் பத்திரிகைகள் ஆசிரியர் கழகம்' (American Society of Newspaper Editors) 1978-ல் கருப்பர்களை பத்திரிகையாளர்களாக்கும் நோக்கத்தோடு அவர்களுக்கு பயிற்சி மய்யத்தை உருவாக்கியது. இதழியல் துறையில் கருப்பர்களுக்கு பயிற்சிகள் தரப்பட்டு, நல்ல பத்திரிகையாளர்கள் உருவாக்கப்பட்டனர். இவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க, 'கண்காட்சிகள்' நடத்தப்பட்டன. பல கறுப்பர்கள் பத்திரிகைகளில் நுழைந்தார்கள். அமெரிக்காவின் மிகப் பெரும் பத்திரிகையான 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையின் தலைமைப் பொறுப்பிலே இருப்பவரே - ஒரு கறுப்பர் தான். இந்தியாவில் பத்திரிகை அலுவலகங்களில் 'தலித்' பத்திரிகையாளர்களைக் கண்டுபிடிப்பதே மிக மிக அபூர்வம்! திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிகளிலும்கூட அமெரிக்காவில் கருப்பர்களுக்கு வேலை வாய்ப்பு உரிமைகள் உண்டு. 1997-ல் அமெரிக்க எழுத்தாளர் கழகம் (Writers Guild of America) - இந்தத் துறைகளில் 80 சதவீதம் பேர் வெள்ளையர்களாக இருப்பதை மாற்றி அமைக்கத் திட்டமிட்டது. திட்டமிட்ட நடவடிக்கைகளால் 1998 நிலவரப்படி தொலைக் காட்சிகளிலும், திரைப்படங்களிலும் கருப்பர்கள் 66சதவீதம் பேர் வந்து விட்டனர். உலக நாடுகளைச் சுரண்டி அடிமைப்படுத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியம், உள்நாட்டில் மட்டும் மைனாரிட்டி பிரச்சினைகள் தலை தூக்கிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறது. ஆனால் இந்தியப் பார்ப்பனர்கள் தங்களது ஆதிக்கத்தை விட்டுத் தரமறுக்கிறார்கள்.

**(-'டெகல்கா' வெளியிட்டுள்ள கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது)**

(தொடரும்)

# அமெரிக்க உளவு நிறுவனத்திற்கு 'ரா' ரகசியங்கள்

மத்திய அரசின் மிக உயர்ந்த புலனாய்வுத் துறையான 'ரா' வெளிநாட்டில் உளவு பார்ப்பது முதற்கொண்டு வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்கு ஏற்படும் ஆபத்தை தடுப்பது வரை உள்ள பல முக்கியப் பணிகளில் ஈடுபடுகிறது.

இதன் இணைச் செயலாளராக இருந்தவர் ரவீந்திர சிங். இவர் இராணுவத்தில் மேஜராக இருந்தபோது சீக்கியர்களின் பொற்கோவிலில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவர் அதில் தீவிரமாகப் பணியாற்றினார்.

அதனால் இவர் மீது நல்ல நம்பிக்கை ஏற்பட்டது. அதற்கு சில மாதங்களுக்குப் பிறகு அமெரிக்க இராணுவ ரகசியம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தபோது, அடடா! உளவுத் துறைக்கு இவரைப் போன்ற கில்லாடிகளல்லவா வேண்டும்! என்று நினைத்து, இராணுவத்திலிருந்த அவரை உளவுத் துறைக்கு இழுத்து, உயர் பதவி கொடுத்தார்கள்.

ரவீந்திர சிங்கின் இந்தச் சாதனைகள் ஒரு ஏமாற்றுவேலை என்று 'ரா'வுக்கு இப்போது தான் புரிந்துள்ளது. அமெரிக்க இராணுவ ரகசியங்களை இவராக தோண்டியெடுத்துக் கொண்டு வரவில்லை. மாறாக அப்படிப்பட்ட ஒரு ஆவணத்தை அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ.வே. கொடுத்து, இந்திய அரசிடம் இவருக்கு நற்பெயரை ஏற்படுத்திக் கொடுத்தது. இவர் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு இரகசியங்களை சி.அய்.ஏ. திருடி வந்துள்ள தகவல் இப்போது இந்திய அரசாங்கத்தை அதிரச் செய்துள்ளது.

ரா - தலைமை அலுவலகத்தில் எப்பொழுதும் கடுமையான கெடுபிடி இருக்கும். ஆனால் இணைச் செயலாளர் அந்தஸ்துக்கு மேல் உள்ள அதிகாரிகள் சோதனையிடப்பட மாட்டார்கள். காரணம் இவர்கள் தேசத் துரோகிகளாக மாற மாட்டார்கள் என்ற அதீத நம்பிக்கை. இந்த அதீத நம்பிக்கையை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ரவீந்திர சிங், இந்தியாவின் இராணுவ இரகசியங்களை பிரதி எடுத்து அமெரிக்காவுக்கு விற்று வந்தார்.

இதை எப்படியோ மோப்பம் பிடித்த ரா - மற்றொரு மத்திய அரசின் உளவு நிறுவனமான ஐ.பி. மூலம் இவரை ஆதாரத்தோடு மடக்கிப் பிடித்து கைது செய்ய உத்தரவிட்டது. ரவீந்திரசிங்கை ஐ.பி.காரர்கள் சுற்றிச் சுற்றி கண்காணித்தனர். இவருடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டது. வீடு 24 மணி நேர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது. உளவுத் துறையின் உயர் அதிகாரியான ரவீந்திர சிங் இதை உணராமலா இருப்பார்! அவரும் சுதாரித்துக் கொண்டார்.

கடந்த ஏப்ரல் 30-ம் தேதி இவரைக் கைது செய்வதற்கு மத்திய அரசு உத்தரவிட்டது. அன்றைய தினம் சாதாரணமாக வீட்டில் நுழைவது போல் நுழைந்த ரவீந்திரசிங் கண் இமைக்கும் நேரத்தில் பின்புற சுவரை தாண்டிக் குதித்து, அங்கு தயாராக நிறத்தப்பட்டிருந்த காரில் மனைவியோடு பறந்துவிட்டார். நேபாளத்துக்கு அழைத்தச் செல்லப்பட்ட இவர் அங்கிருந்து அமெரிக்கா விசாவோடு அமெரிக்காவில் தஞ்சம் புகுந்து இப்போது சொகுசு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ரா - நிறுவனத்தின் இயக்குனர், பிரதமர், பாதுகாப்புச் செயலாளர் ஆகிய மூவர் மட்டுமே பார்க்கும் பல ஆவணங்கள் ரவீந்தர் சிங் மூலம் அமெரிக்காவுக்கு கடத்தப்பட்டுள்ளதாக இந்திய புலனாய்வு அமைப்புகள் அச்சம் தெரிவித்துள்ளன.

- 'இந்து' நாளேடு - உளவுத் துறை தொடர்பான பல்வேறு ரகசியங்களைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி எழுதி வருகிறது. ●

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/PMG(CCR)/244/03-05 WPP NO.547/03-05 - RNI.NO.TNTAM/2002/7776

## லல்லுவின் தனி முத்திரை

ரயில் துறை அமைச்சரானவுடன் லல்லு பிரசாத் - 'பிளாஸ்டிக்'கை ஒழித்துவிட்டு, மண் கலயத்தை அறிமுகப்படுத்தினார்; இதனால் மண்பாண்டக் கலைஞர்களுக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது. ரயிலில் வழங்கப்படும் படுக்கை விரிப்புகள் - இனி கதர்த்துணியில் தான் தயாராகும். ஆண்டுதோறும் பல கோடி ஊழலுக்கு வழி வகுக்கும் ரயில்வேயின் வீணாகும் இரும்புத் தளவாட ஏலத்தை ஒழித்துள்ளார் லல்லு. அவைகள் மீண்டும் ரயில்வே துறைக்கே பயன்படுத்தலாம் என்று முடிவெடுத்துவிட்டார்.

அடுத்து கோத்ரே ரயில் எரிப்புக்கு யார் காரணம் என்பது பற்றிய புதிய தகவல்கள் வரப் போகிறதாம்! லல்லு தனது தனி முத்திரைகளைப் பதிக்கத் தொடங்கி விட்டார்.

## ராணுவச் செலவுகள் - தேவைதானா?

உலக அளவில் ஆயுதங்களை இறக்குமதி செய்யும் பட்டியலில் இந்தியா 5வது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் இந்தியா ராணுவத்துக்காக செலவிட்ட தொகை ரூ.420 கோடி டாலர். ஒரு தனி நபருக்கு 4 டாலர் என்ற வகையில் - இந்தியா ராணுவத்துக்கு செலவிட்டுள்ளது. உலகில் எழுத்தறிவு பெறாத மக்களில் 45 சதவீதம் பேரும், போதுமான சத்துணவு கிடைக்காத உலகக் குழந்தைகளில் 50 சதவீதமும், இந்தியாவில் இருக்கிறார்கள்.


இந்தியாவில் வறுமையில் உழலுவோர் 30 கோடி. ஆனால் ராணுவச் செலவில் மட்டும் இந்தியா முன்வரிசையில் நிற்கத் துடிக்கிறது. பாகிஸ்தானும், இதேபோல் - ராணுவத்துக்காக இந்தியாவுடன் போட்டிப் போட்டுக் கொண்டு ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து, உக்ரைன், இத்தாலி, சீனா போன்ற நாடுகள்தான் ஆயுத விற்பனையில் முன்னணியில் நிற்கின்றன. ஆயுத வியாபாரத்தில் 50 சதவீதத்தைக் கைப்பற்றி முன்னணியில் நிற்கும் நாடு அமெரிக்கா, எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தான், நைஜிரியா, அங்கோலா போன்ற நாடுகளில் நடக்கும் உள் நாட்டுச் சண்டைகளால், இந்த ஆயுத வியாபார நாடுகளும், ஆயுத வியாபாரிகளும் தான் கொழுக்கின்றனர்.

## புஷ் முகத்திரையைக் கிழிக்கும் திரைப்படம்

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் முகத்திரையைக் கிழிக்கும் திரைப்படம் ஒன்றை உலகப் புகழ் பெற்ற இயக்குனர் மைக்கேல் மூர் தயாரித்துள்ளார். திரைப்படத்தின் பெயர் 'பாரன் ஹீட் 9/11'. அமெரிக்க அதிபர் புஷ் குடும்பத்தைக் கடுமையாக விமர்சிக்கும் இத்திரைப்படம் - உசாமா பின்லேடன், சவூதி அரசர் குடும்பங்களோடு புஷ் குடும்பரீதியாக உறவு வைத்துள்ளார் என்று கூறுகிறது. இத்திரைப்படத்தை வெளியிடாமல் தடுக்க, அமெரிக்கா தீவிரமாக முயற்சிக்கிறது. படத்தைத் தயாரித்த நிறுவனமே, அதை வெளியிட இப்போது மறுத்து வருகிறதாம்.

# பெண்களை இழிவு செய்யும் பழமொழிகள் (3)

பூ. மணிமாறன்



பெண்ணை அழகாக உருவகப்படுத்துவதால் பெண்ணை ஒரு அழகுப் பொருளாக, கண்கவரும் காட்சிப் பொருளைப் பார்க்கக் கூடிய எண்ணம் எல்லோரிலும் முளை விடுகிறது. இந்த எண்ணம் தான் இன்றைய சூழலில் பெண்ணைப் பயன்படுத்தி வெற்றி பெற்ற பல கவர்ச்சி விளம்பரங்களுக்கும் திரைப் படங்களுக்கும் வித்திட்டது என்று கூறலாம்.

பெண்ணை அழகுப் பொருள் என்று பார்ப்பதில் இன்னொரு ஆபத்தும் உள்ளது. அழகுப் பொருள் என்றால் அதை நாம் பயன்படுத்தலாம், மிதிக்கலாம், தூக்கி எறியலாம். பெண் அழகுள்ளவள் என்றால் அவளைப் பயன்படுத்த முடியாது. அவள் மனுசி என்பதால் அன்பு செய்யப்பட வேண்டியவள், மதிக்கப்பட வேண்டியவள் என்பது அவசியம்.

பெண்: கற்புக்கலையாத கன்னி : கற்பு என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது. ஆண், பெண் இருவரில் யார் கற்பை இழந்தாலும் அவனோ, அவளோ கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும். ஆனால் பழமொழிகளைக் கூர்ந்து கவனித்தால் ஏதோ பெண் மட்டும்தான் கற்புக் கலையாத கன்னியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆணுக்கு கற்பு போனாலும் பரவாயில்லை என்பது போல் அதைப் பற்றி எதுவும் பேசாத நிலை. மேலும், பெண் கற்புக்கரசியாக இருப்பதென்பது பெண்ணுக்கு சூட்டுகிற மகுடம், சிகரம் என்று வர்ணிக்கிறது. இந்தப் பொய்ப் புகழ்ச்சியில் பெண் மயங்கி விழுந்து விடுகிறாள். மனைவிக்கு நிகராக, கணவனும் கற்புள்ளவனாக வாழ வேண்டுமென்று பழமொழிகள் கூறவில்லையே ஏன்?

(உம்.) "கன்னியின் கற்பு கண்ணாடி போன்றது, உடைந்தால் உதவாது"; "கற்புடைய பெண் அமுதம் போன்றவள்"; "கற்பில்லாத அழகு வாசனையில்லா மலர்"; "கன்னிப் பெண்ணைப் புலிபோல் காத்துவர வேண்டும்"; "கன்னி எதையும் வாங்கவும் கூடாது, கொடுக்கவும் கூடாது"; "கற்பில்லாத வளைக் கழுதைகூட மதியாது".

இப்படிப் பெண்ணைக் கற்புக் கன்னியாக வர்ணிக்கும் பழமொழிகள், ஆணின் கற்பைப் பற்றி பேசாதது, ஆண் கற்பு இழந்தால் தான் என்ன? என்பதாலா? அல்லது ஆண் கற்புக் கரசனாக இருக்க முடியாது என்பதாலா? இதன் அடிப்படையில்தான், பெண் தவறிவிட்ட செய்தி கேட்டதும், சமூகம் அவளுக்கு அவதூறு இழைக்கிறது. ஆண் தவறி விட்டால் அதை மூடி மறைக்கப் பார்க்கிறது.

பெண்: இரகசியம் காக்காதவள் : பெண்களிடம் எந்த ஒரு இரகசியத்தையும் சொல்லி வைக்க முடியாது. ஏன் என்றால் அவளால் இரகசியத்தைக் காக்க முடியாது என்ற கருத்தைப் பரப்புவது தான் பரிதாபம். ஆண் பலமுறை இரகசியத்தை வெளியே சொல்வதால் பிரச்சினை வந்தாலும் அதை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. அப்படி அவன் இரகசியத்தை வெளியே சொல்லும் போது, அவனுடைய செயல் பல காரணங்களினால் நியாயப்படுத்தப் படும். ஆனால், பெண்ணொருத்தி ஒரு சாதாரண விசயத்தை தெரிந்தோ, தெரியாமலோ வெளியே சொல்லி விட்டால் ஏதோ கொலைக் குற்றம் போல பேசப்படும்.

(உம்) "பெண்ணுக்குத் தெரிந்த இரகசியம் ஊரெல்லாம் பரவி அம்பலம்"; "அத்தையிடம் விசயம் சொன்னால் அகிலமெல்லாம் பரவும்"; "வாய் மதத்தால் வாழ்க்கை இழந்தாள்".


பெண் : நேர்மையற்றவள் : நேர்மை என்பது ஆண் பெண் இருவருக்கும் பொதுவானது. ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் உள்ள குடும்பத்தில் பெண் பிள்ளையை நடத்துவதில் பாரபட்சம் இருப்பதைப் பார்க்கலாம். பையன் ஏதாவது பொய் சொல்லி விட்டு வெளியே சென்று சுதந்திரமாகச் சுற்றலாம். ஆனால், பெண் எவ்வளவு கஷ்டமானாலும் வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும். என்றாவது ஒரு நாள் பெண்ணொருத்தி வெளியே சென்று விட்டு தாமதமாக வருவதற்கு நியாயமான காரணம் இருந்தாலும் அவள் பொய் சொல்கிறாள் என்றே கருதப் படும். அலுவலகத்தில் பணிபுரியும் கணவன் மனைவியிடமும் இதே பிரச்சினை. கணவன் இரவில் எப்போது வேண்டுமானாலும் வரலாம். ஆனால் மனைவி குறிப்பிட்ட நேரத்தில் வரவில்லையென்றால், அவள் மீது சந்தேகம். பெண்ணின் நேர்மையற்ற தனம் பலவாறு வெளிப்படுத்தப்படுகிறது.

(உம்.) "அழகிய மனைவியை உடையவனுக்கு இரண்டு கண்களுக்கு மேல் தேவை"; "பேயை நம்பினாலும் பெண்ணை நம்பாதே"; "ஐந்து பெண் குழந்தைகள் உள்ள வீட்டிற்கு திருடன் தேவையில்லை"; "பொய் சொல்லும் பந்தயத்தில் பெண்களுக்குத்தான் முதல் பரிசு"; "செவ்விதழ்களில் தேனும் உள்ளத்தில் நஞ்சும் பெண்களுக்கு இருக்கும்".

பெண்: அபச குணமுள்ளவள்: இல்லற வாழ்வில், ஆணின் துணையோடு ஒரு குழந்தையை ஈன்றெடுத்துத் தருவதே ஒரு பெண்தான். ஆனால் அது பெண்குழந்தை என்றால் ஒரு அபத்தம், அமங்கலம் என்று பார்க்கும் சமூகத்தின் பார்வையை எங்ஙனம் ஏற்பது? ஆண் பிள்ளையைப் போல் பெண் பிள்ளையையும் மனித குலத்தின் ஒரு "உயிர்" என்பது மறக்கடிக்கப்படுகிறது. முதல் பிள்ளை ஆண் பிள்ளை என்றால் முகம் மலர்வதையும், பெண் பிள்ளை என்றால் முகம் சுருங்குவதையும், வேண்டா வெறுப்பையும் பார்க்கிறோம். குழந்தைகளின் எண்ணிக்கை வரிசையில் இத்தனாவது குழந்தை, பெண் என்றால் அது வீட்டிற்கு கேடு என்பதும் பழமொழிகளில் சொல்லப் படுகிறது.

(உம்) "ஆறாவது பெண் பிறந்தால் தரித்திரம்"; "எட்டாவது பெண் எட்டிப் பார்த்த சுவர் குட்டிச் சுவர்"; "ஆறாவது ஆண் பிறந்தால் தரித்திரம்" என்று பழமொழி இல்லையே ஏன்? "மாலையுடன் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது"; "பெண் மனிதனின் குழப்பம்".

இது போன்ற பழமொழிகள் பெண்ணின் மீது சாபம் இடுகின்றன. பெண்ணை ஒரு வேண்டாப் பொருளாகத் தள்ளுகிறது. பெண்ணை வளர்த்து அவளுடைய திருமணத்திற்கு வரதட்சணை கொடுக்க முடியவில்லை என்பது சிசுக் கொலைக்குக் காரணம் என்றாலும் இந்தப் பழமொழிகள் தான் மூலம் என்பதில் ஐயமில்லை. (தொடரும்)


**கழகத்தின் புதிய வெளியீடு**

**சங் பரிவாரின் சதி வரலாறு**

பக்கம் : 230 விலை ரூ.60/-

ஏராளமான தகவல்களைக் கொண்ட சங்பரிவாரங்களின் முத்திரையைக் கிழிக்கும் நூல்.

கிடைக்குமிடம்: பெரியார் படிப்பகம், கோவை, மேட்டூர்.



"புரட்சிப் பெரியார் முழக்கம்"

ஆண்டுக்கட்டணம் ரூ.150/-

தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.

தொலைபேசி: 2451 2857, 2847 4830

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 24th June 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.